நூற்றெட்டுத் திருப்பதிப்ரபாவ
கீர்த்தனைகள்

ஸ்ரீ கந்தஸ்வாமி நாவலர்

DIGITIZED

T.D.R.C. 2035.
R.R. No. 100-2-1884

O22:38,
M84

114994

ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

மயர்வறமதிநலமருளப்பெற்ற

ஆழ்வார்கள்மங்களாசாஸநம்செய்தருளிய

# நூற்றெட்டுத்திருப்பதிப்ரபாவ கீர்த்தனைகள்.

இவை,

கோமளபுரம் - குலசேகராழ்வார் சபை காரியதரிசியாகிய

கமிசேரியட்மானேஜர் - வழிக்கரை

ஸ்ரீமாந் - கிருஷ்ணஸ்வாமிநாயகரவர்களும்,

ஷை சபையைச்சார்ந்த

தே. நாடு - பச்சைவண்ணப்பெருமாள்நாயகரவர்களும்,

பரஸமயக்கோளரி

ஸ்ரீமாந் - முடிச்சூர் - அப்பார்யபிமாநபூதரும்

ஸ்ரீமத் வரவரமுநீந்த்ரனை வாழ்த்தும் வைபவருமான

திரு. அப்பாதுரைபிள்ளையவர்களும்

கேட்டுக்கொண்டபடி

வேலூர் - அருகந்தம்பூண்டி

கிருஷ்ணஸ்வாமிதாஸரவர்களால்

பாடப்பட்டு,

சென்னை: ஸர்வகலாசாலைத் தமிழ்த்தலைமைப்புலவர்

கோ - இராஜகோபாலபிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை:

ஆதிகலாநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

1884.

Copy-Right Reserved.

இதன்விலை அணா-௩.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# விளம்பரம்.

இந்தக்கீர்த்தனைகள் வேண்டுமேவர்கள், சென்னை: கோமளபுரம் - நாராயணநாயக்கர்வீதி - ௬ - வது இலக்கமுள்ள மாளிகையில் குலசேகராழ்வார்சபையின் புருஷகாரியாகும் ஆதிமூலநாயகரிடத்திலும், திருவல்லிக்கேணி வேங்கடாசலநாயகர் தெரு - ௬ - வது என்னுள்ள மாளிகையில் பெரியாழ்வார் சபையின் புருஷகாரியாகும் பார்த்தசாரதிநாயகரிடத்திலும், வரலாஜாபேட்டை மரக்கடை ஸ்ரீநிவாசநாயகரிடத்திலும், வேலூர் - அருகந்தம் பூண்டி - புறக்குடியம்மாள் சத்திரத்திற்குப்பின்வீட்டில் அடியேனிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம். நாடதேசஸ்தர் தபால்செலவுடனனுப்பவேண்டும்.

கிருஷ்ணஸ்வாமிதாஸன்.

114994
20356
784.056

ஸ்ரீ



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி - ஸ்வாமி

## வானமாமலை - ராமாநுஜஜீயர்

இக்கீர்த்தனைகளைக் கடாக்ஷித்து

தமது முத்ரையுடன் ப்ரஸாதித்தருளின

# ஸ்ரீமுகத்தின் விவரம்.

ஸ்ரீசைல வம்ஸ ஸம்பவ பரிவ்ராஜகாசார்ய

வேதாந்த ப்ரதிஷ்டாபநாசார்ய யெழுந்தருளியிருக்கும்

வானமாமலை - ராமாநுஜஜீயர்.

[illegible] யிருக்கிற நாயவேலூர் - அருகந்தம்பூண்டி - க்ருஷ்ணஸ்வாமிதாஸருக்கு [illegible]. ஆழ்வாராதிகளால் மங்களாஸாஸநஞ் செய்யப்பட்ட கோயில் முதலான நூற்றெட்டு திவ்யதேசத் தெம்பெருமான்கள் விஷயமாக நீர் செய்திருக்கிற கீர்த்தனைகளை நாம் கேட்டு ஸந்தோஷித்தோம்.

விக்ருதி நாம ஸம்வத்ஸர
புரட்டாசி மீ ௨௯ உ.

ஸ்ரீராமாநுஜன்
கையெழுத்து.

மஹாஸமுத்ரம்

திருமலைநல்லான்சக்ரவர்த்தி

## ஸ்ரீமாந் - அஹோபிலாசார்யரவர்களருளியது

శ్లోకము.

అష్టోత్తరశతందివ్య దేశద్రావిడకీర్తనమ్।
శ్రీకృష్ణస్వామిదాసేన ప్రోక్తంస్పష్టంసుఖప్రదమ్॥

# சாற்றுக்கவிகள்.

வேலூர் சைதாபேட்டையிலிருக்கும்

ஸம்ஸ்க்ருதாந்த்ரமுன்ஷியும், வகீலுமாகும்

## ஸாமிசாஸ்த்ரியவர்களியற்றியவை.

శ్లోకములు.

శ్రీమద్వేలపురాలయే సకవినా భక్తేన సీతాపతేః
కృష్ణస్వామిసమాభిధానసుధియా సంకీర్తితం కీర్తనం।
శ్రీవిష్ణోరవతారవైభవయుతం శ్రీసామిశాస్త్రీ వరం
హ్యాంధ్రద్రావిడభాషయా వివేచితం కృత్వాతిమోదం యయౌ॥౧॥
అయంకవి స్త్యాగరాజ ఆహోస్విదరుణాచలః।
ఆన్ధ్రద్రావిడభాషాభ్యాం లీలయా కురుతే కృతిం॥౨॥

சென்னை: சர்வகலாசாலைத் தமிழ்த்தலைமைப்புலவர்

ஸ்ரீமாந்

## கோ - இராசகோபாலபிள்ளையவர்களியற்றிய

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

காத்துறை வேலூர்க் கடிநக ரதனிற் கதழெரிக் கடவுண்மா மரபோன்
பாத்துறை தமிழ்தேர் பனிணிதன் கிருஷ்ண சாமியாம் பாவலர் பெருமான்
வித்துறை யயனும் விரிசடைச் சிவனும் வீழ்ந்தரிச் சதும்பராய்ப் போற்று
சாத்துறை சீரங் காதியார் தலமே னவிற்றினன் கீர்த்தனை நன்கே.

ஸ்ரீமாந்

வித்வான் - காஞ்சிபுரம்

## இராமஸ்வாமிநாயுடு அவர்களியற்றிய.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பானூருந்தேமொழித்தன்பங்கனுமற்றயனுமென்றும்பணிந்துவாழ்த்துஞ்
சேனூரும்விழித்திருவின்கொழுநனமரிசைம்பான்செறியிரண்டு
கானூரும்பதிப்பெருமைகீர்த்தனையாநவின்றடைந்தானவைதீர்பேறெம்
வேலூர்வாழ்புவந்தக்ருஷ்ணசாமிநாவலர்பெருமான்வியன்ஞாலத்தே.

ஷை. பிள்ளையவர்கள்மாணாக்கர்

## மயிலை - சண்முககவிராயரவர்களால்

செய்யப்பட்ட

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பார்த்தனைக்கூயருமறையின்செம்பொருளைக்கீதையெனப்பரிந்துநல்குந்
தீர்த்தனைத்தென்குருகூரெம்பிரான்முதல்திவ்வியப்புலவர்சொற்ற
கீர்த்தனையிக்கோவிற்குதிருப்பதிநூற்றெட்டினையாருக்தெரிந்திட்டோதக்
கீர்த்தனையாக்கிருட்டினசாமிப்புலவனின்றுன்றுகிளத்தினனால்.



உறையூர்

## முத்துவீரவுபாத்தியாயரியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முரலளியம்போருகமென்னறும்பொகுட்டின்மேய
முதுமறைநான்முகக்கடவுளேமுளைத்துப்போந்து
கருதகிருட்டினசாமிதாசனெனுமொருபேர்
கவித்துவிசும்பமரரின்பக்கடற்படிந்துகளிப்ப
பரவியநீருலகுயிர்கள்பிறப்பறநூற்றெட்டுப்
பதியிசைக்கீர்த்தனந்தமிழாற்பாடித்தந்தனனன்
மருமலர்ப்பைந்தருக்கிறைவன்மௌலிமுடிதுளக்க
மலயமெழுந்தருள்கலயமாதவனின்புறவே.

உறையூர்-முத்துவீரவுபாத்தியாயர் மாணாக்கருளொருவராகிய

## நல்லுச்சாமிபிள்ளை அவர்களியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குடவளையினங்கடருமணிக்குழாங்கள்கொழுநிலவெறிக்குநீர்கன்னி
படுவணிறைந்துவிளங்கியவேலூர்ப்பதிக்குமன்னவன்றிராவிடமாங்
கடல்கடந்தவன்வேதாகமக்கலையின்கரைநிலைகண்டவனெழுநாக்
குடிகுலவளையருந்கவிராயகுஞ்சரம்விதிப்பொடுவிலக்கும். (க)

ஆற்றுமெய்ஞ்ஞானதீபகமலைகீரகனுலகெடுத்துவாய்ப்பெய்த
தோற்றிடாதுதரத்தொடுக்கியாதரிக்குந்தோன்றலாரடிமைக்குமடிமை
கோற்றொடிமடவார்மயல்வலையறுத்தகுணகரம்விற்பனநடாகம்
மாற்றருமிருமைப்பயனுமோர்பிறப்பில்முவறப்பெற்றமாதரியம். (உ)

தவலருஞானக்கிருட்டினசாமிதாசனென்றொருபெயர்தரித்த
புவனநாயகநீரகனுலகெடுத்துப்புசித்தமரலெம்பெருமாறு
ரயிர்திருப்பதிநூற்றெட்டுமாலிசைக்கீர்த்தனமறைந்தலனரவிறைவன்
கவின்முடிதுளக்கவானவர்கோமான்களிப்பொடுவியப்புறமாதோ. (ங)

இஃது

வாலாஜாபேட்டை

சர்வகலாசாலைத்தமிழ்த்தலைமைப்புலவர்

## இராமாநுசநாயகரவர்களியற்றிய

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மதிதவழ்குடுமிமாடமாளிகைகள்மல்கியபெருவளநிறைந்த
மலறயவர்மன்னர்வைசியசூத்திரர்கள்வாழ்ந்திடுவேலைமாநகரில்
இதமுறுமருகந்தம்பூண்டிவாழெழிலுறுசம்புவின்குலத்தோன்
இணையிலாத்தருவுசாணுறுகாத்தானெம்மனோர்புகழ்பெருமாள்மால்
சதமுறமேன்றுசெய்தவமெல்லாந்தரணியிற்றிரண்டுருவானோன்
தகைகொள்முத்தமிழ்தேர்கவிவலோர்வியக்குந்தகுகிருஷ்ணசாமிநாவலவ
பதிகளவோர்க்குப்பாகதியருளும்பரமன்வாழ்தலனெலாம்விழைந்து [வன்
பைந்தமிழாலேகீர்த்தனையாகப்பாடினன்மிக்கமாதுறவே.

## சென்னைப்புதுப்பேட்டைத்தமிழ்த்தலைமைப்புலவர்
## அப்பாசாமிநாயகரவர்களியற்றிய

கழிநெடிலாசிரியவிருத்தம்.

இருடருமாஞாலத்துக்கோல்விகாவலன்குலசேகரனெம்மான்றன்
பரவருஞ்சீர்க்குலத்துதித்தப்பரந்தாமன்றலந்தொறுங்கீர்த்தனம்பகர்ந்தா
வரகவிகிருட்டினசாமிவள்ளலோனதன்பொருவில்வனத்தைநோக்கி [ன்
உரகனைகத்தியனுமாதெழிற்பிலம்வெற்புனாவிலொளித்திட்டாரால்.

---

பரஸமயக்கோளரியும் ஸ்வஜாலகாலாக்கியுமாகும்
ஸ்ரீமாந்
ஸங்ககிரி - புரமு

## குருஸ்வாமிநாயுடு அவர்களியற்றிய
# சிறப்புப்பாயிரம்.

மலர்மகளுறைசெயு மாண்புமிக்கிதென
இலகுயிர்க்கொருமுத லிறையெனக்கதுவி
காத்தளித்தழிக்குங் கருணையங்கடவு
ளீத்தத்தின்பின் னீள்பிரகிருதியிற்
சிறகறப்பக்கிக டேர்தயாதபோ
ஓதுபிகந்தலவா யுயர்வேற்றுழ்ந்து
வாடக்கண்டுயிர் வாட்டமதெய்தி
ஈடுமெடுப்பு மிலதமகருணையாற்
கரசாணுநிகட் கலசிடுரம்பையைச்
சரசமதாகத் தந்தருண்மிக்கா
ளிலகுநல்லொளிகரந் திருளிகழ்பான்மைபோன்
மனவிருளிரிய மாண்டமறைநூன்
மனமுவந்திந்துமு வகைகொளாத்தன்மையான்.
வியூகங்கொண்டும் வியாபித்துநின்றுங்
காரியம்பெறுவகை கருதினனுடுப்
பாரிலிலகுயிர்ப் பகுதிகளொன்ற
விராமன்கிருஷ்ண னெழினரசிங்கன்
றாரதலமூவடி யளந்தவாமன
னின்னனகிரீஇய யேமமாருருக்கள்
பன்னலங்கதூஉம் பாலதாக்கொண்டு
இருசான்கறைஞ யீரருவிர
மருவியகண்களார் வைப்புபுத்தேளிர்
பற்றிசைநின்று பராவுற்செய்ய
மற்றெவராலும் வழங்கொணாவிந்தைக



ளிழைத்துந்தேவ ரிருடியர்நரர்க
ளுழறருதிங்குக ளொழிப்பானுவந்து
மட்டிற்செருக்கமர் மாயாவிகளாந்
துட்டவரக்க ரசுரரைத்தொலைத்துந்
தன்னையெவருந் தனிமுதற்றுணையென
உன்னவொற்றிலரா யோய்விலசுழற்கா
துலர்சருகதுபோ னலைப்பின்மறலிபா
துலப்புகளகந்த மோம்பப்பெற்று
இறப்பினும்பிறப்பினு மெஞ்ஞான்றுநெகிழ்த்
தறநெறிமிகத்தூறந் தாடலெய்தாக்
கண்டுயிர்க்குவுங் காசொழியாக்கங்
கண்டியூர்மெய்யம் கச்சிக்கரம்பனூர்
திருத்தெற்றியம்பலந் திருக்கடன்மல்லை
திருவல்லிக்கேணிச் சிங்கவேள்குன்றம்
போற்றும்வண்சேர் புலியூர்முதலா
நூற்றெண்டிருப்பதி நுதலியருச்சை
பராய்ப்போற்றுநரிடர் பாறக்கைத்து
கிராமயராய்நேர் நிறையறுநாட்டி
லயர்வறுமமரோ டமர்ந்தினிதிருப்ப
வுயர்த்துவான்றிருவுள மிரங்கியொன்றிடு
காட்சிதேர்கீர்த்திகள் கண்டுகீர்த்தனங்களா
மாட்சிமையாளர் வழங்கிவழிபட்
டெய்துபோதகவென் றொண்டமிழ்வலவன்
பைந்துழாய்மாலையான் பத்திமையாளன்
பன்னருஞ்சிறப்பமர் பதுமைமாதேவிபாற்
சொன்னவந்தாதியான் சொன்னயந்தேர்ந்தோன்
அருந்தமிழ்க்கலைவலோ னுதிமூலப்பேர்
பெருந்தகைதனக்கோர் பீடுடைக்கண்மணான்
சேரலர்கோன்குல சேகரப்பெருமாள்
சோழல்கோன்குலச் சேயனனிதிகழ்
சிரீவரமங்கைச் செல்வந்தோய்ந்து
மரீஇயமுக்கோற் பண்ணவன்வழங்கு
மிலச்சினைச்சிடு மெழிலிணைப்புயத்தான்
கல்ச்சிலைக்குவு கடைச்சிமார்பூசனை
சமங்கொண்டுநூற்றுஞ் சகந்தருசெய்யா
ளமர்வேலூர்வா ழருங்கலைவிநோதன்
பெரியவைப்பேணும் பெற்றிகொளுசீர்மைக்
குரியசால்பின னொண்டமிழ்முகிலனுன்
மருட்சிகளகற்று மாண்புடைக்
கிருஷ்ணசாமிதாசன் கிளத்தினன்மாதோ.

ஸ்ரீ



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

## ஆசாரியன் துதி.

நாட்டைராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

ஆசார்யனேசரணம் - ஸ்ரீமதஸ்ம - தாசார்யனேசரணம்.

தேசானுசாரிகட்கு      திவ்யஞானமளித்து
தேஜானுபவங்களின்      திடம்பெறச்செய்திடும் (ஆசா)

பூர்வாசாரியர்க்கும்      புநிதஆழ்வாராதியர்க்கும்
ஆர்வமோடஞ்சலித்தேன்      கிருஷ்ணசாமிதாசனேயானாய் (ஆசா)

இந்துஸ்தானிகாபிராகம் மத்யஆதிதாளம்.

ஜாவளி.

ராமாநுசஜீயராசார்யசரணங்      காணுமல்சகியேனே (மனமே)

க்ஷேமந்தரவழைத்தாரே      நாமத்வயந்தந்தாரே
தாமசமில்சரமாதிகாரராய்      சரமசுலோகந்தந்தாரே (மனமே)

அநந்தாவதாரரோ      கனந்தருகேயரோ
திரந்திராவிடவேதமதின்கருத்தைத்      திடம்பெறவளித்தாரே (மனமே)

சிரீவரமங்கைவான      மாமலேஜீயராய்
திவ்யஞானவைணவசித்தாந்தந்      தேசந்தோறும்பரவச்செய்தாரே (மன)

நேமமாய்துவாதச      நாமநேமஞ்செய்து
ராமாநுசகிருஷ்ணசாமிதாசனே      ரக்ஷித்துமனமகிழ்ந்தாரே (மனமே)



## ஸ்ரீ மணவாளமாமுநிகள்.

இந்துஸ்தானிகாபிராகம் மிசிரதாளம்.

ஜாவளி.

மணவாளமாமுநிகள்      மணவாளரவிந்தபதம்
குணவாளரறிவர்நீயுங்      துதிப்புடன்றொழுமனதே (மண)

அசடரைக்கூடி      யலைகிறாய்சடனாய்
வசையுனக்கேதென்று      வகையறிவாய்மனதே (மண)

தினமுமீனர்களுடன்      திரிந்தலைகிறாய்நீயும்
கனமிதிலென்கண்டாய்      கழறுவாய்நீமனதே (மண)

தாசன்கிருஷ்ணசாமி      நேசமாய்ச்சொல்லுவதை
மோசம்போகாமற்கேட்டு      முழுதுந்தாமனதே (மண)

அபரூபராகம் ரூபகதாளம்.

பல்லவி.

மணவாளமாமுநியே - என்மனதிலிருந் - தருள்செய்குணநிதியே.

அநுபல்லவி.

மணவாளமாமுநியே      க்ஷமித்தேனையாளாயுன்
மகிமையறியாதிருந்தே      னடிநாளாய் (மண)

சரணங்கள்.

சேதனர்களுக்கிரங்கி      யாட்படுத்தி - நீ
திவ்யஞானமளித்தாய்      ரோந்திருந்தி (மண)

உன்பதசம்பந்திகளை      பதமென்றுந்துதிப்பேன்
உணர்ந்தறியாத      சடர்களையான்[illegible] (மண)

தினரம்போருக      மலர்த்தாளை - யினி
கிருஷ்ணசாமிதாச      னையாளாய் (மண)



ஸ்ரீமதுடையவர்.

இந்துஸ்தானிராகம் அடதாளம்.

பல்லவி.

எம்பெருமானார் திருவடிகளேசரணம்.

அநுபல்லவி.

திருவடிகளேசரணம் பொன்னடிகளேசரணம் (எம்)

சரணங்கள்.

எம்பெருமானார்திருவடிகளேசரணம் என்சிரசுக்காபரணம்
ஆதிக்கபவஹரணம் நடிக்காதந்தக்கரணம்
சொலிக்குஞ்சூர்யகிரணம் பதங்கிடைக்கத்தருணம் (எம்)

எம்பெருமானார்திருமந்திரமேசுந்தரம் காதினிற்கேட்கும்மந்திரம்
பவமறுக்குமெந்திரம் புவனபோகாந்தரம்
கருதவெகுதந்திரம் அடுத்தபேர்சுதந்தரம் (எம்)

எம்பெருமானார்ப்ரபந்தமேப்ரபந்தம் படிக்கபவபந்தம்
சொல்லாமலோமெந்தம் நிலைக்குமோநிர்ப்பந்தம்
நின்மலபேரானந்தம் தருமேபதஞ்சொந்தம் (எம்)

எம்பெருமானாருளைமிகநாடி யவருடனேகூடி
ப்ரபஞ்சவாழ்வைச்சாடி பஜித்தபேர்கள்கோடி.
கிருஷ்ணசாமிதாசன்றேடி துதித்தேனேகொண்டாடி (எம்)



நம்மாழ்வார்.

நாட்டைராகம் சாபுதாளம்.

பல்லவி.

சடகோபாசரணம் பவவிருள் கெடநீபாசரணம்

அநுபல்லவி.

தடமதிற்குருகூர் தனிலனைவர்க்குந்தரா
விடவேதமதைமுன் விளங்கவருட்புரிந்த (சட)
கோரிவந்துகோல்கிலே குலையாதநிகரித்த
காரிமாறன்செய்தவக் காளையாயவதரித்த (சட)
திந்திரிணிநிழலமர்ந்த திவ்யமங்களதேவா
வந்தனங்கைக்கொண்டுவாக் களித்தெந்தனைக்காவா (சட)
தேஜூஜீவகோடிகட்குத் திவ்யஞானமளித்தாய்
தாசன்கிருஷ்ணசாமிக்குத்தற் சாம்ப்ரதாயமளிப்பாய் (சட).

சஹானாராகம் ஆதிதாளம்.

பல்லவி.

கோபனைப்பணியாமானிடரே சடலமெடுத்தென்பலனேனிடரே.

சரணங்கள்.

குடவளையின்மணி கொழிக்கும்வயல்குருகூர்
தடவிருக்கத்திந்திரிணி தனிநிழலமர்ந்தருள் (சட)
சடாரியைத்துதித்தால் சமன்றமனைவெல்லுவீர்
பிடாரியைத்துதித்தால் பெருவதென்சொல்லுவீர் (சட)
தாசன்கிருஷ்ணசாமிவார்த்தை தாமதமிலாமற்கேளும்
மோசமிலைகாரிசுதன் றனைவழுத்தியேமீளும் (சட)



## சூடிக்கொடுத்தநாய்ச்சியார்.

ஸௌராஷ்டிரராகம் ஆதிதாளம்.

பல்லவி.

ஆண்டாள்திருவடிகளேசரணம் நம்மை

அனுபல்லவி.

ஆண்டாள்திருவடிகளே சரணமென்
றனுதினந்துதிப்பவர்க் கேசரணம் (ஆண்)

சரணங்கள்.

தூண்டாமணிவிளக் காதியசோதி
சொலப்போகுமோ கங்கைசுகந்தருநீதி
வேண்டாம்நமக்கு முக்குறும்பாதி
விட்டெறிப்பது மிகவும்ப்ரக்யாதி (ஆண்)

சூடிக்கொடுத்தாள் சுந்தரபதமே
நாடிப்பணியவும் நமக்கிதுசதமே
பாடிடக்கேட்கவும் படிக்கவுமிதமே
பவபந்தம்பறந் தோடிமெதமே (ஆண்)

தாசன்கிருஷ்ணசாமிக்குத் தயைசெய்பவளே
தோசகுணங்களின் றெட்டாதப்பவளே
தேசசெனங்களையுந் தெளியவைப்பவளே
தேவாரயற்குப்பூவை முடித்துத்தந்தவளே (ஆண்)



## சேனைபதியார்.

நேரிசைவெண்பா.

திருமருவு மார்பன் திருவரங்கத் தெம்மா
னுருமருவு நாடுகளை யோதப்—பெருமனதாய்
வந்தான்சங் காழிகதை வாள்விலொடு சேனையர்கோன்
செந்தா மரையடிகள் செப்பு.

## திருவடிகள்.

இதுவுமது.

சீர்பரவுந் திவ்யத் திருப்பதிநூற் றெட்டின்மேற்
பார்பரவக் கீர்த்தனைகள் பாடுதற்குப்—பேர்பரவக்
காக்குங் கருடனுடன் கேண்கவிப்ப மாருதியே
வாக்களித்து முன்னடக்க வா.

## அடக்கம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆழ்வார்கள் பன்னிருவர் பாதம்போற்றி
யவருண்ட வமுதத்தின் சேடந்தன்னை
வாழ்வாக யானுண்டு வருத்தந்தீர
வந்தளிப்ப தென்றெண்ணித் துணிவுட்கொண்டு
யாழான வினையொருவிக் கீர்த்தனங்கள்
பகர்ந்தனனெம் பரவாசு தேவன்மீதே
தாழ்வாக வெண்ணுவரோ தக்கோர்மிக்கோர்
தள்ளுவரோ வெள்ளுவரோ சால்புகண்டே.

தன்யாசிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

அவையடக்கஞ்சொல்லவோ ஹரிராமநாமமே
சுவையமிர்தமீ தல்லவோ

அனுபல்லவி.

சுவையாய்லட்சண காவியமுணர்ந்தே
ருயினுமெவனா வெல்லவோ (அவை)

சரணங்கள்.

பிழையிருந்தாலும் பெருமாள்விஷயம்
பிழைசொல்லார் பெரியோரே
தழையெதிப்ராச லக்ஷணமுளதலதேனுந்
தப்பிதக்குறி யாரோ (அவை)

நாராயணனை நாராயணனென்றே
பாராயணஞ் செய்வார்
நாராவெனுமசா மீளனைக்காத்ததற்கு
நாவலரொன் செய்தார் (அவை)

தரங்கக்காவேரிசூழ் மரங்கந்தனிலிருப்போன்
அரங்கநாதனு மல்லவோ
வரங்கள்வேண்டியே ரங்காவென்றழைத்திட
வந்துகாத்தனு மிலேயோ (அவை)

தராதலமறியவே வான்மீகிமுனியன்று
மராமராவென் றழைத்தாரே
தாராமல்பரமபதந் தாசரதியிருந்தால்
தாசர்களெவ்விதம் பிழைப்பாரோ (அவை)

பாலைப்பாச்சியெனும் பாலகனுக்குத்தாய்
பாலைத்தந்து வளர்ப்பாளே
மாலைத்துதித்திடுந் தாசர்களைமாதவன்
மதிப்பதிவ்விதங் கேளே (அவை)

அப்பனைக்குழந்தைக ளப்பப்பேயெனத்
தப்பிதங்கொள்ளு வாரோ
ஒப்பிதுவென்றேகிருஷ்ண சாமிதாசன்சொல்லை
யுணர்ந்தவர் தள்ளுவாரோ (அவை)

## இந்துமுகிவர்னமெட்டு — ஜாவளி.

மைகயிலா தெந்தன்கிளியே - இங்கிதமாவாய் - ரங்கனைக்கூவாய். கிளியே

அன்பாயிருக்குங்கூண்டுக் சொன்பதுவாசலைப்பாராய்
முன்பார்பூனைக்காத்திருப்பதை முழுதுநீதேராய் (கிளி)

பஞ்சபூதவிகாரத்தாலே பஞ்சவர்னமானாய்
பஞ்சபுலன்கள்செய்யுஞ்சேட்டை பகுத்தறிதானாய் (கிளி)

பறக்கவுனக்கிறகிருக்குது பூனைப்பறவாது
சிறக்கரங்கனைக்கூவிப்பணி சிந்தனைவாராது (கிளி)

தாசன்கிருஷ்ணசாமிசொல்வதை தேசமாய்க்கேளாய்
மோசம்போகாமற்கேட்டு முன்னமேமீளாய் (கிளி)



## நூற்றெட்டுத்திருப்பதியட்டவணைகீர்த்தனை.

### தோடிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

பரமபதசாக்ஷாத் பொருளே நூற்றெட்டுத்திருப்
பதியுறைந்தாளாப்பேனருளே.

அநுபல்லவி.

| | | | | |
|---|---|---|---|---|
| வரமதருளுந்திருவரங்கம் | ௧ | கண்டியூர் | ௧௫ |
| உறையூரே | ௨ | நீதிவிண்ணகரம் | ௧௬ |
| வையகம்புகழுந்தஞ்சைமாநகர் | ௩ | ஆதிகண்ணபுரம் | ௧௭ |
| அன்பில்நேரோ | ௪ | திருவாலித்திருநகரி | ௧௮ |
| திரமாங்கரம்பனூர் | ௫ | திருநாகை | ௧௯ |
| திருவெள்ளறையைப்பாரே | ௬ | நறையூர் | ௨0 |
| திருப்புள்ளம்பூதங்குடி | ௭ | நந்திபுரவிண்ணகரம் | ௨௧ |
| திருப்பேர்நகருறைசீரே | ௮ | நாடுந்திருவிந்தளூர் | ௨௨ |
| உற்றவாதனூர் | ௯ | சித்திரகூடம் | ௨௩ |
| நத்துமமூந்தூர் | ௧0 | ஸ்ரீராமவிண்ணகரம் | ௨௪ |
| ஒத்தசிறுபுலியூர் | ௧௧ | கூடலூர் | ௨௫ |
| முத்திதருஞ்சேறை | ௧௨ | கண்ணங்குடி | ௨௬ |
| தலைச்சங்கநாண்மதியம் | ௧௩ | கண்ணமங்கை | ௨௭ |
| திலைக்குடந்தை | ௧௪ | கவித்தலந்தனில்வாழும் (பரம) | ௨௮ |

கண்ணனுரணனுயுதித்து — யாவருந்துதித்து
எண்ணும்பிரக்யாதியடுத்து

| | | | | |
|---|---|---|---|---|
| கருதம்வெள்ளியங்குடி | ௨௯ | வைகுந்தேவனார்தொகை | ௩௩ |
| கனமணிமாடக்கோயில் (கண்) | ௩0 | வளர்புருடோத்தமம் (கண்) | ௩௪ |
| வைகுந்தவிண்ணகரம் | ௩௧ | செம்பொன்செய்கோயில் | ௩௫ |
| அரிமேயவிண்ணகரம் | ௩௨ | திருத்தெற்றியம்பலம் | ௩௬ |

| | | | |
|---|---|---|---|
| நம்புமணிக்கூடம் | ௩௭ | படிவிளக்குக்கச்சி | ௭௪ |
| நல்லகாவளம்பாடி | ௩௮ | வட்டபுயகரம் | ௭௫ |
| திருவெள்ளக்குளம் | ௩௯ | தண்கா | ௭௬ |
| திருப்பார்த்தன்பள்ளி | ௪0 | இட்டவேளுக்கை | ௭௭ |
| திருமாலிருஞ்சோலைமலை | ௪௧ | பாடகம் | ௭௮ |
| திருக்கோட்டியூரினில் (கண்) | ௪௨ | மட்டிவீரகம் | ௭௯ |
| திருமெய்யம் | ௪௩ | நிலாத்திங்கட்டுண்டந்தனிலே | |
| புல்லாணி | ௪௪ | வந்து (கண்) | ௮0 |
| திருத்தண்காலூர் | ௪௫ | தேவர்மகிழூரகம் | ௮௧ |
| திருமோகூர் | ௪௬ | நாவலர்புகழ்வெஃகா | ௮௨ |
| திருக்கூடல்தென்மதுரை | ௪௭ | ஆவல்தருங்காரகம் | ௮௩ |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | ௪௮ | பாவந்தவிர்கார்வானம் | ௮௪ |
| ஆழ்வார்திருக்குருகூர் | ௪௯ | பரந்தருங்கள்வனூர் | ௮௫ |
| தொலைவில்லிமங்கலம் | ௫0 | உரமாம்பவளவண்ணம் | ௮௬ |
| சொன்னவானமாமலை | ௫௧ | பரமேச்சுரவிண்ணகரம் | ௮௭ |
| திருப்புளிங்குடிப் | ௫௨ | வரந்தருந்திருப்புட்குழி | ௮௮ |
| பேரை | ௫௩ | வளமைத்திருநின்றவூர் | ௮௯ |
| ஸ்ரீவைகுந்தமெழில் | ௫௪ | குளமுள்ளபொய்கைவெவ்வுளூர் | ௯0 |
| திருவரகுணமங்கை | ௫௫ | தளிருந்தநீர்மலை | ௯௧ |
| தேய்குளந்தை | ௫௬ | உளமகிழுமிடவெந்தை | ௯௨ |
| குறுங்குடி (கண்) | ௫௭ | இங்கிதகடன்மல்லை | ௯௩ |
| கோளூர் | ௫௮ | தங்கத்திருவல்லிக்கேணி | ௯௪ |
| அனந்தபுரம் | ௫௯ | பொங்குஞ்சோளசிங்கபுரம் | ௯௫ |
| கோரும்வண்பரிசாரம் | ௬0 | எங்குந்துதிவேங்கடம் | ௯௬ |
| ஆளுந்திருக்காட்கரை | ௬௧ | திருச்சிங்கவேள்குன்றம் | ௯௭ |
| அருண்மூழிக்களம் | ௬௨ | தேவர்புகழ்அயோத்தி | ௯௮ |
| புலியூர் | ௬௩ | மருவில்நைமிசாரண்யம் | ௯௯ |
| செங்குன்றூர் | ௬௪ | மகிமைசாளக்கிராமம் | ௧00 |
| புரக்குநாவாய் | ௬௫ | துக்கவதரியாச்சிரமம் | ௧0௧ |
| வல்லவாழ் | ௬௬ | கங்கைக்கரைக்கண்டம் | ௧0௨ |
| வலிவண்வண்டூர் | ௬௭ | சங்கப்பிரிதி | ௧0௩ |
| வாட்டாறு | ௬௮ | வடமதுரை | ௧0௪ |
| வஞ்சமைவித்துவக்கோடு | ௬௯ | ரங்கதுவாரகை | ௧0௫ |
| கடித்தானம் | ௭0 | ஆய்ப்பாடி (கண்) | ௧0௬ |
| ஆரன்விளை | ௭௧ | க்ஷீராப்தி | ௧0௭ |
| கெடிஸ்தானமிந்திரபுரம் | ௭௨ | பரமபதமரம் | ௧0௮ |
| செடியறுகோவலூர் | ௭௩ | | |


திருப்பதிநூற்றெட்டின் மேலே
கோராப்தியைத்தவிர்க்க கோவிந்தனிருப்பதாலே
சேரப்தராமாழ்வார்கள் சேர்ந்தபாமாலைப்போலே
சீராய்கிருஷ்ணசாமிதாசன் செய்பாடற்கொள்வாரெனமாலே
சித்தமிரங்கி - நற்றுணையாமிடைக் - கற்றுதுதிக்க - முத்தியளித்திடும்
ராமச்சந்திரன் - ரூபசவுந்தரன் - சேமசுதந்தரன் - ராமக்ருபாகரன்
புஷ்பரவிகுல - நிஜமிருதுவசன - விஜயசுபவெனும் - அஜசுரவந்தித [ட
அண்டரண்டபகிரண்டநிறைந்தும-கண்டபுகழ்பெறும்-பிரசண்டகோதண்
(பரமபதசாக்ஷாத்பொருளே)

---

ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

# நூற்றெட்டுத்திருப்பதி ப்ரபாவ கீர்த்தனங்கள்.

சோழநாட்டுத்திவ்வியதேசங்கள் (௪0.)

## திருவரங்கம் ஸ்ரீரங்கநாதன் விஷயம். (௧)

கமாசு - ராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

வாராய் ஸ்ரீரங்கநாதனே கிருபைக்கண் பாராய் பாராய்

அநுபல்லவி.

ஆராலுமறியொணு அரவிந்த பதத்தைத்தினம்
நேராய்துதிக்க வரந் தாராய் தாராய் (வாரா)

சரணங்கள்.

தரங்கக்காவேரிசூழுமரங்கத் தாவணைப்பொற் பாதா - நாதா
சரங்களசரங்களைத் தந்தளித்திடுஞ் சர்வாதிதா
கரங்களிற்சங்குசக்ரந் துலங்கவசுரர்களைச்
சிரங்கள்கொய்துசுரர்க்கு வரங்கள்தந்தவிநோதா (வாரா)

தருமவர்மாவுக்கும்ரவிதர்மனுக்கும் பிரத்யக்ஷவுபாயா - மாயா
திருமுகந்தெற்கேவிளங்கத் திருநயனந்துயிலுநேயா
தருபுன்னைகீழலுஞ் சந்திரபுஷ்கரணியும்
இருபுறநாச்சிமாரடி வருடவிளங்குந்தூயா (வாரா)

பொய்கைமுதலாழ்வார்கள்மங்களா சாஸனப்பெருமாளே-எனையாளே
கைகையால்காளிந்சென்றகாலின்கீழ் புல்லாயிலென்மேனுளே
மெய்குளிர்ந்துரைகுழறிக் கண்பஞ்சிநாளிலென்
செய்கையைத்திருத்தியுன் தெரிசனையைத்தந்தாள (வாரா)

நாடிப்ரணவாக்ரிவிமானத்தி னுலவுமுலாசா - நேசா
தேடித்தேவர்கொண்டாடி வணங்குஞ்சகதீசா
ஆடிக்காளிங்கன்மிசை யோடியெழிலாயர்கள்
பாடிவெண்ணெய்தேடியுணுங் கிருஷ்ணசாமிநேசா (வாரா)
11

## திருவுறையூர் அழகிய மணவாளப் பெருமாள்விஷயம். (உ)

பைரவிராகம் - ரூபகதாளம்.

பல்லவி

அழகியமணவாளப்பெருமாளே எனையாளே

அநுபல்லவி.

பழமறையினைத்துதிக்கரியார் நாட்கெல்லாம் பாழ்நாளே

சரணங்கள்.

ஆழ்வார்களின்வாய்மலர்ந்த (வழங்கியதிருவாய்மொழியில்
சோழநாட்டில்யாவருக்குந்தொழத்தோன்றுந்திருப்பதிதிருவுறையூர் (அழ)

நயிநார்மருக்குப்பிரத்யக்ஷமான பாரம் அருள் தாராய்
புலியில்கல்யாண விமானமேவிய வாரம் பாவந்தீரம் (அழ)

நீரமங்கையர்க்கவர் மங்களாசாஸனப்பரிய திருபாக்கியே
மருமலர்மாலையுங்கழலியுஞ்சீயுமென்கதியே திருபதியே (அழ)

படமுக்கோணமாகின்ற திருக்கோலங் கண்டார்பிறவியண்டார்
குடமருட்டிதரிசிப்பாரை [illegible]கொண்டார்வினைவிண்டார் (அழ)

தாயிருக்கும் பின்னெயளவு தருமாபரக்கமா
கீழிருந்துபோனவெயதி நிலைமாதேகன்நிரமா (அழ)

மருமலர்த்தேன்பளையணியுங் கோமாள வாறிநாவா
திருவஞ்சனையிதமபரிபாலா கேசுந்தேவா (அழ)

---

## திருக்கஞ்சனகரம்கீழ்வேளைப்பெருமாள் விஷயம். (௩)

தன்யாசி - ராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

கீழ்வேளைப்பெருமாளே உன்னை நினைப்பவர்க்கு
சேருந்தீவினைப் பலனேதையா

அநுபல்லவி.

மூவுலகும்கும்பிடும் நாராயணநாமமே
பேசுந்தருகிக்கு மென்பதுயோசய்யா (கீல)

சரணங்கள்.

சிருக்கஞ்சனகரந் திவ்யதேசமதில்
செல்லவீற்றிருக்கும் காவிக்கதேவே
மருமலர்த்துளப மாலையணியுந்திவ்ய
மணிகுலந்தரய ஜோதிசோவே (கீல)



அலைகடலைக்கடைந் தமரர்க்கமுதளித்த
ஐயனேசெந் தாமரைக்கையினே
நிலையவனோத்துச்செங் கமலவல்லியைமணந்துசெய்
செயசெனத்தரிய விமானமெய்யனே (கீல)

கிழக்கேதிருமுகமாய் வீற்றிருக்குஞ்ராமனே
சேருமென்முறைவைப் பரந்தாமனே
வழுக்கமாப்பரசர முனிமார்க்கண்டேயரும்
வணங்கப்பிரத்தி யக்ஷமானசேமனே (கீலே)

பூதத்தாழ்வார்மங்கைமன்னன் மங்களாசாஸனப்
புகழ்பெறும்ராவி முகுந்தமாயனே
பாதத்தாலலகுதி வேதவேலையன்தாங்கு
பரமபுருஷசேனா [illegible] மெய்யனே (கீல)

தாமரைமேலயன வணங்கும் [illegible]
தசரதன்மைந்த சிமானே
மாயவநபுகழுமுத தீர்த்தமுடைய
மாதவதிருவஞ்சனசாமி வெண்கோனே (கீல)

---

## திருவள்ளூர் திருவாழ்வழகிய நம்பிவிஷயம். (௪)

பியாகு - ராகம் - ஆதி - தாளம்.

பல்லவி.

திருவாழ்வழகிய நம்பி நாரணனைத்
திருவள்ளூரில் சென்றுசேவிப்பாய் மனமே

அநுபல்லவி.

திருமையிருமையினையருள் பல்லவ
எதுகதிதருவதும் நீ மனமே (திரு)

சரணங்கள்.

தாரகமியாணத்தில் தசரதராமனே
தரிசித்தபேர்களுக் கபயங்காரே
லோகத்திலிருக்கு முகம்பின்றகோலத்தைக்
கடப்பநங்களுக் கடைக்காமே (திரு)

பிரமாவிற்கும் வான்மீகர்க்கும் மித்யகடமானசோர்
பெருமையையென்சொல்வேன் மனமே
சர்மாதயருக்கும் நாராயணமலர்
நரகவாக்கும்பிட்டா வெண்கலமே (திரு)

ஆழ்வார்மங்கை மன்னன் மங்களாசாஸனமும்
அழகியவல்லி நாச்சியார்சேவையும்
தாழ்வாறியா மண்டுகபுஷ்கரணியும்
தரணியிலெங்குண்டதை யறிந்தேதினமும் (திரு)

வாதபித்தசிலேட் மாதிகளுக்கெல்லாம்
வகையறிந்துசொல்லு வேறொருதந்திரமே
ஆதரவாகுந்துளவமே யௌஷதம்
அபானமவன் திருமந்திரமே (திரு)

அகரமேஹரியென்று முகரமேசிரியென்றும்
நிகரமாய்தெரிந்தோர் நிலையிருந்து
மகரமேதானென்று கிருஷ்ணசாமிதாசன்
பகரமாய்மனனஞ்செய் பான்மையறிந்து (திரு)

## திருக்கரம்பனூர் புருஷோத்தமன்விஷயம். (ரு)

மத்தியமாவதிராகம் அட்தாளம்

பல்லவி

புருஷனாய்ப்பிறந்தும்யான் புருஷார்த்தமொன்றறியேன்
பூமியில்புருஷோத்தமா

அனுபல்லவி

வருஷங்கள்சதமென்பர் வாழ்நாட்கள்கழிவதே
வகையறியாமலே மனமேங்கிக்குழைவதே

சரணங்கள்

திருக்கரம்பனூரில்திவ்யமங்களரூபா தேசோன்மயசொரூபா
மருமலர்ப்பூர்வாதேவிமணிகௌத்துவமார்பா வாருமுத்யோகவிமாந வைகுண்
[டபத்மநாபா (புரு)

பனகசயனமீதில்படுத்தமுகங்கிழக்கும் பார்த்தோர்மனதையுருக்கும்
சனகஸநந்தநசநத்குமாரர்களுக்கும் சதாகதம்பரிக்ஷிக்கும்பிரத்யக்ஷமான்வரோ
(புரு)

கதம்பதீர்த்தத்தையுங்கதலிமரச்சேவையும் கண்டோர்பெறுவர்யாவையும்
இதமாய்த்திருமங்கையாழ்வாரிசைப்பாவையும் எற்றீரோவென்னையுன்திரு
[வடியிலேவையும் (புரு)

தோஷங்களையுந்தொட்ருந்திவினையையுந் தொலையவருட்கண்பாருமே
தாசரதிகிருஷ்ணசாமிதாசனையுன்றன் றாளிணைக்காளாக்கத்தருணமிங்கேவா
[ருமே (புரு)



## திருவெள்ளறைபுண்டரீகாக்ஷன் விஷயம். (சு)

இந்துஸ்தானிகாப்பிராகம் சாப்புதாளம்.

பல்லவி

பொன்னடியைத்தொழுவீர் புண்டரீகாக்ஷனுன்னத்

அனுபல்லவி

மண்ணடிமூன்றினைக்கேட்டுத் தன்னடியாலளந்தவன்
பெண்வடிவாக்கல்லைச்செய்தும் முன்னடியாரைக்காத்தவன் (பொ)

சரணங்கள்

தருமள்ளருழும்பள்ள பழனஞ்சூழ்தோயநீள்ளம்
மருகொள்ளையாய்விளையுந் திருவெள்ளறைப்பெருமான் (பொ)
பங்கயச்செல்விசெண்பகவல்லி பாதங்களையுஞ்செல்வி
சங்கையில்குசதீர்த்தாதி ஸ்நானஞ்செய்துபலங்கொல்வி (பொ)
நின்றுகிழக்குமுக மாயிருக்குஞ்சிர்மலன்
சென்றுவிமலாகிர்தி விமானமேறிவரும்நல்ன்
பெரியதிருவடிசிபிச் சக்ரவர்த்திக்குநன்னி
சிரிபூதேவிக்குமார்க்கண் டேயர்க்கும்பிரத்யக்ஷமென்னி (பொ)
பெரியாழ்வார்மங்கைமன்னன் மங்களாசாஸனங்கொண்டார்
உரியதாசகோடிகளை யுகந்தாளவுங்கண்டார் (பொ)
கோடிசூரியப்பிரகாசன் கோடிமன்மததேசன்
காடிகிருஷ்ணசாமிதாசன் பாடல்பெறுஞ்சீனிவாசன் (பொ)

---

## திருப்புள்ளம்பூதங்குடி வல்வில்ராமன் விஷயம். (எ)

நாதநாமக்கிரியை ராகம் ரூபகதாளம்

கண்ணிகள்

திருப்புள்ளம்பூதங்குடி செறிவல்வில்ராமனே
அருள்வெள்ளந்தருமையனே அடியேனுள்ளம் புகுமெய்யனே
அல்லும்பகலும்முன்பே ரனுதினமும்சொல்லச்சொல்லி
நில்லும்நில்லும்நினைவில் நின்மலவெம்பிரானே
குணதிசைத்திருவதனங்கொண்ட வரவணைச்சயனா
கணமேனும்யான்சகியேன். கமலமனோகரநயனா
திருமகன்சக்ரவர்த்தி செறிக்ர்த்ரனுக்குநீயே
பெருமையுடன்முன்னம் பிரத்தியக்ஷமானாயே
மங்களாசாஸனந்திரு மங்கைமன்னர்செய்தாரோ
எங்குமுனைத்துதிப்பே னென்னிடமாக்கொய்வீரோ
அங்கசனையளித்தாய் அனையில்தங்கவஸ்திரந்தரித்தாய்
இங்கரனையாளுவாய் கிருஷ்ணசாமிதேசிகனே

## திருப்பேர்நகரம் அப்பக்குடத்தான் விஷயம். (அ)

பைரவிராகம் அடதாளம்.

பல்லவி

அப்பக்குடத்தானின் பெருமையையாரறுஞ்
செப்பத்தருமோ அப்பனே

அநுபல்லவி

...பனக்குநீயே ஒருவருண்டோமெய்யனே
உலகனைத்தும் விழுங்கிய உத்தமமானையனே

சரணங்கள்

திருப்பேர்நகர்தன்னில் நீளக்கிடக்கிறது
திருவரங்கத்தினையுமிக் கிருந்துறும்படைத்தாயே
திருமழிசையாழ்வார் சிறந்தபெரியாழ்வார்
திருமங்கைமன்னனிவர் செய்பாவினம்பெற்றாயே (அப்)

வலக்கையின் கீழ்க்குடம் வைத்துக்குடதிசைமுகம்
நலமாய்ச்சாயிக்கும்படி நாகணைப்படுத்தாயே
பலவுபயஜனுக்கும் பராசரர்க்கும்பிரத்யக்ஷமும்
நலமதிலாறுபத்தாய வெக்ஷேவித்தாயே (அப்)

பூமிதிற்பிறந்துமியான் புண்யபலமென்றறியேன்
காமிகளில்மிருந்த காமியாய்ச்சென்றலைந்தேன்
சுவாமியுன் தியானமே சகலபாவமும்தீர்க்கும்
ஆமிதென்றெண்மனமுன் னருட்கடைபார்க்கும் (அப்)

காமக்ரோதலோபமோக மதமச்சரங்களாலே
கண்டபடியிருந்துக் கலக்கச்செய்யாமலே
தாமதஞ்செய்யாமல்வா சாமியிந்திரவிமானமேல
தாசன்கிருஷ்ணசாமியுன் சரணமெந்நாளே (அப்)

---

## திருவாதனூர் ஆண்டளக்குமையன் விஷயம். (க)

காம்போதிராகம் சாப்புதாளம்

பல்லவி

ஆண்டளக்குமையனே படியளப்பானென்று அறியாயோமனமே

அநுபல்லவி

வேண்டினோர்க்கெல்லாம் விருதாவிலேகதித்தாய்
மீண்டுமீளாக்கெதிக்க நீயென்றலைப்பட்டாய் (ஆண்)



சரணங்கள்

திருவாதனூர்சென்று ஸ்ரீரங்கராயனிடமே
திகழுமவனியினை நிலவுமுக்கிரமாய்
திருக்கண்டருளினம் ஸ்ரீரங்கநாதனைத்
தெரிசித்தபேர்களுக் கென்மாசபலமலாரே (ஆண்)
காமதேனுக்குதிரு மங்கையாழ்வாருமுடனே
கண்டளிப்பிரத்தியக்ஷமும் சுழமையனென்மகாதரும்
சோமசூரியாக்கினிபோன் றோயுஞ்சூரியனுக்காணி
சுதர்சனம்பிரணவமி மாதுர்சத்வேதவேதம் (ஆண்)
மங்கையாழ்வார்திரு மங்களாசாஸனம்பெற்ற
மாதவன்மலரடியை மாதவனைக்கண்டு
இல்லிதயமறையோர்க மெய்போதமாகும்
இவ்வினைகேட்டுநீ விருந்தாருமேபோகும் (ஆண்)
மனம்புத்திசித்த மாங்காரக்காலங்களில்
மனமேகிவசப்பட்ட வெல்லாம்சுகப்படும்
நிலைமுக்தியானஞ்செய்து ஸ்ரீகிருஷ்ணசாமிதன்
திருவடித்தாசர்க்குத்தா அருள்செய்யாய் (ஆண்)

---

## திருவழுந்தூர் ஆமருவியப்பன் விஷயம். (கo)

இந்துஸ்தானிகாபிராகம் ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஆமருவியப்பா மாவீதிநாதம்
அரவின்தந்திரிதெய்வேன் ஞானமாநாதம்
தேமருவுஞ்சோலைத் திருவழுந்தூரில்
தேவர்காருமுனிவர் நியமமொழுமாநாதம்
கருடவாகனமீதில் காட்சிதருமாநாதம்
வருடசெங்கமலமாகிற் மலர்ந்திலங்குமாநாதம்
உபரிசரவசுக்கு முத்தமாகவேயிருக்கும்நாதம்
தபதர்மதேவதைக்கும் தரிசனமருளியநாதம்
கீர்த்தியுமுக்குணமுடை கீர்த்திமனிதமாநாதம்
அனந்தமங்கையர்களுடன் கூடியருளிநாதம்
தரிசனமங்களவேதியர்தொழ தரிசனமருளியநாதம்
தரிசனஞ்செய்யவுமே புண்ணியஞ்சேர்க்குநாதம்
காரமையாவநிதி கமலவரேழுநாதம்
காருணாதிருவகோர் நம்மையாளுநாதம்
இகலோகமெந்தத் விசேஷபோகநாதம்
அகலியாமல்லவியசெய்த அநாதிநாதம்
பாமரர்நானென் மொழியமாகவேயி தனிநாதம்
பழிபடநேசெய்தா இலகுநாதம்

## திருச்சிறுபுலியூர் அருண்மாக்கடல் விஷயம். (கக)

முகாரி ராகம் ஆதிதாளம்.

கண்ணிகள்.

அருண்மாக்கடல்நிதியேயென்று அனுதினமுந்துதியே
திருச்சிறுபுலியூர்சென்று சேவிப்பாய்மதியே
மானஸபுஷ்கரணிமாவரந்த சரஸ்ஸுவிற்படிவாயே
மானஸபூஜைசெய்துமறுசென் மத்தைக்கடிவாயே
சயநம்புஜங்கன்மிசை சாமியினயனந்தெற்குதிசை
நயமாய்வியாசர்வியாக்ரமர் துதித்துநாடினர்பிரத்யக்ஷதிசை
ஆழ்வார்மங்கையர் கோன் சாஸனமனுதினஞ்செய்தாரே
தாழ்வாமூழ்வினையை முன்புதாராளமாய்க்கொய்தாரே
நாராயணன்சரணம் நாளுஞ்சரணமென்றறிவாயே
பாராயணஞ்செய்து பரமபதம்பெறத்தெரிவாயே
திருப்பாற்கடல்கடைந்து அமுதந்தேவர்க்குத்தந்தவனே
கிருபாநிதியமலனே கிருஷ்ணசாமிதேசிகனவனே

---

## திருச்சேறைசாரநாதர் விஷயம். (கஉ)

ஆனந்தபைரவிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

சாராமலேன்சஞ்சலப்படுகிறாய் மனமே சாரநாதனைச்

அனுபல்லவி

பாராயோதிருச்சேறையூர் பாலகோபாலனையடுத்து
தேராமல்என்சொல்தடுத்து திகைத்திப்ரபஞ்சத்திலுழைத்து

சரணங்கள்

கிழக்குத்திருமுகநின்ற கோலமாய்
கிளர்காவேரிக்குக் கீர்த்திப்பிரத்யக்ஷமாய்
வழக்கமாய்மங்கைமன் வந்திதபாதமாய்
வாதரிருக்கிறார் வணங்குக்ஷேமமாய் (சாரா)

சாரபுஷ்கரணியில் ஸ்நானஞ்செய்வாயே
சாரநாயகியைத் தரிசித்தும்உய்வாயே
சாரதசேவை தன்னையுங்கொள்வாயே
சாமியென்று சதாகாலமுஞ்சொல்வாயே (சாரா)

பாடுபட்டுத்தேடும் பணமும்பொல்லாது
பாதுகாத்துவைத் தாலதுவுநில்லாது
கூடுவிடும்போது கூடவுஞ்செல்லாது
கோவிந்தநாமத்தை யொன்றும்வெல்லாது (சாரா)



மாடுமக்கள்மனை சுற்றத்தைத்தேடி
மாதராசையில் மெத்தவுங்கூடி
தேடும்பொருள்களை நித்தமுநாடி
தினமுங்கவலை கொண்டலைந்துவாடி (சாரா)

தேடிநமோ நாராயணவென்று
தேர்ந்துரைத்தார்பதஞ் சிரமேற்கொண்டு
நாடிநமோஹரி கிருஷ்ணசாமியென்று
நாடாமல்நீ என்னத்தைக்கண்டு (சாரா)

---

## திருத்தலைச்சங்க நாண்மதியப்பெருமாள் விஷயம் (கங)

பியாகுராகம் சாப்புதாளம்

பல்லவி

ஆண்டுசென்மமெடுத் தென்னபலன்கண்டாய்
அவனியின்மீது நீயடைவதையோது

அனுபல்லவி

நாண்மதியப்பெருமானை நாடாயே
நாயே பேயே நீயென்செய்தாயே (ஆண்)

சரணங்கள்

திருத்தலைச்சங்க நாண்மதியஞ்சென்று
சேவித்திட லாகாதசெய்த
தீவினையெல்லாம் போகாதா
தேவனருளுங்கிடைக்காதா சதென்னவாதா (ஆண்)

சந்திரபுஷ்கரணியில் சதாகாலமும்
ஸ்நானஞ்செய்து தீர்த்தமுண்டு
சந்திரவிமான சேவையுங்கண்டு
சாமிபாதத்தைச்சிரமேற்கொண்டு செய்வாய்தொண்டு (ஆண்)

திருமுகங்கிழக்காய் நின்றகோலத்தின்
சேவையைப் பெற்றனர்பண்டார்
தேவபிரந்தங்கள் சந்திரன்கண்டார்
தேவன்பிரத்யக்ஷவருளைக்கொண்டார் பாவமண்டார் (ஆண்)

மங்கைமன்பூதத் தாழ்வார்கள்முன்னம்
மங்களாசாஸனஞ் செய்தார்
மாதவமென்னமோ செய்தார்
மாதேவர்மலர்மழைபெய்தார் வினைகொய்தார் (ஆண்)

கற்றறிந்தாலென்ன கற்றறிமோஷமாய்
காயமென்னெ சதமாமோவுன்னை
காலன்பாசம்விட்டுப் பேர்மோசீ
காலங்கழித்திடலாமோ எதாமோ (ஆண்)

போனதெல்லாம்போச்சு கிருஷ்ணசாமிதாசன்
போதிக்குஞ்சொல்லை நீகேளாய்
உன்னைவாழ்விக்கிறாய் வெகுகாளாய்
என்னப்பன்பெருமாளுக் காளாய்இனிமீளாய் (ஆண்)

---

## திருக்குடந்தைஆராவமுதன் விஷயம் (கச)

பிலஹரிராகம் ஆதிதாளம்

பல்லவி

ஆராவமுதன்கழலிணைகளனுதினங் கதியெனத்துதிமதியே

அனுபல்லவி

சீரார்திருவாய் மொழிபயின்ற
செறிகோஷ்டிகள்சூழ் திருக்குடந்தை (ஆரா)

சரணங்கள்

திருமாலாயவதரித்து ஸ்ரீசார்ங்கபாணியுமே
திருப்பாற்கடலைக்கடைந்துதேவர்க் கமுதம்புசியுமென் றளித்த (ஆரா)

உத்யோகசயனத்தில் ஒளிருமுகங்கிழக்காக
எத்தேசத்தருந்தொழவே யினிதாய்சேவைதந்தளிக்கும் (ஆரா)

ஹேமபுஷ்கரதீரத் தெதிராகத்தவஞ்செய்த
ஹேமமகாரிஷிக்கு மெதிலுடனேபிரத்யக்ஷ (ஆரா)

சமானகோமளவல்லித் தாயாருடனேதான்கூடி
விமானவைதிகமேறி விநோதகரமாய்பவனிவரும் (ஆரா)

மகிழ்மாறன்மழிசையர்கோன் வருபூதனொருபேயன்
திகழ்கலியன்விண்டசித்தன் தினம்பரவுங்கனமிலங்கும் (ஆரா)

அல்லல்தருந்தொல்லையிலே அலையாதேநிலைகுலையாதே
கல்வர்கள்சொல்லும்பொருளு நாரணனும்பரிபூரணனும் (ஆரா)
சரிகமபா சரிகமகா சரிகரிகமரி சாந்தவென்
ஹரிகிருஷ்ணசாமியுமே அனவரதங்குழலிசையூதும் (ஆரா)



## திருக்கண்டியூர்அரன்சாபந்தீர்த்தபெருமாள்விஷயம். (கரு)

புன்னாகவராளிராகம்சாப்புதாளம்.

கண்ணிகள்.

அனந்தசயனத்தாதேவே திருக்கண்டியூர்
அரன்சாபந்தீர்த்த பெருமாளென்கோவே
கோலத்திரு முகங்கிழக்காய் நின்றுயேமுன்னமேசீ
கோரராவண ராக்ஷதனைவென்றுயே
வல்லிகமலநாச்சியாள் சொல்லாளோஎன்கண்முன்னே
வந்துங்காக்ஷிதந்துமே நில்லாளோ
கமலாக்ருதிவிமானத்தில்வரு வாயேஎனைரக்ஷிக்கக்
கபாலதீர்த்தம் பாதரேணுவைத் தருவாயே.
அகஸ்தியருக்கும்பிரத்யக்ஷியல்லவோ மங்கைமன்கவிகொண்ட
அம்புதத்தையாணடுத்துச் சொல்லவோ
அனந்தசென்மங்கள் தந்தாலுந்தாறாய் உன்பொன்னடியை
அடியேன்மறவாதிருக்கக் கண்பாராய்
சுகுணஜீவிகருடன் கலப்பாயே என்கவலைதீரச்
சுகஜீவனத்திலிருக்கச் செய்வாயே
கபடநாடகசூஸ்திரதாரியே கிருஷ்ணசாமிதாசனைக்
காப்பதுமெப்போ சொல்லுமுராரியே

---

## திருவிண்ணகரம் உப்பிலியப்பன் விஷயம் (கஎ)

பிலஹரிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

உப்பிலியப்பனே கிருஷ்ணையாளெனக்
குனைவிடவேறுகதி யாரையா

அனுபல்லவி.

அப்பனேஹரி அரவணையானேகாண்
செப்புவதென்ன செந்திருமகள்கோனே (உப்பி)

சரணங்கள்.

திருவிண்ணகரத்தில் நின்றகோலம்
திருமுகங்குணதிசை என்னஜாலம்
பலகாலம்பாதகத் தாலம்இதில்
படுந்துன்பத்தைத் தடுப்பதெந்தகாலம் (உப்பி)

சரியலவிஷ்ணு விமானத்தில்வீ[illegible]ராய்
சாமியரர்த்[illegible]புஷ்கரணி தீர்த்தந்த[illegible]ராய்
கண்பாராய் கஷ்டத்தைத்[illegible]ழில்
கருணைபூதேவிக்கும் வந்தனந்[illegible]ருய் (உப்பி)

மார்க்கண்டேயருக்கும் [illegible]காட்[illegible]ிக்கும்
மாபெரியதிருவடி தர்மதேவதைக்கும்
பிரத்தியக்ஷமானவுன் பெருமைக்கும் தாழ்வாம்
பேசாதிருப்பது மென்வறுமைக்கும் (உப்)

நம்மாழ்வார்மங்கைமன்னன் பாடல்கண்டாய்
நான்பாடவுமென் உளங்கொண்டாய்
அனையுண்டாயடி யாரையாண்டாயென்னை
யாதரித்திடுநீயினித் தொண்டாய் (உப்பி)

நாராயண நவநீதசோரா
நான்மறைப்புகழ் கிருஷ்ணசாமிதீரா
காரணகாரா தசாவதாரா இனி
காத்தருளு மெழில்ரகுவீரா (உப்)

திருக்கண்ணபுரம் சௌரிராஜன் விஷயம். (கஎ)

---

ஆனந்தபைரவிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

சௌரிராஜனு மிவனும் திருக்கண்ணபுரம்

அனுபல்லவி.

சௌரிராஜனுமிவனும் கரத்தில்சார்ங்கதரனும்
கௌரவர்கெடப்பார்த்தன் கனகத்தேரோட்டுவோனும் (சௌரி)

சரணங்கள்

அண்டமளந்தவனும் உண்டுமுமிழ்ந்தவனும்
கண்டுகளிப்பவர்க்கும் புண்டரீகாக்ஷனிவனும் (சௌரி)

உற்பலாவர்த்தகவிமானம் உம்பர்க்குண்டோதற்சமானம்
கற்பகத்தருவுவமானம் கண்ணன்கருணைபிரதானம் (சௌரி)

நின்மலன்கிழக்குப்பாலம் நின்றிருப்பதென்னகோலம்
தன்மவான்றிருமேனிநீலந் தான்விளங்குமேவிசாலம் (சௌரி)

கண்வமாமுனிக்குப்பிரத்யக்ஷம் கண்டதாமேயிவன்வக்ஷம்
நண்ணுமனைசொல்லிநன்ருய் ரக்ஷிக்காததென்பக்ஷம் (சௌரி)



நம்மாழ்வார்பெரியாழ்வார் நல்லதிருமங்கையாழ்வார்
செம்மல்குலசேகரர்கோன் செய்ததுதிபெற்றவாழ்[illegible] (சௌரி)
கண்ணபுரிநாச்சிமெச்சுங்கண நித்யபுஷ்கரணி[illegible]தம்
விண்ணவர்க்களிக்கும் விஸ்வாசதிவ்யமூர்த்தம் (சௌரி)
தங்கவஸ்திரமின் தங்கநடக்கும்நடை
எங்கும்பார்த்தாலுங்கிடை யாதகிருஷ்ணசாமியாம் (சௌரி)

---

திருவாலிதிருநகரிவயலாலி மணவாளன் விஷயம். (கஅ)

அபரூபராகம் ரூபகதாளம்

பல்லவி.

வயலாலிமணவாளா என்னை
வறுமைப்படுத்துகிருய் வெகுநாளாய்

அனுபல்லவி.

வயதுமெனக்கு வளருநாளாய்நீயும்
வாழ்விக்கவெனைச் செய்யும்பெருமாளா (வய)

சரணங்கள்

அஷ்டாக்ஷரவிமான மேறிவருவாய்எனக்
கமிர்தகடவல்லியுடன் சேவைதருவாய் (வய

குடதிசைத்திருமுகமாய் வீற்றிருக்கிருய்நியான
குணங்கொடுக்காம லென்னையேன்கெடுக்கிருய். (வய

இலாட்சணிபுஷ்கரணி அலாதனிபுஷ்கரணி
இடைவிடாமல்தோய் பவர்க்கேசரணீ (வய

அலாதகிகஞ்சம பிரஜாபதிக்கும்முன்
அவிர்பாகாலனுக்கும் பிரத்யக்ஷமாய்ச்சொலிக்கும் (வய

மங்கையாழ்வார்திரு மங்களாசாஸனம்போலே
மகிழ்ந்தென்புன்சொலுங் கொள்ளுமென்மேலே (வ

சரணர்திருவாலி திருநகரிவாசா ஓ
சரணங்கிருஷ்ணசாமி ஜகதீசா (வ

---

திருநாகை சௌந்தரராஜர் விஷயம் (கக

புன்னகதோடி ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

வாவரந்தரச்சௌந்தரராஜா { வாத செய்வதேன்
{ சௌந்தர்யவிமானமேறி

அனுபல்லவி.

ஆவதுமில்லை மையநின்னடியேனே
ஆதரவுவேறில்லையுன் பாதகதியேயல்லது (வா)

சரணங்கள்.

ஈசாதிருநாகை நகர்வாசா
என்னிருதய நேசா
தாசபோஷமிகு தாசஸ்ரீநிவாசா
மோசஞ்செய்யாதேயெனை முரளிகானவுலாசா (வா)

நாகராஜனுக்கும் மங்கைமன்னனுக்கும்
நாளும்பிரத்யக்ஷ மாயிருக்கும்
தேகசௌந்தர்ய வல்லித்தாயாருக்கும்
தினமுஞ்சுகந்தரக் குணமுகநின்றதேவே (வா)

சாரபுஷ்கரணி தீர்த்தமருணீ
சதாபாதரேணு அருணீ
நீரமங்கைமன்னன் செய்தபாமாலையணி
திவ்யதிருவடியென் சிரமணியருள்பணி (வா)

நாதாநரர்சுரர் துதிபாதா
நாலாயிர வேதா
பரதகனனும் பாலிக்கப்போகாதா
நீதாநவநீதசோரா நின்மலவினோதாயோத்ர (வா)

தாளாதென்மனம் வெகுநாளாய்
உன்றனிணைக் காளாய்
நீளாதிருக்கவென்று மெலிவதைக்கேளாய்
மாளாதுயர்த்தீருங்கிருஷ்ண சாமிலட்சுமிமணவாளா (வா)

---

திருநறையூர் நம்பிவிஷயம். (உ0)

பிலஹரிராகம் அடதாளம்.

பல்லவி.

நம்பியே உனைநம்பினேன்

அனுபல்லவி.

பாரதத்தினில்நீயுமே சாதியுமானதைப்பாராயா
ஆரெனக்குக்கதிநீயலாதுவே ருதரித்திவோராயா (நா)



சரணங்கள்.

திருநறையூர்க்கோபாலா தேவகிபாலாதினரக்ஷகாநுகூலா
மருமலர்ப்பூங்குழல்மலர் மாதுநம்பிநைப்புதனளனே
மருமையிலுமுன்னடியை யென்மனமருவச்செய்குணனனே (நாரா)

நின்றதிருக்கோலமாய்நின்முகங்குணதிசைப்பார்வைநெடுங்காலமாய்
என்றன்மேல்வைக்காமலேனோ பிருக்கிருய்ஜாலமாய்
இனியாகிலும்ஸ்ரீநிவாச விமலமேறிவாக்ஷேமமாய் (நாரா)

மேதவமுனிகன்னியைப்பலிபிடித்தேமே கொண்டுபோகச்சபித்து
மேதவமுனியைரக்ஷித்து மேன்மைமங்கைமன்கவியைப்பெற்று
மேதினியோர்பாவந்துடைக்க மேவுமணிமுக்தாநுபடைத்த (நாரா)

நாதாநவநீதசோரா நனிஞானாநாரதவந்திதனோ
ஆதரவுவேறில்லைநீக்கி அண்டினேனுனைரகுபதி
பாதுகாத்திடவேகதி பரமபுருஷவோஸ்ரீபதி (நாரா)

வராகரவாமனரூபாபத்மநாபா வானுறைசுடர்தீபா
பராமுகமேனோதேவா பாதுகாத்திடும்ராகவா
சராசரந்தரித்தமாதவா தாமோதராகிருஷ்ணசாமிவா (நாரா)

---

திருநந்திபுரவிண்ணகரம் ஜெகநாதன்விஷயம். (உக)

தேசிகதோடி ரூபகதாளம்.

பல்லவி.

ஜெகநாதன் செயலெப்படி யிருக்குமோ அதைச்செப்புவ தெப்படி.

அனுபல்லவி.

ஜெகதலத்தனில்காரணங்களென்னைச் சேதித்துவேதனைக்குட்படுத்துமோ
ஜென்மாந்திரஞ்செய்கிறதபலத்தால் க்ஷேமப்பதவியில்சேர்த்துவைக்குமோ (ஜெக)

சரணங்கள்.

திருநந்திபுர விண்ணகரமேவு
செண்பகவல்லியுடன் சேவையளிக்குமோ
தீவினைகள்தீர்க்கத் தீர்த்தத்திலே
தினமுந்தோயச்செய்து வைக்குமோ (ஜெக)

மேற்குத்திருமுகம் வீற்றிருக்குங்கோலம்
மேன்மைச்சிபிச்சக்ர வர்த்திக்கந்தகாலம்
மேதினியிலக்கிக்கும் பிரத்யக்ஷகாலம்
மேலுமதுபோது மாருமோவனுகூலம் (ஜெக)

அருமறைப்பிறமுட் / பொருளுணர்த்தி
ஆதிபாஞ்சடர்ச் / சோதியுட்சேர்க்குமோ
அருமையா / ங்கைமன்னன்கவிபோலும்
அடியேன்புன்சொல் / அங்கீகாரஞ்செய்யுமோ (ஜெக)

நிர்மலமாய் / கிருஷ்ணசாமிதாசனை
நிரதிசயாநந்த / பதவியிற்சேர்க்குமோ
நீர்மூடருநவைப் / பெரிதென்றெண்ணும்
நினைவளித்தென்னைக் / கலங்கச்செய்யுமோ (ஜெக)

---

திருவிந்தளூர்சுகந்தவனநாதன்விஷயம். (௨௨)

கரகரப்ரியை ராகம் ரூபகதாளம்.

பல்லவி

சுகந்தவனநாதாஉன்னைச் / சொந்தமாயெண்ணினேன்
என்னைக் / கைவிடலாமோ

அநுபல்லவி

ஜெகந்தனிற்சென்மம் / யுகந்தோறுந்தந்து
சுகம்போலவேயுஞ் / சுகம்போதும்போதும் (சுக)

சரணங்கள்.

அருமையாகிய / ஐயஇந்தளூரில்
மருவும்வேதசக்ரவி / மானமூரும் (சுக)

மருவினியமைந்தன் / மாசந்திரன்சாபத்தை
...ருபுறம்விலக்கு / மொழிநாசசிதாதனே (சுக)

கேளுமவரசயுடை / திமுக்குத்திருமுகத்தை
நாளுந்தெரிசிக்க / நயந்தெனையாட்கொளுன் (சுக)

சந்திரனுக்குப்பிரத்யக்ஷம் / சாமிநீயாலுயே
இந்துபுஷ்கரணிதீர்த்த / மென்றனைக்கிவாயே (சுக)

பாதகமியல்ல / தாதாவுமில்லை
மாதவனேயென்னை / வாதனைசெய்யாதே (சுக)

நற்குலசேகரன் / நம்பராலன்செய்
நன்மங்களாசாசனம் / நாடிநீகொண்டாயே (சுக)

தாசன்கிருஷ்ணசாமி / நேசனென்றெனை
கேசவனேயுன்றன் / நேசனுகப்பாராய் (சுக)



திருச்சித்திரகூடம் கோவிந்தராஜன்விஷயம். (௨௩)

காம்போதிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

வந்தனமுனக்கு / கோவிந்தராஜனே

அநுபல்லவி

சுந்தரயாத்வீசமான / ...
வந்தாதரிய / முகுந்தா வைகுந்தா (வந்)

சரணங்கள்.

தருசித்ரப்பொழில்சூழ் / திருச்சித்திரகூடந்தை
சரிசித்தப்பேர்களுமே / நித்த
மறுசித்தமில்லாமலே / பொருசித்தமாயுன்பத
மருச்சித்துனைமகிழ் / வண்டமொன்ற ... (வந்)

தேவர்கொலுவிருக்கு / ...
தேவசின்மூர்த்திபுக்காய் / விளங்கும்
பாவந்துடைத்தருளப் / புண்டரீகவல்லி...
மாவேதன்னையுமை / யாதிவரும்பெருமை (வந்)

ஆலமுண்டவன் / திவ்யமுனிவர்க்
காலங்கண்டமுனிவர் / தெரிசித்திடப்பரி
பாலனஞ்செய்தலே / சாத்விகவிமானமேயம்
சீலமேசுவாயா / ... (வந்)

குலசேகராழ்வாராலும் / ...டாறும்
பலமங்களாசாசனமடைந்தவே / நாளு
நலமாய்ப்புண்டரீகவல்லி / ...
...லவியிருக்கும்கோவே / கோவிந்தராஜதேவே (வந்)
அண்டபண்டமுண்ட / மனத்திரும்
அடியவர்க்காட்டாமலே / ...
தண்டமிழ்தென்னைத் / ...
அன்னையில்... கிருஷ்ண / சாமிதாசனையே (வந்)

---

காழிச்சீராமவிண்ணகரன்...விஷயம். (௨௪)

முகாரிராகம் அடதாளம்.

கண்ணிகள்

திருக்காழிச் / சீராமவிண்ணகரத்
தேவதாடாளனே / பாமபதாடாளனே
திருமங்கையாழ்க்காய் / நின்றநிருக்கோலக்

திகழும்பரஞ்சுடரோ　　அனுகாரதென்னிடமோ
மட்டவிழுங்குழலி　　நாச்சியாருடனே
மருவுந்திருவிக்ரமரோ　　வெளியாளும்பரமரோ
அட்டசோணமக　　ரிஷிக்குப்பிரத்யக்ஷ
மானதயாபரரோ　　யெனக்கென்றுங்க்ருபாகரரோ.
புஷ்கலாவர்த்தக　　விமானமேறி
புரப்பமெங்காரணரோ　　யருள்தருங்காரணரோ
விஷ்கஸேசங்கப்　　புஷ்கரணிதீர்த்தம்
நித்தமுமீவீரோ　　சக்ரதீர்த்தமுந்தருவீரோ
மங்கையாழ்வார்திரு　　மங்களாசாஸனம்
மகிழ்ந்துகொண்டீரோ　　என்கவியுங்கண்டீரோ
சங்கையில்கிருஷ்ண　　சாமிதாசனையுந்
தயாபரரேஇன்று　　யாண்டாலுமீசன்று

---

திருக்கூடலூர் வையங்காத்த பெருமாள் விஷயம். (உரு)

பியாகடைராகம் ரூபகதாளம்.

பல்லவி.

வாதுசெய்குவதேனோ வையங்காத்தபெருமாளே நீஇப்போது.

அநுபல்லவி.

பாதுகாத்திடவேறொருதெய்வமும்
பாரினின்றோவுனையன்றி யெனைக்காக்க　　(வாது)

சரணங்கள்.

ஆதிபரஞ்சுடரே　　திருக்கூடலூர்
அண்டினதாசர்க்குத்　　தொண்டருக்குச்செய்ய
நீதிநெறிமுறை　　யனில்லையுனக்கு
யிப்படிச்செய்தால்　　ஆரெப்படிச்செய்வார்　　(வாது)
[illegible]க்குமுகமாக　　நின்றதிருக்கோலம்
[illegible]　　முனிக்குப்பிரத்யக்ஷகாலம்
வழக்கமாய்மங்கைமன்　　வன்கவிக்கனுகூலம்
வாய்த்ததுபோலென்கவியை　　கொள்ளாதென்ப்ரதிகூலம்　　(வாது)
பத்மாசனவல்லித்　　தாயுடனீயிப்
பாரில்சுத்தசத்வ　　விமானமேறியே
சத்வசக்ரதீர்த்தப்　　பிரசாதமுமீயாமல்
சாமீயென்வினையைச்　　சதாகாலங்கொய்யாமல்　　(வாது)
அனையாசவந்தெனை　　யாதரியாயென்று
அனந்தர்த்தமாகத்　　தினந்தோறுஞ்சொல்லியுந்
தனையனுன்னென்றேன்　　கிருஷ்ணசாமிதாசன்
தந்தைநீயென்று　　சொந்தப்பாராட்டுவாய்.　　(வாது)



திருக்கண்ணங்குடி சாமளமேனிப்பெருமாள் விஷயம். (உசு)

செஞ்சுருட்டிராகம் ஆதிதாளம்

பல்லவி.

நாமதஞ்செய்யாதே　　மனமே

அநுபல்லவி

தேசமெத்தென்ன　　திருக்கண்ணங்குடி
போகனைக்கண்டு　　புகழ்ப்பூலவோகம்　　(நாம)

சரணங்கள்

வழக்கமாயவிந்த　　வல்லிநாய்ச்சியுடன்
கிழக்குமுகமாகக்　　கேசவனின்றனன்　　(நாம)
கௌதமமுனிக்குங்　　கணப்ருஹஸத்யர்க்குங்
கௌரவமாகவே　　காக்ஷியைத்தந்தவன்.　　(நாம)
உத்பலவிமானத்　　தாலயம்ராகவன்
சித்தனர்கவியன்　　செய்கவிபெற்றவன்　　(நாம)
ராமாராமாவென்று　　ராவணபுஷ்கரணியில்
சேமந்தாய்த்தோய்ந்து　　சித்தந்தனில்நிடத்　　(நாம)
தாசன்கிருஷ்ணசாமி　　தனையனுகவே
தேசவனென்னிய　　கேசவம்ரக்ஷிப்பன்　　(நாம)

---

திருக்கண்ணமங்கை பக்தவத்ஸலப்பெருமாள் விஷயம். (உஎ)

செஞ்சுருட்டி ராகம் சாபுதாளம்.

பல்லவி.

பார்த்தால்கலிதீரும்　　பக்தவத்ஸலப்பெருமாளை

அநுபல்லவி.

காத்தால்கதிதருந்திருக்　　கண்ணமங்கைநாதனை　　(பார்)

சரணங்கள்.

நின்றுகிழக்குமுகமாய்　　நிர்மலமங்கைமன்னன்
அன்றுமங்களாசாஸனை　　மங்கிகரித்தவனை　　(பார்)
வருணனுரோமசன்முன்　　வந்துப்ரத்யக்ஷமானோன்
அருணத்துத்பலவிமானக்　　தானேநிவருப்பவனை　　(பார்)
பரிசனவபிஷேகவல்லி　　பாதந்தாமரைச்சேவை
தரிசனபுஷ்கரணிதீர்த்தந்　　தானளித்திடுந்தேவை　　(பார்)
ஆலிலைமேற்றுயில்　　தாசிகிருஷ்ணசாமியை
காலியின்பின்திரிந்த　　கண்ணபிரானெந்தையை　　(பார்)

---

திருக்கவித்தலம் கஜேந்திரவரதர் விஷயம். (உஅ)

கமாஸ்ராகம் ஆதிதாளம்,

பல்லவி

காவென்றேனெனைவந்து　　காத்திடலாகாதா　　கஜேந்திரவரதா

அநுபல்லவி.

பாவினங்கொண்டுமுனைப் பாடநாதனல்லேன்
பார்க்கயர்ந்திமாறி சேடனுவாயிரமில்லேன் (கா)

சரணங்கள்.

பெற்றபிள்ளைசெய்குற்றத்தைப் பெற்றதாய் பொறுப்பதல்லால்
மற்றவர்பொறுப்பரோ மனந்தேவா
அத்தனே திருக்கவித்தலத்தானே யுனையண்டினேன்
அடியேனை யிப்போதேகாவா
எத்தனைவிதத்திலுனை நத்தினேனாபத்பாந்தவா
யுனையுன்திருவடிக்கே பத்தனாகச்செய்திடவா (கா)
ககனாக்ருதிவிமானசேவை கஜேந்த்ரபுஷ்கரணி
கபிலதீர்த்தமுந் தருவாயே
ககனத்தோரறியவேப்ரத்யக்ஷங் கஜேந்த்ரர்க்குந்
கனவாஞ்சனேயர்க்கு மாருயே
ஜெகமதில்திருமழிசை செயுமங்களாசாஸனஞ்
சேமாய்க்கொண்டாயே கனயவலங்கண்டாயே (கா)
புகழூரம்பிழக்காய் புஜங்கசயனமீதிற்
பொற்றுமணையாள் ஈசயணிமிருவோருந்
தகமையாயடிவருட தாசகோடிகளுந்
தான்கன்வளருந் தேவேவாடாய்
மகரியற்றுமறையோர் மறையோதஜமுன
மாதவலடிவைத்தாரு மனமுகந்தருட்கவ்பாராய் (கா)
அண்டசராசர மகைத்துமுன்னுருவினில்
அடியேனைச்சிந்தருவா யனமத்திருப்பனையதியாயோ
கண்டபடியிழுத்தென்னைக் கலங்கச்செய்தாலுமுன்
கருத்துங்கல்குமென்னங் குறியாயோ
அன்னடையிலையுந்தக் கிருஷ்ணசாமிதாசனையாளாயோ
தொண்டனுக்செய்துமுன்றன் சொற்படிநடந்திடாயோ (கா)

---

திருவெள்ளியங்குடி கோலவில்லிராமன் விஷயம் (உக)

தன்யாசி ராகம் ஆதிதாளம்

பல்லவி.

கோலவில்லிராமனைக் கோருவாய்மனமே

அநுபல்லவி.

கோலவில்லிராமனைக் நீலமேகஸ்யாமனை
சீலவாதிராமனைக் கோருவாய்மனமே (கோ)

சரணங்கள்

திருவெள்ளியங்குடி தேவதேவனைப்படி
சென்கத்தேறுவதெப்படி கோருவாய்மனமே (கோ)



மாபவன்செல்வி மகிழ்வாய்மாதகவல்லி
மாபதந்தருவள்சொல்லி கோருவாய்மனமே (கோ)
வர்த்தகபுஷ்பகவிமானம் வானவர்க்குண்டோசமானம்
கர்த்தனருளோபிரதானங் கோருவாய்மனமே (கோ)
சுக்ரபுஷ்கரணிதீர்த்தம் சங்கரும்பிரமதீர்த்தம்
இக்ருரசமானக்ஷேத்ரங் கோருவாய்மனமே (கோ)
கிழக்கேதிருமுகனங் கிடரும்புஜங்கசயனம்
வழக்கமாயேதவர்வயனம் கோருவாய்மனமே (கோ)
சுக்ரபாரசருக்குஞ் சுகேசனவன்றனக்கும்
எக்காலமும்பிரத்யக்ஷங் கோருவாய்மனமே (கோ)
மங்கைமன்னன்கவி மகிழ்ந்துகொண்டனாய்புவி
யெங்குந்திப்போர்க்குதவி கோருவாய்மனமே
அஷ்டதிசையீசனை கிருஷ்ணசாமிதாசனை
இஷ்டமாயவரூர்ஈசனை கோருவாய்மனமே (கோ)

---

திருமணிமாடக்கோயில் நந்தாவிளக்குப்பெருமாள் விஷயம் (கூ0)

தன்யாசி ராகம் ஆதிதாளம்.

பல்லவி

நந்தாவிளக்குப்பெருமானே நாளுமென்னருளடைவதெந்நாளோ

அநுபல்லவி.

எந்தாயுனையல்லது வந்தாதரிப்பவரார்
நந்தகந்தனகோ விந்தாவெனையாளே

சரணங்கள்

கண்ணால்காண்பதல்லவோசாக்ஷி ப்ரணவவிமானம்
கண்டவர்சொல்வ தல்லவோசாக்ஷி
கண்ணனுக்குருந்துகியே கவலைகொண்டேனன்றியே
என்னுமெழுத்துகியே யிடர்தவிர்த்தாளுவாயே (நந்)
நாராயணாவென்றல்போதா மென்பர்
நானழைப்பேனே யெப்போதும்
வரவேணும்புண்டரீக வல்லிநாச்சியாருடனே
வரமங்கைமன்கவிபோ லென்கவிகொள்ளவுன்கடனே (நந்)
ஏகாதசருத்திரர்ந்திரர்க்கும் பிரத்தியக்ஷம்
எழிலுடனு யிருந்தாயே
பாசாமிர்தருத்ர பலபுஷ்கரணிதீர்த்தம்
பாதரேணுவையும் பாங்குடன்தருவாயே (நந்)
கேசவாகீயிற்றிருக்குங் கோலங்கிழக்குமுகம்
கிருஷ்ணசாமியே யிதென்னஜாலம்
மாசகல்திருமணி மாடக்கோயிலைப்பணி
மாதவர்தொழுமணி மலர்த்தாளென்சிரமணி (நந்)

திருவைகுந்த விண்ணகரம் வைகுந்தநாதன் விஷயம். (கக)

காம்போதி ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

வந்தனஞ்செய்தேனென் றுசொல்லடி சாமிக்குநான்

அநுபல்லவி.

விந்தையாந்திருவைகுந்த விண்ணகரில்வீற்றிருக்குஞ்
சுந்தரமுகங்கிழக்காய் ஜொலிக்கும்வைகுந்தருக்கு (வந்)

சரணங்கள்.

அனந்தசத்தியவர்த்தக வனிவிமானமீதினடி
யருள்விழிவைகுந்தவல்லி யம்மைநாச்சியுடன்கூடி
கனவுதங்கபுஷ்கரணி விரசைதீர்த்தங்கைகொண்டோடி
கண்ணன்வாராதேனோ காண்கிலேனடியேசேடி (வந்)
உபரிசரவசுவுக்கும் உதங்கமகரிஷிக்கும்
உடனேபிரத்தியக்ஷமானோ ருல்லாசபாகாலன்கவி
அபரிமிதமாய்க்கொண்டு அவர்க்குத்தந்தார்பதவி
அவனொன் மயல்தீர்க்கவாரா தடுக்குமோ விப்புவி (வந்)
பசும்பொன்னுடையிலங்கப் பாம்பின்மேலாடுவார்க்கு
பாலைத்திருடியுண்டு பாம்பணைமேற்படுப்பார்க்கு
விசும்பில்தேவர்யாவர்க்கும் விஞ்சைவித்தைகாட்டுவார்க்கு
வேணுகானத்தையூதி விநோதநடனஞ்செய்வார்க்கு (வந்)
கந்தமளாவுங்கொங்கை கனத்துமிகவிம்முதடி
காலையுமாலையும்விரகக் கனல்மீறிவாட்டுதடி
சுந்தரக்கிருஷ்ணசாமியென் சொல்தவிராதென்றேனடி
சொல்தவிரநடப்பாரோடி சோதித்துவாடிமுன்னேடி (வந்)

திருவரிமேய விண்ணகரம் குடமாடு கூத்தர் விஷயம். (கஉ)

ஆனந்தபைரவி ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

குடமாடுகூத்தரேவாரீர் கோடிசரணங்
கொண்டுமென் கவலையைத்தீரீர்

அநுபல்லவி

இடமாமயிர்தகட்வல்லி நாச்சியுடனே
திவ்யவுச்சஸ்ர்ங்கவி மானமேறிவரக்கடனே (குட)

சரணங்கள்.

கோடியமுர்தநீர்த்தந்தருவீரே கும்பிட்டேனென்றன்
கோடிபாவங் குலையச்செய்வீரோ
பாடிப்பணியக்கிழக்குப் பண்பாய்வீற்றிருந்தீரே
நாடிமங்கையன்னன்கவி நன்மையாய்ப்பெற்றீரே. (குட)



உதங்கமகரிஷிக்குந்தந்தீரே பிரத்தியக்ஷமதை
உகந்தெதனையானாதென் மறந்தீரோ
பதங்கன்வம்மிசந்தன்னிற் பாராளப்பிறந்தீரோ
பணிவேனைட்போதமுன் பதசேவைதருவீரே. (குட)
கருமுகில்போன்மேனிகொண்டீரோ உனைநம்புமென்
கருத்தையவலம் கண்டீரோ
திருவரிமேயவிண்ணகரின் திருவீராதனைகொண்டீரோ
தரும்வரங்கள்தாராமலும் தருமநெறியைவிண்டீரோ (குட)

திருத்தேவனூர்தொகை தேவநாயகர் விஷயம். (கக)

தன்யாசிராகம் ஆதி தாளம்.

பல்லவி

எந்தரேவிமருந்திட்டாளோ என்றன்தேவநாயகர்க்கு

அநுபல்லவி.

அந்தநாள்முதலென் அண்டையில்வாராமல்
பந்தப்படுத்தியென் பஞ்சணைச்சேராமல் (எந்)

சரணங்கள்

எந்தன்வளையவட் டிடிக்காமற்போகாது
எப்போதுஞ்சக்களத்தியின் கொடுமையாகாது
சிந்தைதரும்விதியைத் தடுத்திடலாகாது
சித்தசன்கணையைநான் வெறுத்திடப்போகாது (எந்)
வதனமேற்காகவே நின்றதிருக்கோலம்
வசிஷ்டருக்குப்பிரத்தியக்ஷ மந்தகாலம்
சதமாய்மங்கைமன்னன் சாஸனந்திறக்குகூலம்
சாமிசெய்தாரோயெனக்குஞ் செய்வரோபிரதிகூலம் (எந்)
கடல்மகளுடன்கூடி களிப்பாவிளையாடுவாரோ
கவனமாய்சோபனதேவ சபாதீர்த்தந்தருவாரோ
திடமாய்சோபனவிமான மேறிவருவாரோ
தெரிவேனவொன்னைத் திருவருள்தந்தனைவாரோ (எந்)
மருவத்தேவனூர்த்தொகை பதிவரவழைப்பாரோ
மணிபூஷணம்பா மகிழ்ந்துடனேவாரோ.
மறுபடியுமென்றன் மனைக்கவர்வருவாரோ
மறுமையிலாதிலுமெனை மருவிச்சுகந்தருவாரோ (எந்)
சின்னஞ்சிறுவயதி லென்கையைப்பிடித்தார்க்கு
சிங்காரகருடனேறிச் சித்திரவீதிவருவார்க்கு
உன்னைப்பிரியேனென்று உறுதிமொழியுரைத்தார்க்கு
உத்தமகிருஷ்ணசாமி எனுமென்றுயகனுர்க்கு (எ௩)

திருவண்புருஷோத்தமம் புருஷோத்தம பெருமாள்விஷயம். (௧௪)

காம்போதி ராகம் அடதாளம்

பல்லவி

தயவின்னமில்லையா உனக்கென்மீதில்
தருமமிதென்ன சொல்லையா

சரணங்கள்.

பயமில்திருவண்பரு ஷோத்தமந்தனில்வாழும்
பரனே பரனே பரனே யென்றலறவும் (தய)
வண்புருஷோத்தமப் பெருமானேயுன்னையான்
வரதா வரதா வரதா வென்றலறவும் (தய)
சஞ்சீவிக்காவிமானமேறி சஞ்சீவிராயருடன்
சாமிவா சாமிவா சாமிவா வென்றலறவும் (தய)
திருப்பாற்கடலெனும் தீர்த்தப்பிரசாதந்தா
தேவே தேவே தேவே யென்றலறவும். (தய)
நின்றனையேகிழக்காக நின்முகச்சேவைதா
நெடுமாலே நெடுமாலே நெடுமா லென்றலறவும் (தய)
புருஷோத்தமாயகியுடன் புருஷோத்தமாவென்று
புண்ணியனே புண்ணியனே புண்ணிய னென்றலறவும். (தய)
உபமன்யுவுக்குப்பிரத்தியக்ஷ முகந்தானதுபோலாக
ராகவா ராகவா ராகவா வென்றலறவும் (தய)
திருமங்கையாழ்வார்கவிகொண்டாற் போலென்கவிக்கொள்ளத்
திருமாலே திருமாலே திருமா லென்றலறவும் (தய)
கிருஷ்ணசாமியேயுனைக் கேவலகாலம்பிலே
கேசவா கேசவா கேசவா வென்றலறவும் (தய)

திருச்செம்பொன்செய்கோயில் பேரருளாளர்விஷயம் (௧௫)

பியாகுராகம் ரூபகதாளம்.

பல்லவி.

பேரருளாளனெனும்பேர்வந்த பெருமையைப்பார்க்கும்
எனக்குன் பேரருள்தரும்

அநுபல்லவி.

பேரருளாளனே பாராமலிட்டீரே
பாராய் சேராய் சேராய் வாராய் (பேர)

சரணங்கள்.

திருச்செம்பொன்செய்கோயிற் சேர்ந்தருத்திரனுக்குச்
சேவையைத்தந்தாயே திருமுகங்கிழக்காய்நின்றாயே
திருமங்கைமன் சாசனங்கொண்டாயே
சீரும் சிறும் பேரும் தாரும். (பேர)



கனகவிமானத்தி லக்ஷிமாமலர்
நாய்ச்சியுடன்கலந்து நித்யகனகதீர்த்தமுந்தந்து
பனகசயனனே பாதுகாத்திடுங்கான
லோலா வாதி மூலா சீலா (பேர)
இந்தசென்மந்தந் நீடழியவிட்ட
திதுவுன்றர்மமா வல்லதிதென்கர்மமா
பந்தபாசத்தினை நீந்தமட்டும்போதும்
பாக்யம் போக்யம் வாக்கிய லோக்யம் (பேர)
துவாரகாவாசனே கிருஷ்ணசாமிநீ
சோதித்திடப்போருமா சோதித்திடலாகுமா
துவாதசநாமத்தின் பெருமையைத்தந்தாயே
ஆதர வாதா ஓதாய் நாதா (பேர)

திருத்தெற்றியம்பலம் செங்கண்மால்விஷயம் (௧௬)

சஹானாராகம் அடதாளம்

பல்லவி.

திருத்தெற்றியம்பலச் செங்கண்மாலேயுனை
தெரிசித்திடச்செய்வாய் ஸ்ரீசங்கமாலே. (திரு)

அநுபல்லவி.

ஒருசித்தமாயுன்பதம் உலகிலனுதினமும்
அருச்சித்திடச்செய்வாய் ஹரிஹரிநெடுமாலே (திரு)

சரணங்கள்.

செங்கமலவல்லியுடன் சேவைதரவருவாயே
செங்கையால்சூர்யபுஷ்கரணி தீர்த்தமுந்தருவாயே (திரு)
மாதவமென்செய்தனை ஓதவருள்புரிந்தாய்
மாதவாவரந்தரமறந்தாய் வாதாரூதாநாதா (திரு)
மங்களாசாஸனந்திரு மங்கையாழ்வார்செய்தார்
செங்கமலவல்லியநந்தன் தெரிசித்துவினைகொய்தார் (திரு)
வேதவிமானமேறி வீதிவரக்கண்டார்
பாதரேணுவைப்பெற பாக்கியமென்செய்துகொண்டார் (திரு)
கேடிலாவிணையிற் கிழக்குமுகம்படுத்தாய்
நாயென்கிருஷ்ணசாமிதாச ருயிரறுதிக்கவடுத்தாய் (திரு)

திருமணிக்கூடம் மணிக்கூடநாயகர் விஷயம் (௧௭)

காம்போதிராகம் ஆதிதாளம்

பல்லவி.

வாடா துரையேழுந்தந் தாடாவெனக்கிப்போது
நடா யிருக்கிறாய்

அநுபல்லவி.

நாடாளுமணிக்கூட காயகனேயுன்னைவிட்டு
நாடேனொருவனைக்கூடேன் நீமெய்யாணிக்கஞ்செய்வேன் (வாடா)

சரணங்கள்

திருமணிக்கூடத்திலே சித்ரப்பதுமைபோலுமுன்
பக்கத்திலிருந்து சித்திரலீலைசெய்குவேன்
மருமலரணைமீதில் மணமுகந்தென்னை நீ
மருவிச்சுகந்தர இதமுற நலம்பெற (வாடா)
திருமாமகளுடனே திகழ்கனகவிமானமீதில்
சிங்காரமாய்வரும்போதுன் கனிதிர
அருமையாமறுகுடனே சந்திரபுஷ்கரணிதீர்த்தம்
அலங்காரமளித்துன்னுடன் களித்துமேநானிருப்பேன் (வாடா)
பெரியதிருவடிக்குஞ்சந்திரனுக்கும் பிரத்தியக்ஷமாய்
ப்ரபலமுகங்கொடுக்கிறாய் நின்றிடவாளுய்
உரியதிருமங்கையாழ்வார் மங்களாசாசனமுனைக்
கொத்தபடிபாடிய வாடிபுகழ்ந்துகொண்டிருப்பேன் (வாடா)
நாடிக்கிருஷ்ணசாமியேநீ தேடியசரணங்களில்
கூடினமட்டென்றுநான் கூடியிருப்பேன்
சேடித்துவிரகமெல்லாப் பிடித்திருப்பதேயோடி
செய்யாதேமனதில் கபடம் வையாதே யிப்போதேயோடி (வாடா)

---

திருக்காவளம்பாடி கோபாலகிருஷ்ணன்விஷயம். (கூஅ)

சங்கராபரணம் அடதாளம்.

பல்லவி,

சாமிவாராய் சாமிவாராய் சரசகோபாலகிருஷ்ண

அநுபல்லவி.

சாமிவாராய் சாமிவாராய் சாயுஜ்யபதந் தந்தருள்பாராய் (சாமி)

சரணங்கள்.

திருக்காவளம்பாடிவாசா திவ்யார்ச்சனமங்களதேசா
செருக்காவளந்தாருநல்லாசாதேஜோன்மயனே திவ்வியபிரகாசா (சாமி)
மடவார்மங்கைநாய்ச்சியோடு மாதுசெங்கமலநாச்சியுடன்
இடசுவயம்புவிமானமேல்வாராய் திவ்யதடமலர்ப்பொய்கைதீர்த்தந் தந்தாராய் (சாமி)



சேனைமுதலி ருத்ரர் மித்ரதேவர்க்கும் சேவைதந்துமுகஞ்சிறக்காய்நின்றாயே
ஆனையழைத்திடவுதன்முன்வந்தாயே அன்பாயிமங்கைமன்பாடல்கொண்டாயே (சாமி)
காரதுவந்திதபாதா நாலாயிரப்பிரபந்தவேதா
பாரதமுடித்தகீதா பாலகிருஷ்ணசாமிநாதா (சாமி)

---

திருவெள்ளக்குளம் கண்ணன்நாராயணன்விஷயம். (கூக)

அடாணுராகம் ஆதிதாளம்.

பல்லவி.

கண்ணுவெனைக்காத்தருள் மணிவண்ணு கனகாம்பரதரனென்னும்

அநுபல்லவி

அண்ணுவெனக்குமனம் புண்ணுகப்பண்ணலாகா
என்னுடையெனையிப்போது ஈழில்முகில்வண்ணனே (கண்)
பாடேன்வேறொருபொருளையும் யான்தேடேன்
உன்பதி மலரல்லது
கூடேனொருதெய்வத்தைக் குவலயத்தனில்யான்
நாடேனையாட்கொளு நாதவேணுகானலோலா (கண்)
நாதாநல்லவர்தொழு மலர்ப்பொற்பாதா
நாலாயிர வேதா
வாதாதத்வபோதக விமானத்தின்வாலாகாதா
மீதாம்வெள்ளக்குளத்தீர்த்த மிகவுந்தாப்போகாதா (கண்)
சலிக்கிழக்குமுக நின்றதென்னகோலம்
சாமிபிரத்யக்ஷ காலம்
சிலசுவேதராஜனுக்கும், ருத்ரனுக்குமனுகூலம்
செய்தாயேயெனக்குநீ செய்யாதேபிரதிகூலம் (கண்)
கண்டாய்கலியன்செய்திதை கவிகண்டாய்
அக்கருணையு முண்டாய்
தொண்டாய்உன்திருவடி தொழுதிடச்செய்வாய்
பண்டாயவினைகளைப் பழுதறச்செய்வாய் (கண்)
நசாதிருவெள்ளக்குளமதில் வாசா
மதில்பூவார்திரு மகள்நேசா
கேசவஸ்ரீஹரி கிருஷ்ணசாமிஜோகநேசா
கேவலமாக்ஷிமிதக் கிரௌரணமனுவல்லசா (கண்)

---

திருபார்த்தன்பள்ளி தாமரையாள்கேள்வன் விஷயம். (சு0)

நேருப்திராகம் அடதாளம்.

பல்லவி

தாமரையாள்கேள்வனெனக்குத் தருவானென்றிருந்தேனே.

அநுபல்லவி

ஆமறைமுதலண்டருங்காணுத அற்புதமாகியபரமபதம் (தாம)

சரணங்கள்

திருப்பார்த்தன்பள்ளியான் எழில்திருப்பாற்கடற்பள்ளியான்
தரும்பதசேவையுந்தாமரைநாயகி தாராளமாய்தருந்தனதன்செ
[ல்வமும்] (தாம)
தேவகிபாலன்நாராயண திவ்யவிமானசீலன்
மூவுலகோர்திருமங்கையாழ்வாராலு முறையிடுந்தன்னடியிரண்
டும் (தாம)
அண்டமளந்திட்டவன் அதையுண்டுமுமிழ்ந்திட்டவன்
அண்டர்தொழுமேற்கேகின்றகோலமும் அருள்தொண்டருடன்
( குழும்பரதாபமும் (தாம)
ஏகாதசருத்ரருக்கும் எழிலானபார்த்தனுக்கும்
வாகாய்ப்ரத்யக்ஷமாய்வருணனுக்குமுன்னே வந்துரட்சித்த
[வாசுதேவன்பதம்] (தாம)
கேசவாவதாரன்சங்கசரஸ்வடை கிருஷ்ணசாமிதிரன்
தேசங்கள்தோறுமலர்ந்திடாமல் திவ்யபோசனபூஷணாலங்காரம்

சோழநாட்டுத்திருப்பதிகள்.

முற்றும்.

—oo:o:oo—

# பாண்டியநாட்டுத் திருப்பதிகள். ௰அ

## திருமாலிருஞ்சோலைமலை அழகர்விஷயம் (சக)

சமாக - ராகம் - ஆதிதாளம்.

பல்லவி

நடானதுரையல தொருவரில்லையே என்சாமிஅழகனே

அநுபல்லவி

வாடாஅணைக்துமுத்தந் தாடாஎன்னுடன்விளை
ஆடாய்கூடாயுனக்கு சோடாயிருக்கிறேன் (நடா)

சரணங்கள்

திருமாலிருஞ்சோலைமலை மாலலங்காரனே
சோராய்கலவிசுகந்தாராய் வாராயிப்போது (நடா)
மலையத்வஜபாண்டியனுக்கும் தர்மதேவனுக்குமுன்னே
மாதவப்ரத்யக்ஷமான மனமுகந்தெனைக்கூட (நடா)



சுந்தரவல்லிநாச்சியுடன் சிலம்பாற்றுத்தீர்த்தங்கொண்டு
சோமசுந்தரவிமானமேறி வாராயென்கவலையைத்தீராய் (நடா)
சாரும்ரிஷபகிரியின் சாசமுகங்கிழக்காய்நின்றாய்
சாமியெனைச்சேரவாராய் சந்தனவிருக்ஷத்தின்கீழே (நடா)
நம்மாழ்வார்பெரியாழ்வார் நல்லதிருக்கலியன்ஆண்டாள்
நங்கள்குலசேகரர்கோன் நற்கவிகொண்டவுனக்கு (நடா)
கிரீடைவிளையாடல்செய்யக் கிருஷ்ணசாமியல்லது
கோளாய்வேறேயொருவ ராரேயிருக்கிறார் (நடா)

## திருக்கோட்டியூர்ஸௌம்யநாராயணன் விஷயம். (சஉ)

சங்கராபரண ராகம் அடதாளம்

பல்லவி

ஸௌம்யநாராயணனே சரணஞ்செய்தேன்

அநுபல்லவி

சௌனகாதிமுனிவர்சதா பஜிக்கும்நாராயணனே (ஸௌ)

சரணங்கள்

திருக்கோட்டியூரில்நின்றாய் திருமுகங்கிழக்காகத்தேவே
இருந்தநடந்தாங்கிடக்கு மெழிலாய்கூத்தாங்கோவே (ஸௌ)
இஷ்டமாய்தேவபுஷ்கரணி இனியதீர்த்தந்தருவோனே
அஷ்டாங்கவிமானமேறி அடியாரைக்காக்கவருவோனே (ஸௌ)
கதம்பமஹர்ஷிக்கும் கனவிந்திரர்க்கும்பிரத்யக்ஷம்
இதமாயாளுமென்னை விடலாமோபிரதிபக்ஷம் (ஸௌ)
பெரியாழ்வார்பூதத்தாழ்வார் பேயாழ்வார்மழிசையர்கோன்
உரியபரகாலன்கவி யுகந்தாயென்னையாளாய் (ஸௌ)
கேசவநாராயணா கிருஷ்ணசாமிதாச
வாசவிருதயவாளாய் வரதாவேங்கடேச (ஸௌ)

## திருமெய்யம் சத்தியகிரிநாதர்விஷயம். (சங)

சஹானாராகம் அடதாளம்.

பல்லவி

பாரடிவிவர்கட்கும்மைகள் பரிந்தழைக்குஞ்சாடைகள்

அநுபல்லவி

போடிசத்தியகிரிநாதனென்று பேரிட்டழைத்தவரோடி (பார)

சரணங்கள்.

காரடிமேனிசத்யகிரிவிமானமேறும் கள்ளபிரானிவரமோடி
ஊரடிதிருமெய்யம்வரும்படி உகந்தழைக்கிறீரேன்சேடி (பார)

சத்தியதேவதைகட்குச் சத்தியகிரியோரமே
நித்தம்பிரத்யக்ஷமுகம் கிழக்காய்நிற்பவராமே (பார)
உய்யவந்தாள்களவர் உலகில்கலியன்கவிகொண்டவர்
பய்யரவணைக்கிரும்பலா விருக்ஷத்தின்கீழேயே (பார)
கதம்பபுஷ்கரணியுங் கனசத்தியதீர்த்தமும்
இதம்பெறுங்கனிரே இனித்தருவேனென்கிறார் (பார)
மாயக்கிருஷ்ணசாமியெனை மடிபிடித்திழுக்கிறார்
ஞாயஞ்சொன்னபோதிது நான்விடேனென்கிறார் (பார)

---

## திருப்புல்லாணி தெய்வச்சிலையார்விஷயம். (௪௪)

இந்துஸ்தானி ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

ஹரிதெய்வச்சிலையரே தெய்வச்சிலைநாச்சியுடன் சேவைதாருமெனக்குநீர்

சரணங்கள்.

செய்வதொருபொரு ளுமக்கென்றறியேன்
தெரியச்சொல்லுங்கலியாண ஜெகநாதரேசிறியேன்
உய்யவிவ்வகையெனக் கல்யாணநாச்சியுடன்வந்
தோதுவீரோ எனக்கோதுவீரோ (ஹரி)
திருப்புல்லாணியில் கின்றமுகங்கிழக்காய்
தேஜதர்ப்பசயநத்தின் மீதாளுமமேக்காய்
இருப்பவரேகல்யாண விமானமேறிவந்
திப்போதேயாளுவீரோ எனையாளுவீரோ (ஹரி)
சக்கிரவர்த்திதிருமகனாய் சமுத்திரராஜனுக்குஞ்
சகசமாய்வரங்கொடுத்த விடமதின்செருக்குஞ்
சக்கிரதீர்த்தமேமதீர்த்த மிகத்திடப்பெருக்குஞ்
சாமிசொல்வீரோ என்முன்வந்துநிற்பீரோ (ஹரி)
புல்லாரணியக்ஷேத்திரத்தில் அச்வத்தவிருக்ஷத்தின்கீழ்
புகழுமங்கைவேந்தன்கவி புண்ணியரேகொண்டீரோ
புல்லாரணிமகரிஷிக்கும் அச்வத்தநாராயணற்கும்
பொலியபிரத்யக்ஷமானீரோ எனக்குமப்பக்ஷமாவீரோ (ஹரி)
கேசவஹரிநாராயணரே கேளுங்
கிருஷ்ணசாமிதாசனை வந்தேயாளும்
தோஷரகிதஞ்செய் தமைத்தொழுதிட
வரக்தாருணமையரே வந்தாண்டருளுமெய்யரே (ஹரி)

---

## திருத்தண்காலூர் அப்பன்விஷயம். (௪௫)



இந்துஸ்தானி கத்துகருட்டி ராகம் சம்படதாளம்.

பல்லவி.

திருத்தண்காலூரப்பனேகேளாய் தேவதேவனேவந்தெனையாளாய்

அநுபல்லவி.

பெருத்தக்கடலுக்கோ ரிணைகட்டினையே
என்பிறவிக்கடலுக்கோ ரிணைகட்டிலையே (திரு)

சரணங்கள்.

தேஜமுகங்கிழக்காய் சேவைதருகின்றயே
திருமங்கைமன்கவிபோ லென்கவிகொள்ளென்றுயே (திரு)
அன்னநாயகியுட னுய்ச்சியர்நால்வராமே
அநந்தநாயகியுடன்வந் தென்னையாளலாமே (திரு)
ஸ்ரீவல்லபனுக்குஞ்சல்லிய பாண்டியனுக்குமம்புலிக்கும்
க்ஷேமமாய்ப்பிரத்யக்ஷமான உன்புகழ்ஜொலிக்குக் (திரு)
தேவசந்திரவிமான மேறியேவாராய்
தேவபாபவிநாசத் தீர்த்தத்தைத்தாராய் (திரு)
பத்துப்பிறவிமாற்ற வகையறிந்தாயே
நான்பற்றும்பிறவிமாற்ற வகையறியாயே (திரு)
கேவலச்சவரிகனி பக்ஷித்தாயே
இப்போதுகிருஷ்ணசாமி தாசனைரக்ஷிப்பாயே (திரு)

---

## திருமோகூர் காளமேகப்பெருமாள்விஷயம். (௪௬)

சங்கராபரண ராகம் சாப்புதாளம்.

பல்லவி

காளமேகப்பெருமானே ஸ்ரீஹரிஹரி

அநுபல்லவி.

காளமேகப்பெருமானே மேகவல்லிசமேதனே
தாளசமனதினே கேளாயென்கவலையை (காள)

சரணங்கள்

நாதாதிருமோகூர்வல்லி விநோதாவெனக்கருள்
தாதாகேதகவிமான சமேதாஸ்ரீஹரிஹரி (காள)
சுத்தாவெருமை னதாருணமுகநின்ற
பதாம்புஜசேவை சதாவளித்திடாய் (காள)
க்ஷீராப்திபுஷ்கரணி கோராப்தியைத்தணிக்கும்
நேராப்திபமேனை சீராப்தயையணைக்கும் (காள)
அஜருத்ரேந்திராதிகளுக்கு நிஜமாய்பிரத்யக்ஷமாய்
அஜாமீளனையுங் கஜேந்திரனையும்ரக்ஷித்த (காள)
சசாகம்மாழ்வார்கவி நேசாமங்கைமன்மன
வாசாகிருஷ்ணசாமி தாசபோஷஸ்ரீ (காள)

## திருக்கூடல்தென்மதுரை கூடலழகர்விஷயம். (சஎ)

ஆனந்தபைரவி ராகம் ரூபகதாளம்.

பல்லவி.

கூடலழகரேசேர்வாருமே என்சாமி

அநுபல்லவி

தேடலரியதிருக்கூடலூர் தென்மதுரைவாசஸ்ரீஹரி

சரணங்கள்.

கோங்கலர்குருந்தமொசித்த கோபாலவஷ்டாங்கவிமானரே
நான்கவலைகொண்டழைத்திட நாடாதிதேனோ
பாங்குடன்பெரியாழ்வார்பிருகுவுடன் பரிவுடன்சௌநகாதிகளுக்கும்
பிரத்யக்ஷமானீரே ஓபரந்தாமரே சகஸ்திரநாமரே
ஹரிசகுணதாமரே (

திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார்
திகழும்பெரியாழ்வார் தேஜவாண்டாள்செயும்
மருமலர்த்தொடையு மங்களாசாஸனம்
மகிழ்ந்துகொண்டீரே அனையுமுண்டீரோ என்கவியுங்கண்டீரோ (கூட)

ஹேமபுஷ்கரணி இன்பசக்ரதீர்த்தமு
மெழில்முசுங்கிழக்காய்வீற் றிருக்குங்கோலமுந்
நாமதமில்லாமல் தரிசிக்கும்படியாகத்
தயவினிபாரும் உன்னருளையுந்தாரும் என்வினையுந்தீரும் (கூட)

பலமுடையசகடுதைத்து பரவையின்வாய்கிழித்தெதிர்த்து
பாலகிருஷ்ணசாமி பார்த்தசாரதிநீரே
கலவாருணவருளமரதக கன்மதுரைவல்லிநால்வருட
னேசமேதரோ வந்தருள்கிருபாகரரே ஹரிசுபாகரரோ (கூட)

---

## ஸ்ரீவில்லிபுத்தூர் ரங்கமன்னார் வடபத்திரசயனர்விஷயம். (சஅ)

மோஹன ராகம் சம்பைதாளம்.

பல்லவி

ரங்கமன்னாரிவராம் ராஜராஜகோபாலராம்

அநுபல்லவி.

அங்கஜனையளித்தஸ்ரீஹரி ஹரிஹரியாதிமூலராம் (ரங்)

சரணங்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூர்வாசராம் திவ்யசம்ஸனவிமானராம்
ஸ்ரீசோதைநாய்ச்சிசமேதராம் தேவதேவர்க்குமீசராம் (ரங்)
திருமுசங்கிழக்காய்நிற்பவராம் திவ்யவாண்டாள்கவிபெற்றவராம்
திருமுக்குளதீர்த்தந்தருபவராம் திகழ்பெரியாழ்வார்க்குரியவராம் (ரங்)
பெரியாழ்வார்மங்கேர்க்குப்பிரத்யக்ஷராம்பெருமையாங்கௌஸ்து
[பமணிவக்ஷராம்



பெரியதிருவடிக்குப்பக்ஷராம் பேதையென்கவிக்குமதேபக்ஷராம்
(ரங்க)
பாலகிருஷ்ணசாமியார் பக்தவத்சலரேயியார்
மூலகாரணமானவர் என்முறையைக் கேட்கவுங்காரணர்
(ரங்க)

114.04

---

## ஆழ்வார்திருநகரிதிருக்குருகூர் ஆதிநாதர்விஷயம். (சகூ)

மோகனராகம் ஆதிதாளம்.

பல்லவி.

கேளுமாதிநாதரோயாதிநாத வல்லியுடன்வாருமாதிநாதரே.

அநுபல்லவி.

கேளுங்கோவிந்தவிமான மேறிவந்தெனையாளாவிட்டால்
கேளாது எமனென்றன் வாழ்நாளழிப்பானே (கேளு)

சரணங்கள்.

மதுரகவியாழ்வார்க்கும் பிரமனுக்கு நம்மாழ்வார்க்கு
மாநிலத்திற்பொலிந்துநின்ற பிரத்தியக்ஷமானதைபார்க்கும்
சதுரர்க்கெழிலாய்முகங் கிழக்குநின்றீரனேவோர்க்கும்
சாமிநான்சாற்றும்பாமாலை யவ்விதமாகவேயேற்கும்(கேளு)
உலகிலொருதரம் ராமாவென்றாலும்போதும்
உகந்துமைநாராயணா என்றழைத்தாலும்போதும்
பலதரம் ராமாவென்றால் பாலிக்காதேனோவோதும்
பாதகனானாலும் பதத்தியானமொன்றேபோதும்(கேளு)
சரமதிசையினில் சரமச்சுலோகத்தியானந்தாரும்
சாமபேததானதண்ட மாக்கையிட்போதேதீரும்
வரமாந்திருமந்திர வைபவமென்றுசேரும்
வான்றருத்துவயமந்திரம் வளரவென்னுவிற்சேரும்(கேளு)
ஆழ்வார்திருநகரி திருக்குருகூரில்சீரும்
அமைத்ததாம்பிரபர்ணி பிரமதீர்த்தமுந்தாரும்
தாழ்வில்லாநம்மாழ்வார் மங்களாசாஸனம்பாரும்
சாமிகொண்டீர்கிருஷ்ண சாமிதாசனை யாளவாரும்(கேளு)

---

## திருத்தொலைவில்லிமங்கலம் தேவப்பிரான் விஷயம். (௫0)

நாதநாமக்கிரியை ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

தேடியும் வாராசோ தேவப்பிரானை

### அநுபல்லவி.

தேடியும் வாரான் அரவிந்தலோசனன்
வாடியவனையுங் கொண்டாடிப் பாடி நான் (தேடி)

### சரணங்கள்.

சபரிகொடுத்தக்கனி தனையுண்டவனை
தனியாய்விதுரன்மனை யமுதுண்டவனை
உபரிகுசேலன்றரு மவலையுண்டவனை
ஒங்குமுகங்கிழக்கு நின்றகோலங்கொண்டவனை (தேடி)

சுந்தரகருந்தடங்கண்ணனை நாய்ச்சி நாயகனை
சொகுசாய் நம்மாழ்வார் கவியைப்பெற்றவனை
இந்திரன் வருணன் வாய்வுக்கு பிரத்யக்ஷமானவனை
எனையுமவர்போலவே இனிதாய் ரக்ஷிப்பவனை (தேடி)

ஆனையழைத்திட வதன்முன் வந்தவனை
அடல்பொன்னனைக்கொன் றவன்சுதனைக்காத்தவனை
தானையனேகமாய் பாஞ்சாலிக்குத்தந்தவனை
தாம்பிரபர்ணிவருணத் தீர்த்தமளிப்பவனை (தேடி)

திருத்தொலைவில்லி மங்கலத்தவனை
தேஜகுமுதவிமானம் ஏறிவருபவனை
பெருத்தமலைபோலும் வீற்றிருப்பவனை
பெருமாளெனுங் கிருஷ்ண சாமியென்பவனை (தேடி)

---

## ஸ்ரீவரமங்கை வானமாமலை தெய்வநாயகன் விஷயம். (௫௧)

### கும்பகாம்போதி ராகம் அடதாளம்.

### பல்லவி.

தெய்வநாயகனே உன்னைத் தேடியும்
என் கண் வாடி யலையுதே

### அநுபல்லவி.

செய்வேன் தோதாத்ரிப் பெருமாளே வந்தனம்
ஸ்ரீவரமங்கை நாய்ச்சியுடனுனக்கு (தெய்)

### சரணங்கள்.

ஸ்ரீவரமங்கை வானமாமலையில்
ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவியும்
பிரியசேனைமுதலி பெரியதிருவடி
பேணிச்சந்திரசூரியர் பக்கத்திலிருக்கும் (தெய்)



இந்திரனுக்கும் பிரம்மாவுக்குமுன்னம்
எழிலானவுரோம ரிஷிக்கும் பிருகுக்கும்
வந்துபிரத்யக்ஷமாய் மார்க்கண்டேயருக்கும்
வரந்தந்தாற்போலுமே என்னையும் ரக்ஷிப்பாய் (தெய்)

நந்தனவர்த்தக விமானமேறியே
நாரணவானமா மலைப்பெருமாளே
இந்திரபுஷ்கரணி சேற்றுத்தாமரைதீர்த்தம்
இப்போதே யென்றனுக் கிந்திடக்கண்பாராய் (தெய்)

வீற்றிருந்தகோலந் திருமுகங்கிழக்காய்
விரும்பி நம்மாழ்வார் மங்களாசாஸனம்பெற்றாய்
காற்றிருக்கும்போதே கைசோரவிடாமல்
காப்பாற்றுகிருஷ்ண சாமிதாசனையே (தெய்)

---

## திருப்புளிங்குடி காசினிவேந்தன் விஷயம். (௫௨)

### பந்துவராளி ராகம் ஆதிதாளம்.

### பல்லவி.

காசினிவேந்தனைத்தேடு பாடு

### அநுபல்லவி.

வேசிகள் வலைச்சிக்கி வாடாமல் கூடு (காசி)

### சரணங்கள்.

திருப்புளிங்குடிவாழுந் தீனதயாளனும்
மருப்புளிங்குடிவல்லி மாதும்மனாளனும் (காசி)
வேதஸாரவிமானமீதில் விளங்கமலர்மகளுடன் வருவான்
பாதம்வருணநிருதிதீர்த்தம் பாங்குடனமக்குத்தருவான் (காசி)
திருமுகங்கிழக்காகத் திகழ்புஜங்கசயனனும்
நிருதிவருணன்றருமனுக்கும் நேசப்பிரத்யக்ஷனும் (காசி)
நேசராய் நம்மாழ்வார் நேரும்பாவினத்தைப்போலே
தாசன்கிருஷ்ணசாமிபாவினந் தான்கொள்வானெமோலே (காசி)

---

## திருப்பேரை மகரநெடுங்குழைக்காதர் விஷயம். (௫௩)

### கேதாரகௌள ராகம் அடதாளம்.

### பல்லவி.

மணிமண்டபங்கள் சூழுந் திருப்பேரை நகர்வாழும்
மகரநெடுங்குழைக் காதரே

அநுபல்லவி.

தனியாவென்பிறவிநோய்த்   தன்னைக்கொய்திடுவீரோ
அணியான பொற்பத   மதனைத்தந்திடுவீரோ (மணி)

சரணங்கள்.

திகரில்முகில்வண்ணரென்று   நித்தமுமையழைப்பேனே
பகரபத்ரவிமானமீதில்   பாங்குடன் வருவீரோ
சகரரால் தோண்டிய   சாகரஞ்சூழுமின்
னகர்சுக்ரபுஷ்கரணிதீர்த்தம்   நான்பெறத்தருவீரோ (மணி)
பக்கங்கிழக்குமுகம்   பகரமாய் வீற்றிருந்தும்
சுக்கிரனுக்கும் பிரமனுக்குஞ்   சுகவீசான்யருத்ரனுக்கும்
எக்காலமும்பிரத்யக்ஷ   மினிதாகவானீரோ
இக்கிரசநம்மாழ்வார்கவிபோ   லென்கவியுங்கொள்வீரோ (மணி)
இரவும்பகலுமுமை   இராமராமாவென்று
இரங்கியழைத்தாலும்   ஏனென்றுகேளீரோ
வரந்தரச்சொல்லிகுழைக்   காதவல்லியுஞ்சொல்லாளோ
தரமலவேநீர்வாருஞ்   சாமியருட்கண்பாரும் (மணி)
ஆதிநாராயணரோ   ஹரிகிருஷ்ணசாமிநீரோ
ஓதியுமுணர்விலே   யுகந்தெனையாளுவீரோ
சோதிவடிவமான   சுதந்தரரோவாரீரோ
நீதிநெறியைத்தருவீரோ   நினைவளித்திடப்பாரீரோ (மணி)

---

## ஸ்ரீவைகுந்தம் கள்ளப்பிரான் விஷயம். (௫௪)

கல்யாணி ராகம் அடதாளம்.

பல்லவி.

கள்ளப்பிரானிவனுமே ஸ்ரீவைகுந்தம்

அநுபல்லவி.

கள்ளபிரானென்றுவாய்ச்சி   களவுரலோடுங்கட்டி
துள்ளமத்தாலடித்தவ   தூருபட்டதறியீரோ (கள்)

சரணங்கள்.

வீட்டுக்குவீடாய்   நுழைவானுமிவன்
வெண்ணெய் பால் தயிர்   திருடி யுண்பானும்
காட்டுக்குள் திரிந்தசாம்பு   வதிகன்னியமனைந்து
நாட்டுக்குளாயர்பாடியி   னங்கைமார் வெட்கங்கெடுத்த (கள்)
நடையிலொய்யார   ஸ்ரீகளுமுன்னே
நதிஸ்நானஞ்   செப்யும்போதிவன்
புடைவைகளைத்திருடி   புன்னைமரமேறிநின்று
தடையிலர்தெனையணைந்தால்   தருவேன் சேலைகளென்ற (கள்)



சந்திரவிமானமேறுவான்   ரும்பிரபரணிநதி
சாமிபிருங்குதீர்த்த   மெனக்குத்தருவான்
இந்திரனுக்கும்பிருகு   சக்ரவர்த்திக்குமெப்போதுந்
தந்திரமாய்ப்பிரத்யக்ஷமான   தயாபரனென்முன்வரா (கள்)
வழக்கமாய்நம்மாழ்வார்பாடல்   வைகுந்தநாதன்
வைகுந்தவல்லியுடன்   பெற்றுமே
கிழக்குமுகமாய் நின்று   கிருஷ்ணசாமி தாசனை
வழக்கிலாமல் ரக்ஷிக்க   வந்துளங்குடிகொண்ட (கள்)

---

## திருவரகுணமங்கை விஜயாஸநர் விஷயம். (௫௫)

இந்துஸ்தானி ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

பஜிமனமேபஜி. விஜயாஸனனை

அநுபல்லவி.

பஜிவரகுணவல்லி நாய்ச்சி பதத்தையும் (பஜி)

சரணங்கள்.

திருவரகுணமங்கை   தேஜோமயதேவை
தரும் வரங்கள் நமக்குத்   தருவபொன்கோவை (பஜி)
விஜயகோடிவிமான   மேறியே வருவார்
பஜனைபரர்பஜிக்கப   பதச்சேவை தருவார் (பஜி)
கமலமுகங்கிழக்கு   காணவீற்றிருப்பார்
விமலநம்மாழ்வார்கவி   விளங்கப்பெற்றிருப்பார் (பஜி)
தேவபுஷ்கரணியக்கி   தீர்த்தமும்படைத்தார்
ஜீவகோடிகள் பாவந்   தினந்தோறுந்துடைத்தார் (பஜி)
அக்கிக்குப்பிரத்யக்ஷ   மப்போதேயானார்
இக்கிநியுனக்கவர்   திருவடித்தரவானார் (பஜி)
காலன்வருமுனமே   கருதிநீதாண்டி
பாலகிருஷ்ணசாமியார்   பதங்களைவேண்டி (பஜி)

---

## திருக்குளந்தை மாயக்கூத்தன் விஷயம். (௫௬)

கல்யாணி ராகம் அடதாளம்.

பல்லவி.

மாயக்கூத்தனைக்காணு   இந்த
மாயையைத்   தடுக்கலாகாது

### அநுபல்லவி.

மாயக்கூத்தனைக்காண மனதொருமிக்கவேணும்
ஞாயமுணர்ந்தபேர்க்கு நான்சொல்வதென்னகாணும் (மாய)

### சரணங்கள்.

விஸ்மிதமானலோகம் இதில்
நின்றுமுடநேரோ வநேகம்
மன்மமறிந்தமஹானுக்கள் சிலபாகம்
சன்மானுபவந்தள்ளிக் கண்டறிவதேபோகம் (மாய)
கண்கள்செய்த பாக்யம் குளந்தைவல்லி சேவைக்
கண்டறிவதே போக்கியம்
பெண்கள் வலையிற்சிக்கி பேதறுவதோ சிலாக்யம்
பண்ணுடன்பாடிபெருங்குள தீர்த்தம்படிவதேயோக்யம் (மாய)
நம்மாழ்வார் பாடல்பெற்றவன் அந்நாளில்
நம்பும்பிரஹஸ்பதிக்கு பிரத்யக்ஷமானவன்
அம்முகங்கிழக்காக வானந்தமாய் நின்றவன்.
எம்மனோர்க்கானந்தநிலய விமானமேறி வருபவன் (மாய)
உருவிருக்கும்போதே நமக்கு
உரும்பொருளின்னதென் றோர்ந்து
திருக்குளந்தையில் வாழுஞ் ஸ்ரீவைணவரைச்சேர்ந்து
மருவுங்கிருஷ்ணசாமியின் மலரடியிணைத்தேர்ந்து (மாய)

---

## திருக்குறுங்குடி நம்பி விஷயம். (௺)

### சஹானாராகம் ரூபகதாளம்.

### பல்லவி.

ஆருக்குக்கிடைக்குமோ நம்பியினற்புத பாதமே மனமே
வைஷ்ணவநம்பி அற்புதபாதமே
மலைமேல்நம்பி அற்புதபாதமே
நின்றநம்பி அற்புதபாதமே
இருந்தநம்பி அற்புதபாதமே
கிடந்தநம்பி அற்புதபாதமே
திருப்பாற்கடல்நம்பி அற்புதபாதமே

### அநுபல்லவி.

பாருக்குட்திருக்குறுங்குடி வல்லி
பாதந்தைத்தொழும் பக்தகோடிகளில் (ஆரு)



### சரணங்கள்.

ஆசார்யத்தியானமு மனுஷ்டானங்களும்
ஆராதனைக்கிரம நடத்தும்பேர்களில் (ஆரு)
பஞ்சகேதக விமானத்தின் சேவையும்
பஞ்சதுறை திருப்பாற் கடனதிதீர்த்தமும் (ஆரு)
பக்கநின்ற சிவனுக்கு பிரத்யக்ஷமும்
பாங்காய் கிழக்குநின்ற பரமேட்டி பக்ஷமும் (ஆரு)
நம்மாழ்வார்பெரியாழ்வார் நாடிக்கலியன்செயும்
நற்கவியைக்கொண்ட நாராயணன் பதம் (ஆரு)
மன்னுயிரனைத்துந் தன்னுயிர்போலவே
மதித்துநடக்கு மஹானுக்களில் (ஆரு)
கேசவகிருஷ்ண சாமிசரணத்தைக்
கேவலநினைத்து பஜிக்கும்பேர்களில் (ஆரு)

---

## திருக்கோளூர் வைத்தமாநிதி விஷயம். (௺அ)

### பந்துவராளி ராகம் ஆதிதாளம்.

### பல்லவி.

வைத்தமாநிதியினை நீ மறவாதே திருக்கோளூர் தன்னில்

### அநுபல்லவி.

வைத்தமாநிதியைமறந் தெய்த்தலையாதே
மைந்தநிதிகளையு மனதில் வையாதே
எத்திசைகளினு மெய்த்தலையாதே
அலையாதே மனதே (வைத்)

### சரணங்கள்.

கஷ்டப்பேய்பூதங்களை கருத்தில் வையாதே
கமலைகோளூர்வல்லி கழலிணைமறவாதே
அசடஜெனங்களுட னுறவாடாதே
ஆடாதே மனதே (வைத்)
தாசஜெனங்களைத் தான்பழிக்காதே
தாம்பிரபர்ணி குபேரதீர்த்தமாடமறவாதே
தாசரதிநிக்ஷே பவித்தனைமறவாதே
மறவாதே மனதே (வைத்)
மதுரகவியாழ்வார் குபேரனுக்குமுன்னே
மாதவன்பிரத்யட்சமான மகிமையுமென்னே
சதுராய்நம்மாழ்வார்கவி கொண்டதுவுஞ்சொன்னேன்
மறவாதே சொன்னேன் (வைத்)

புஜங்கசயநத்தில் கிழக்குமுகங்கிடப்பான்
போகபோக்யஸ்ரீகர, விமாநமீதில் நடப்பான்
புஜங்கள் வல்லமை பெலனெடுத்துரைப்பான்
உரைப்பான் மனதே (வைத்)

தாசிகளுரவை பெரிதென்றெண்ணாதே
தாமதகுணமைதால் தானலையாதே
தாசன்கிருஷ்ண சாமிசொல்லை மறவாதே
மறவாதே மனதே (வைத்)

பாண்டியநாடு முற்றும்.

# மலைநாட்டுத் திவ்யதேசங்கள். ௧௫.

### திருவனந்தபுரம் அநந்தபத்மநாபன் விஷயம். (௫௬)

சௌராஷ்டக ராகம் ஜம்பை தாளம்.

பல்லவி.

அனந்த பத்மநாபன் திருவனந்த பத்மநாபன்
திருவனந்தப் புரப்பிரதாபன்

அநுபல்லவி.

தனதாநன் மனமுந் தனதன்வைபவமும்
அனமுங்கனமு மனந்தமுந்தரும் (அன)

சரணங்கள்.

தாமத்துடன்ஹேம கூடவிமாநத்தில்
க்ஷேமந்தரஸ்ரீ லக்ஷ்மியுடன் வரும் (அன)

இந்திரன் சந்திர னெழிலாம் ருத்ரனுக்கும்
தந்திரமாகத்தான் பிரத்தியட்சமானவன் (அன)

இம்மகியினம் மாழ்வாரிசைப்பாவை
செம்மையுடன்கொண்ட நம்பிடவாண்டவன் (அன)

அண்டமனந்தவன் முகமண்டலங்கிழக்குப்பிர
சண்டபுஜங்க சயநத்திருப்பவன் (அன)

சத்பதமடையவே யெத்தவத்தோருக்கும்
மத்ஸ்யதீர்த்தத்தை யுத்தேசித்துத்தரும் (அன)

சூதனையுஞ்சூதர் வேதனையுங்கால
யாதனையுமேம வாதனையும்போக்கும் (அன)



நேமியையுமேற் பூமியையுங்கிஷ்
காமியையுங்கிருஷ்ண சாமியையுங்காக்கும் (அன)

### திருவன்பரிசாரம் திருக்குறளப்பன் விஷயம். (௯௦)

சாவேரி ராகம் ஜம்பை தாளம்.

பல்லவி.

திருவண்பரிசாரங் கண்டோம் நம்
திருக்குறளப்பன் சேவைக் கொண்டோம்

அநுபல்லவி.

திருமாளிகைகளுந் திருவாராதனைகளும்
மருவிஸ்ஸ்ரீவைஷ்ணவர்கள் மறையோதுமுறைத் (திரு)

அஷ்டருரவைப் யோக்கடித்தோம் நல்ல
சுஜனருரவை சேகரித்தோம்
அஷ்டாக்ஷரமந்திர மனுபமமிந்த
வனந்தந்தாசர்களின் திருவருட்குகந்த (திரு)

கழலவல்விநாய்ச்சி யுடன்வருவான் இந்திர
கலியாணவிமாநச் சேவைதருவான்
விமலலக்ஷ்மி தீர்த்தத்தைப்பெறுவார்
வேறொருதீர்த்தத்தைக் கனவிலுமறுவார் (திரு)

திருவாழ்மார்பன் முகங்கிழக்காம் அவன்
திவ்யமாய்வீற்றிருப்பதுந் துதிப்பவர்க்காம்
மருவாருடையநங்கை விநதைக்குங்காரிக்காம்
மாதவன்பிரத்யக்ஷமான மகிமையென்பெருக்காம் (திரு)

நம்மாழ்வார் பாடலைபெற்றான் அவன்
நாமத்தி லோர்நாமங் கற்றோர்
இம்மாளிகைகளி லெவராலுஞ்சரி
இனியொருதெய்வத்தை யெப்போதும்பற்றார் (திரு)

திருவாய்மொழியிலைப் படிப்போம்
ஸ்ரீராமநாமாமிர்தம் குடிப்போம்
சீர்வாய் துதிக்குங் கிருஷ்ணசாமிதாசற்கும் நானே
பரவாசுதேவன்பதந் தரவழைத்திடுமிந்த (திரு)

### திருக்காட்கரை அப்பன் விஷயம். (௯௧)

சௌராஷ்ட்ர ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

அப்பனே நீ வாராய் அருட்கண்பாராய்

அனுபல்லவி.

செப்பவுமுனக்கோ ரொப்பொருவருமில்லை
இப்போதே யெனைப்பாராய் வாராய் (அப்)

சரணங்கள்.

திருக்காட்கரையப்பனே பொறுக்காதெனுள்ளமினி
ஒருக்கால்கபிலதீர்த்தந்தாராய் களையைத்தீராய் (அப்)
ரங்காபுஷ்கலவிமானது ரங்காவுன்சர்ச்சன
சங்கத்திலெனைச்சேராய் பாவந்தீராய் (அப்)
ராமாதெற்குமுக நின்றஜெகதபி
ராமாநேமனேவாராய் பதந்தாராய் (அப்)
மாதவனேகபில முனிக்குப்பிரத்யக்ஷமான
பாதமலரோதத்தாராய் இப்போதேவாராய் (அப்)
ஆராவமுதேநம் மாழ்வார்கவியைப்போல
சீராயென்கவிகொள்ளுவாய் வினைதள்ளுவாய் (அப்)
பெருஞ்செல்வநாயகியே உன்செல்வனைழைக்கிறேன்
பெருஞ்செல்வந்தாவெனப்போகாதா இதுன்னாலாகாதா (அப்)
கேசவனேகிருஷ்ண சாமிதாசனையுன்றன்
நேசனாகப்பாராய் உன்னுடன்சேராய் (அப்)

---

## திருமூழிக்களம் மூழிக்களத்தான் விஷயம். (௬௨)

காகரப்பிரியை ராகம் ரூபகதாளம்.

பல்லவி.

மூழிக்களத்தானை நினை நீ

அனுபல்லவி.

ஊழிகள்தோறுந் தேடி நீ
யுழன்றலைவதேன் வாடி (மூழி)

சரணங்கள்.

அஷ்டமதங்களை நீக்கு உன்
கஷ்டமொருவழி யாக்கு
துஷ்டருறவையும் போக்கு துதித்
திஷ்டராமனையே நோக்கு (மூழி)
பெருங்குளத்தீர்த்தத்தில் தோய்ந்து கிழக்கு
திருமுகநின்றோனைச் சார்ந்து
தரும்பதச்சேவையைத் தேர்ந்து நீ
யிருந்தாலும்போதும நேர்ந்து (மூழி)



ஸௌந்தர்யவிமான மீது மதுரவேணியுடன்
ஸௌந்தர்யமாய்வரும் போது
கௌரவமாகவிப் போது நீ
கௌழ்ந்துவீழ்ந்தடிபணிந் தோது (மூழி)
ஹரிதமகாமுனிக் கன்று பிரத்யக்ஷ
மரியமானானே நின்று வுனக்கு
முரியவனவனிடஞ் சென்று வுன்
பரிதாபமெலாஞ்சொல நன்று (மூழி)
நம்மாழ்வார் பாடலைப் பெற்றான் இனி
நம்பாடலையேன் பற்றான்
இம்மகியிலவன்பேனாக் கற்றான் நமக்
கெம்மானிடனுறவு முற்றான் (மூழி)
திருமூழிக்களத் தானை தேவ
திருமாலெனும்பி ரானைத்
திருத்துளவணி வோனை எழில்
கிருஷ்ணசாமியெனுங் கோனை (மூழி)

---

## குட்டநாடுத்திருப்புலியூர் மாயப்பிரான் விஷயம். (௬௩)

முகாரி ராகம ஆதிதாளம்.

பல்லவி.

மாயப்பிரானே யுன் மாய்கை யின்னதென்று
மனதாலறியப்போமோ யிதென்னுமோ

அனுபல்லவி.

ஆயர்பிரானென்று வமரர்புகழ் கோவிந்தா
வடியேன்றுயர்களையா தேனேவருள்முகுந்தா (மாய)

சரணங்கள்.

காயப்பிரானெனக் கண்டு களிக்கவும்
ஞாயமறியாமுடப் பேயனெனையும
பாயப்படுத்துமுன் மாயமின்னதெனுமு
பாயமுணர்த்தியின் னேயெனையாட்கொளும் (மாய)
வட்டவாருலகி லட்டவசுக்கள்சூழுங்
குட்டநாடுத்திருப் புலியூர்கோட்டிகட்
கட்டவக்கரமந்திர மருள்பெறவருளியு
மிட்டமுடனம்மாழ்வார்செய் திட்டசாஸனங்கொண்ட (மாய)
நாதாகிழக்குமுக மாகநின்றிநெற்
பாதாபுருஷோத்தம விமானத்தின்பரப்பின்
மீதாய்ப்பொற்கொடியெனு நாய்ச்சியாருடன்ச
மேதாய்ப்பூஞ்சுனைத்தீர்த்தச் தாதாவிதென்னவாதா (மாய)

வீரசப்தரிஷிகட்கும் பிரத்யக்ஷகரகயபா
மாரக்கோட்டிசுந்தர அளவாரவசோலையின்கு
மாரகிருஷ்ணசாமி நீரனெனையுங்கைச்
சோரவிடுவதென் னோரஞ்சொலுமையனே (மாய)

## திருச்செங்குன்றூர் மையாரப்பன் விஷயம். (சுச)

### காம்போதி ராகம் அடதாளம்.

#### பல்லவி.

காலங்கழிக்கலாமோ மையாரப்பனைக்காண
ஜாலஞ்செய்யாதே மனதே

#### அநுபல்லவி.

ஞாலமுழுதுமாண்டு கோலம்வந்தபேர்மாண்டு
ஓலமிட்டழுங்குரல் சீலமுணர்ந்திலையோ (கால)

#### சரணங்கள்.

மையார்பொழிற்செங்குன்றூர் மையாரப்பனைக்கண்டு
உய்யாய்பிறவிநோயைக் கொய்யாயிதென்னஜாலம்
பொய்யாம்பிரபஞ்சவாழ்க்கை மெய்யாய் நினைந்து நீயே
மையார்விழியினர்பால் நய்யாதிருமனதே (கால)
ஜெகஜ்யோதிவிமானத்தின் செங்கமலவல்லியுடன்
மிகஜ்யோதியாய்விளங்கி மேற்பவனிவரும்போது
இகத்திலிசிற்றூரசங்கத் தினியதீர்த்தந்தாவென்று
அகத்தியமாய்கேட்டுமேவ னடிபணிந்திருமனதே (கால)
நின்றுமுகமேற்கான நிமித்தம்பஸ்மாஸுரர்காக
அன்றுசிவனுக்குபிரத்யக்ஷ மானதைநீயறியாயோ
நன்றுநம்மாழ்வார்பாடல்போல் நம்பாடலையுங்கொள்வன்
சென்றுநீயவனையுந் தெரிசித்திருமனதே (கால)
பெண்டுபிள்ளைசுற்றமுத லுண்டுசேதமென்றிருந்து
தண்டுகையிலெடுத்தேமன் கொண்டுபோகவுடன்பட்டு
பண்டுமாண்டபேர்களைநீ கண்டும்நாள்கழிக்காமல்
விண்டுகிருஷ்ணசாமிபதந் தொண்டுசெய்திருமனதே (கால)

## திருநாவாய் நாராயணன் விஷயம். (சுரு)

### சஹானா ராகம் ரூபகதாளம்.

#### பல்லவி.

நாராயணனுன்றன் நாமமதை க்ஷேமமதாய்
நான்றுதிக்கவருள் காரணனே பூரணனே



#### அநுபல்லவி.

பாராயணஞ்செய்யும் பக்தகோடிகட்கு
பரமபதம்பெறச் சரமசுலோகந்தந்த (நாரா)

#### சரணங்கள்.

ஆழ்வாராதிகளுள்ளம் புகுந்தவனே யமர்ந்தவனே
தாழ்வானவென்னுள்ளம் புகத்தகுந்தவனே யுகந்தவனே
வாழ்கவென்றனை வந்தித்திமேந்த
வானவர் தங்களுக்கென்று தானவர் தங்களைக்கொன்ற (நாரா)
அங்கமலமுகந்தெற்காய் வீற்றிருந்தோய் பாத்திருந்தோய்
நங்கமலவென்முன்வர நாயகனே தாயகனே
செங்கமலச்சரஸு தீர்த்தம் வேதவிமானச்
சேவையுநீதந்தருள வந்தருள்வாய் கேசவனே (நாரா)
மங்கைமன்பொய்கையர் பாடலுற்றவனே பெற்றவனே
மங்களமென்பாடல்பெற வேண்டுவனே யாண்டவனே
மங்கைலட்சுமிக்குங் கஜேந்திரனுக்கு பிரத்யக்ஷ
மாதவனேயானதைப்போல் யாதவனே நீ வருவாய் (நாரா)
திருப்பாற்கடலைக் கடைந்தவனே யடைந்தவனே
பொருப்பிற்லமழையை யடுத்தவனே தடுத்தவனே
விருப்பால்திருநாவாய் விமலக்கிருஷ்ணசாமிநின்
தாசனையாளுவதெப்போ ஈசனே கேளுமிப்போ (நாரா)

## திருவல்லவாழ் கோலப்பிரான் விஷயம். (சுசு)

### பியாகு ராகம் ரூபகதாளம்.

#### பல்லவி.

கோலப்பிரான்றனை யடுத்தவர்க்கோர்
குறைவும்வாராது அவர்க் கோர்குறைவும்வாராது

#### சரணங்கள்.

சீலச்செல்வத்திருக் கொழுந்து நாய்ச்சியுடன்
சேவையைப்பெற்றிடும் பேர்கள்
கடுங்காலன்கையிற் படார்கள்
நெடுஞ்காலஞ்சுகித்திருப் பார்கள்
கேடிமாலவந்காளான பேர்கள் (கோல)
நம்மாழ்வார்மங்கைமன் பாடலைப்பெற்று
நற்குணமுகநின்றதைக் கண்டார்
சதுரங்கவிமானச் சேவையைக் கொண்டார்
கண்டாகர்ண தீர்த்தத்தையு முண்டார்
கஷ்டவினையையுமினி அண்டார் (கோல)

ஞாலமீதில்கண்டா    காணற்கு பிரத்யக்ஷ
ஞாயமதையுணர்ந்    தோர்கள்
கலைக்கியானமதைத்தெரிந்    தோர்கள்
நிலையானநல்லட்பெரி    யோர்கள்
நெடுமால்கழலைப்பூசிப்    போர்கள் (கோல)
அண்டமுண்டுமிழ்ந்த    சேஷமதேகாம்
கண்டதேவ    ரெல்லாம்
அவரை தொண்டுசெய்வோ    ரெல்லாம்
பலனுண்டோவவர்க்    கெல்லாம்
அமிர்தவிண்டுபதந்தொழ    லாம் (கோல)
வையமேழுங்கிருஷ்ண    சாமிவாயிற்கண்ட
யசோதையின்வார்த்தை    பொய்யாமோ
மெய்யாய்தேவரெங்கிருக்க    லாமோ
பொய்யாய்வாதிப்பவரெவ    ராமோ
ஐயன்பெருமையை செப்பவும்    போமோ (கோல)

## திருவண்வண்டூர் பாம்பணையப்பன் விஷயம். (௬௭)

காம்போதி ராகம் ரூபகதாளம்.

கண்ணிகள்.

பாம்பணையப்பனை    பாரில் அதிப்பவனை
நாம்பணிவோ    நன்னெஞ்சமே
காம்பணையுமுலை    மாதர்வலைப்படாமல்
கடைத்தேறுவாய்    நெஞ்சமே
பாபமகலநமக்கு    பாபநாசதீர்த்தந்தந்து
பாரில்ரக்ஷிப்பா    னெஞ்சமே
தாபந்தனியுமின்று    தாமதஞ்செய்யாமல்
தான்பணிவாய்    நெஞ்சமே
திருவண்வண்டூரினில்    திருமுகங்கிழக்குநின்றான்
தெரிசித்திடுவாய்    நெஞ்சமே
கருவண்டும்பிறவியைக்    கண்டுங்காலங்கழித்து
கலங்காதே    நெஞ்சமே
வேதாலயவிமானமீதில்    கமலவல்லியுடன்சித்ர
வீதிவருவா    னெஞ்சமே
பாதாரவிந்தசேவைப்    பார்த்திருந்தாலும்போதும்
பாக்யம்பெற்றாய்    நெஞ்சமே



மார்க்கண்டேயருக்கு    மாநாரதர்க்கும் பிரத்யக்ஷ
மாகிலத்திலானா    னெஞ்சமே
பார்க்குமளவில்நம்    மாழ்வார் பாடலைப்பெற்ற
பரவாசுதேவ    னெஞ்சமே
காலன்வருமுனமே    கண்டுகிருஷ்ணசாமிகழல்
கருத்தில்வைப்பாய்    நெஞ்சமே
கோலஞ்செயுமாய்கையின் பிரபஞ்சத்தினுட்பட்டுக்
குலைந்தலையாதே    நெஞ்சமே

## திருவாட்டாறு ஆதிகேசவன் விஷயம். (௬௮)

புன்னாகதோடி ரூபகதாளம்.

கண்ணிகள்.

ஆதிகேசவா    அஷ்டாங்க விமானத்தில் வா
சோதிராகவா    சுகிமரதகவல்லியுடன் வா
இராமதீர்த்தம்பாராப்    ராமாகடல்வாய்தீர்த்தந்தாராய்
காமக்குரோதந்தீராய்    எனக்கபயந்தருவாராய்
பரசுராமசந்திரற்கு நீயே    பாரில்பிரத்யக்ஷமானாயே
சரசமுகமேற்கானாயே    சாமிபுஜங்கசயனனானாயே
மாயக்கிருஷ்ணசாமி    அபாயமறியேன்பூமி
ஞாயந்தெரியேன்காமிக்    கோருபாயமதைநேமி

## திருவித்துவக்கோடு உய்யவந்தார் விஷயம். (௬௯)

சஹானா ராகம், ரூபகதாளம்.

பல்லவி.

உய்யவந்தாரோ நம்வினையைக் கொய்யவந்தாரோ மனமே

அநுபல்லவி.

செய்யவந்தார்நமக்    கென்றுங்க்ஷேமமதை
இய்யவந்தாரென்றும்    பாதகேமமதை (உய்)

சரணங்கள்.

திருவித்துவக்கோட்டு    வல்லியை நீ தேடு
பருவந்தருஞ்சக்ர    தீர்த்தமுன்போடு (உய்)
தத்வகாஞ்சனவிமானமேற்    றான்வருவர்
உத்தவனாநாமோத    வரந்தருவர் (உய்)
தெற்கேபுஜங்க    சயனந்திருமுகங்
கற்கதருவர்    காணலாநற்சுகம் (உய்)

அம்பரீஷனுக்கு பிரத்யக்ஷமானவர்
நங்குலசேகராழ்வார் நற்கவிப்பெற்றவர் (உய்)
ஹரிகிருஷ்ணசாமியார் அவர்பதத்தைத் துதி
கரிவரதரேகதி கண்டுக்கொள்ளத்துதி (உய்)

## திருக்கடித்தானம் அற்புத நாராயணன் விஷயம். (எ௦)

சங்கராபரண ராகம் அடதாளம்.

பல்லவி.

அற்புதநாராயணனே திருக்கடித்தானம்

அநுபல்லவி.

நற்படிவா கற்பகவல்லி நாய்ச்சியுடனாரணனே (அற்)

சரணங்கள்.

புண்யகோடிவிமானம் எண்ணவுமதற்குண்டோசமானம்
வாருஞ்சுந்தரா - புயமந்தரா - சுபாகரா - தயாப ரா
ரணபீகரா - கிருபாகரா - வென்முன்வராய் - வரமென்றராய் (அற்)
வருவதெப்போவென்றுயே திருமுகங் கிழக்கு நின்றுயே
வருவாய்சீலனே-கானலோலனே - நந்தபாலனே-மேனிநீலனே
யசுரர்காலனே - யாதிமூலனே - யனுகூலனே - கோபாலனே (அற்)
ருக்வேதமுடிவுமானுயே ருக்மாங்கதற்கு பிரத்யக்ஷமானுயே
பூமிநீர்த்தந்தா-பாதரேணுதா-வணியுக்குளபந்தா-வனப்பிரசந்தா
வாபரணந்தா - வனவாசடைதா -, வைஸ்வர்யந்தா - வனுதியிற்பத
வருணந்தா (அற்)
கிருஷ்ணசாமிவாராயோ திருஷ்டிவைக்கப்பாராயோ
வருவாய்நீதனே - பென்றுதனே - நவநீதனே - விநோதனே
மதுருதனே - மறைபோதனே - ரகுநாதனே - பொற்பாதனே (அற்)

## திருவாறன்விளை திருக்குறளப்பன் விஷயம். (எக)

சுருட்டி ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

திருவாறன்விளை திருக்குறளப்பனை தெரிசிப்பாய் நெஞ்சமே

அநுபல்லவி.

கருவார்பிறவியின் மறவாமல்
கன்னனன்பதம்பெறுவாய் நீ நெஞ்சமே (திரு

சரணங்கள்.

பத்மாஸநாய்ச்சியுடன் வாமநவிமானமீதில்
பரவாசுதேவன் அருவான்



பத்மபாதந்தொழுவேத வியாஸசரஸ்தீர்த்தம்
பாவந்தீரமக்குத் தருவான் (திரு)
வடக்கேதிருமுகமாய் நின்றகோலத்தைக்கண்டு
வானவர் பணிவாரே
மடலவிழ்தாமரைமே லயனுக்குப்பிரத்யக்ஷ
மாதவரதி வாரே (திரு)
நம்மாழ்வார்மங்களா சாஸனஞ்செய்ததை
நானிலமறி யாதா
இம்மகியிலுன் மங்களாசாஸனங்கொள
இறைவற்குந் தெரியாதா (திரு)
அட்டவக்கரமந்திர மனுதினஞ்ஜெபித்திடு
மரிதாச ரிடமே
கிட்டவராமை னெட்டியும்பாரான்
கிருஷ்ணசாமியைத் தொழுதிடுவாய் (திரு)

மலைநாட்டுத்திருப்பதிகள் முற்றும்.

# நடுநாட்டுத் திருப்பதிகள். உ.

## திருவயிந்திரபுரம் தெய்வநாயகர் விஷயம். (எஉ)

கும்பகாம்போதி ராகம் ரூபகதாளம்.

பல்லவி.

தெய்வநாயகரே நானுய்வதெனாயீரோ

அநுபல்லவி.

செய்வதுமக்கான பூஜையறிந்திலேன்
கொய்வதவினையெவ் விதந்தெரிந்திலேன் (தெய்)
நின்றருணமுகஞ் சந்திரனுக்கு நேரோ
அன்றுகருடனுக்கும் பிரத்யக்ஷமானீரோ
திருமங்கையாழ்வார் தருஞ்சொந்தபாடலை
உரிமையதாகவே யப்போதேகொண்டீரோ (தெய்)
நல்லவைகுண்ட நாயகியுடனே
செல்வச்சந்திர விமானமேறியே
வாருங்கருட நதிசேஷதீர்த்தந்
தாருமருட்கண் பாருமிப்போதே (தெய்)
பிறப்பதும்பிறர் இறப்பதுந்துன்பம்
சிறப்பதும்நாம மறப்பதுந்துன்பம்

அடியேன் தெரியேனிவ்
வெறியேனை யாட்கொளும் (தெய்)
திருவயிந்திரபுரத் தேவதேவனே
தருமயேந்திரஜால சாமிகிருஷ்ணனே
பித்தன்மத்த னும்மை
நத்தேனை யாட்கொளும் (தெய்)

## திருக்கோவலூர் ஆயனார் திருவிக்ரமன் விஷயம். (எக)

பூரிகல்யாணி ராகம் திரிபுடைதாளம்.

பல்லவி.

ஆயனார் திருவிக்ரமன்பத மனுதினந் துதிநெஞ்சமே

அநுபல்லவி.

காயங்கடைத்தேற முபாயமுனக்கிது
கண்டுகொண்டிரு நெஞ்சமே (ஆய)

சரணங்கள்.

ரங்கஸ்ரீகர விமானரங்களும்
ரங்கரங்கவை போகனும்
மங்களமுகங் கிழக்காய்நின்றென்றும்
மகிழ்பூங்கோவல் நாய்ச்சிநாதனும் (ஆய)
ஆலிலையின்மேற் சயனன்க்ருஷ்ணதீர்த்த
மளிக்குமெழில் கிருபாநயனனும்
காலியின்பின் திரிந்துவேணு
கானமூதுநந்தன் றனையனும் (ஆய)
பொய்கையாழ்வார் பேயாழ்வாரெழில்
பூதத்தாழ்வார் திரு மங்கையாழ்வார்
செய்கைங்கர்யஞ் சிறப்பாய் பெற்றவன்
செந்தமிழ்ப் பாடலையுமுற்றவன் (ஆய)
மிருகண்டமுனிபலி சக்ரவர்த்திக்கு
மேலும் பிரத்யக்ஷமானவன்
பெருதண்டகா ரண்யவாசிகளி
பிரபலமாகவே கர்த்தவன் (ஆ
திருக்கோவலூர் வாசனுந்தேவ
தேவகிருஷ்ணசாமி நேசனும்
செருக்கொடுவெல் லரக்கனைக்கொன்ற
சேஷசயனரங் கேசனும் (ஆய)

நடுநாடு முற்றும்.



# தொண்டைநாட்டுத் திவ்யதேசங்கள். (௨௨)

## திருக்கச்சி அத்திகிரிகாஞ்சிபுரம் அருளாளன்மோட்டழகன் நாரசிங்கன் வரதராஜப்பெருமாள் விஷயம். (எச)

கமாசு ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

நாரசிங்கனை நான்றுதித்திடுவேனே வரதராஜபெருமாளொடு
அருளாளன் மோட்டழகிய
அழகியசிங்கப்பெருமாளொடு

அநுபல்லவி.

கோரவினையகல வாரசுதரிசனந்
தாரநமக்கோருப காரஞ்செய்திடும் வீர (நார)

சரணங்கள்.

அத்திகிரியெனுங்கச்சி பத்திகாஞ்சிபுரஞ்சுற்றி
நத்திசெய்திடத்தரு மெத்திசையோருக்குமுத்தி (நார)
பெருந்தேவிபிரபல வரித்ராதேவியுடன்
வரும்புண்யகோடிவிமானங் குகவிமானத்தைவாழ்த்தி (நார)
வாரணகிரிசேஷகுசல வராகவக்கிபிரமதீர்த்தம்
காரணவனந்தசரஸ்ஸு கனபத்மதீர்த்தமுடைய (நார)
வேகவதினதிவினங்குஞ் சத்யவிரதக்ஷேத்ரமதில்
போகமுகமேற்காய்நின்று புகழுடன்வீற்றிருக்கும் (நார)
பிர்குகஜேந்திரநாரதபிர்ம்ம வநந்தாழ்வானுக்கும்
பிர்ஹஸ்பதிமுதலோருக்கும் பிரத்யக்ஷமானஸ்ரீஹரி (நார)
பூதத்தாழ்வார்மங்கைமன்னன் புகழுமங்களாசாஸனப்
போதத்தையங்கீகரித்த புண்டரீகாக்ஷனெனும் (நார)
வருடங்கள்தோறுநாடி வருஞ்சனத்தைகொண்டாடி
கருடசேவையைத்தேடி கரிவரதனைப்பாடி (நார)
ஞாலத்தனிலேயாதி மூலமெனுங்கரிமுன்
ஓலமிடரக்ஷித்த பாலகிருஷ்ணசாமியே (நார)

## திருவட்டபுயகரம் சக்கராயர் விஷயம். (எரு)

தன்யாசி ராகம் ஜம்பை தாளம்.

பல்லவி.

சக்கராதரனைப்பாவீ ராதிகேசவ

அநுபல்லவி.

சக்கராதரர்விரஜைக் கக்கரைச்சேர்ப்பாரடைவீர்
சக்கரவில்லிதொழுந்திரு வட்டபுயகரம்வாழும் (சக்)

சரணங்கள்.

கஜேந்திரனுக்குப்பிரத்யக்ஷங் ககநாக்ர்திவிமானசேவை
கஜேந்திரபுஷ்கரணிதீர்த்தம் களிப்புடனமக்குத்தருவர் (சக்)
அருள்முகமேற்காய்நின்ற வலர்மேலு மங்கைநாதர்
பொருளாய்பேயாழ்வார்கலியன் புகழ்ப்பாமாலைப்பெற்றவர் (சக்)
பாரின்பளுவதற்ற பாரதநடத்துஞ்சொந்தப்
போரிலர்ச்சுனர்க்காகப் பொழுதைமறைக்குமந்த (சக்)
நந்தன்மதலையாக நானிலமுழுதும்வேண்ட
சொந்தமாய்கிருஷ்ணசாமி துவாரகைமுழுதுமாண்ட (சக்)

திருத்தண்கா தீபப்பிரகாசர் விஷயம். (எசு)

பியாகடை ராகம ஆதிதாளம்.

பல்லவி.

தீபப்பிரகாசரைப்பாருமே சுயமாஞ்சோதி

அநுபல்லவி.

தீபப்பிரகாசஸ்ரீகர விமானமேறுந் திவ்யப்ரகாசர்
திருமங்கையாழ்வார்கவி திருத்தண்காவிற்பெற்றவர் (தீப)

சரணங்கள்.

தூவெளியரத்னகிரீடத் தோளணிவலயங்காட்டும்
சுடரொளியைவில்வாள்தண்டு தூயசங்குசக்ரங்காட்டும்
மாவொளிமரகதவல்லி மணியாரபதக்கங்காட்டும்
மால்பதம்பரமபதம் மகிழ்வாய் நமக்குக்காட்டும் (தீப)
சரஸ்வதிக்குப்பிரத்யக்ஷமாய் தாரகமந்திராக்ஷரமாய்
சரவுமுகமேற்காய்நின்ற சாமிசர்வாதீதமாய்
சரஸ்வதிதீர்த்தமுநமக்குச் சார்வதாதருமமுதமாய்
சாலோகசாமீபசாரூப சாயுஜ்யமாய்விளங்கும் (தீப)
விஸ்வசொரூபமெடுத்தவர் விஸ்வமயமாயிருப்பார்
அஸ்வமெனும்வாசியேறி யாத்மபதமாயிருப்பார்
சொஸ்தமாய்பாற்கடற்றங்கி சோகமறவுமுதளிப்பார்
அஸ்மதாசார்யராகவு மவதரித்துமிருப்பார் (தீப)
குண்டலிபாம்பணைமீதில் கோவிந்தன்படுத்திருப்பார்
கோலவிழிமணிக்குள்கிருஷ்ண சாமிகொலுவிருப்பார்
அண்டசராசரமுத லனைத்திலுமவரிருப்பார்
கண்டுகொண்டபேர்கள்மனக் கண்ணனுளுமிருப்பார் (தீப)



திருவேளுக்கை முகுந்தப்பெருமாள் விஷயம். (எஎ)

காம்போதி ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

முகுந்தப்பெருமானை முழுதுமுணர்ந்திலையே ஓ மூடமதியே நீ

அநுபல்லவி.

தகுந்தபடி புத்திவர தாசர்கள்தாள்களிற்போட்டு
தகடி புனையுதைத்து தண்டிக்கவுஞ்செய்குவேன் (முகு)

சரணங்கள்.

திருமுகங்கிழக்காக நின்றகோலமுடையவன்
திவ்யகநகஸரஸ்ஸு தீர்த்தமும்படைத்தவன்
பிருகுமகரிஷிக்குமுன்னே பிரத்யக்ஷமானவன்
பெரியாழ்வார்திருமங்கையாழ்வார் பாடலையும்பெற்றவன் (முகு)
கநகவிமானத்திற்வேளுக்கை வல்லிநாய்ச்சியுடன்
கநகாம்பரதரன் பவனிவரும்போது
திநமும்வடம்பிடித் திழுக்குமந்தவலங்கார
சித்ரவீதியாய்ப்பிறந்தாலும் தெரிசனைப்பெற்றிருப்பாய் (முகு)
திருவேளுக்கைகோவில்தனில் சித்திரக்கூடினிலொரு
சிங்காரக்கிளியானாலும் ரங்காரங்காவென்றழைக்கும்
உருவெடுத்துமாளிடனே யுனக்கின்னம்புத்தியில்லை
ஓகோமனமேயுன்னை கேந்திருப்பதுந்தொல்லை (முகு)
வாசுதேவன்வீற்றிருக்கும் வாசற்படிகட்டானாலும்
தாசர்கள்தாளின்றுகளைத் தான்மகிழ்ந்தணிந்திருக்கும்
வேசிகள்தாளின்றுகளை விரும்பியவர்க்குழைத்து
வேண்டும்படியேவல்செய்து விருதாவாய்நாள்கழித்து (முகு)
காலியின்பின்கிருஷ்ணசாமி கானிடைநடந்தவழிக்
கல்லாய்ப்பிறந்தாலுமவர் கால்பட்டு சுகித்திருப்பாய்
வேலியின்முள்போடக் காலினிற்றைத்தாற்போதும்
வேண்டியிவ்வுடலைநம்பி வீண்சோகமடைந்தாய்நாளும் (முகு)

திருப்பாடகம் பாண்டவதூதர் விஷயம். (எஅ)

தேசிகதோடி ராகம் அடதாளம்.

பல்லவி.

பாண்டவர் தூதராமே நமக்கும் ஆண்டவரிவர்தாமே

அநுபல்லவி.

நீண்டகரியைமுன் ரக்ஷிக்கவோடிய
நின்றுகாளிங்கன்மேல் தாண்டவமாடிய (பாண்)

சரணங்கள்.

திருப்பாடகத்தில் ஸ்ரீருக்மணிவாசராம்
தேஜோமயமெனுஞ் சத்தியபாமைநேசராம்
பொருப்பாடகம்வாழும் புண்டரீகாக்ஷராம்
புனிதபத்ரவிமானமேறும் போகரங்கேசராம் (பாண்)
திருமழிசைபேயாழ்வார் திருமங்கைமன்பூதத்தாழ்வார்
செய்பாடல்பெற்றமுகங் கிழக்காய்வீற்றிருப்பவர்
வருமந்தஹரீதமகா முனிக்கந்தானினில்
வயணமாய்பிரத்யக்ஷ மத்ஸ்யதீர்த்தமுடையவர் (பாண்)
கங்கையைக்கழலில்வைத்த கரிவரதராயராம்
கண்ணுக்குள்மணியாய்நின்ற கண்ணனெனுநேயராம்
மங்கையைமார்பினில்வைத்த மாதவத்தூயராம்
மாபலிசிரமிதித்த மகானுபாவராம் (பாண்)
கிரியைக்கரத்தெடுத்த கிருஷ்ணசாமியாம்
கேவலந்தாசர்களுளங் கிளராந்திரியாமியாம்
உரியையுருட்டியதோ யுண்டவைபோகியாம்
உலகோர்க்குப்படியளக்கு முத்தமத்தியாகியாம் (பாண்)

திருநீரகம் ஜெகதீஸ்வரன் விஷயம். (எகூ)

ஆனந்தபைரவி ராகம் அடதாளம்.

பல்லவி.

ஈஸ்வரா ஜெகதீஸ்வரா எனைவந்தாளாய்

அனுபல்லவி.

சாஸ்விதமில்லாப்பிரபஞ்சஞ் சாஸ்விதமென்றெண்ணியே
ஈஸ்வராவுன்றனைமீறி யேமாந்திருக்கிறேன் (ஈஸ்)

சரணங்கள்.

ஜெகதீஸ்வரவிமானமேறி திருநிலமாதுடன்வருவாய்
யுகந்தோறுஞ்செய்பாவந்தீர வுகந்தக்ரூரதீர்த்தந்தருவாய் (ஈஸ்)
அக்ரூரமஹாமுனிக்கு வன்றுபிரத்யக்ஷமானாய்
இக்ரூரனுக்குபுத்திசொல்லி யின்றுபிரத்யக்ஷமாவாய் (ஈஸ்)
திருமுகங்கிழக்காய்நின்று திருமங்கைமன்பாடல்பெற்றாய்
அருமையாயென்பாடலையு மதுபோலவேபற்றாய் (ஈஸ்)
அருள்மீதாருந்திருநீரகத் தடியார்கள்காலாலென்
சிரமீதிதுதைக்கும்படி சிட்சைசெய்துனைத்தொழவை (ஈஸ்)
வாயினாலுனைவிடாமல் வந்தித்திடும்பேர்கள்நல்ல
வாயினுமினோர்க்கொண்டென் வாய்மீதிதுமிழச்செய்வாய் (ஈஸ்)



தினமுன்னர்ச்சனைக்காகத் திருத்துழாய்கொண்டுவரும்
களவான்கள்கைகளாலென் கைகள்மீதடிக்கச்செய்வாய் (ஈஸ்)
காதிற்கிருஷ்ணசாமிநாமக் கதைகேட்போர்கைகொண்டுமென்
காதிற்கிள்ளிக்கேட்கும்படிக் கடைத்தேறச்செய்திடுவாய் (ஈஸ்)

திருநிலாத்திங்கட்டுண்டம் நிலாத்திங்கட்டுண்டத்தான் விஷயம். (அ0)

பியாகடை ராகம் அடதாளம்.

பல்லவி.

நிலாத்திங்கட்டுண்டத் தானே
நின்மலநாராயணனே மாதவனே கேசவனே

அனுபல்லவி.

மேலாம்விரஜைநதி மீதாம்பரமபதம்
மாலானவனேயுன்றன் மாய்கையறியேனே (நிலா)

சரணங்கள்.

முகமேற்காய்நின்றுமுன் சிவனுக்குப்பிரத்யக்ஷமானாய்
ஜெகமறியமங்கைமன்னன் செய்பாடலைப்பெறவானாய்
ககநமுலவும்புருஷஸூக்த விமானங்கண்டேறவானாய்
சுகசந்திரபுஷ்கரணிதீர்த்தஞ்சோகந்தணியதாயென்கோனாய் (நிலா)
சேரொருவரில்லாவல்லி தினைவு உனக்குத்தாராளோ
காரொளிநூக்குறையென்றாய் கண்முன்னேவாராளோ
பேர்விளக்குமபிள்ளையென்று பெருஞ்செல்வந்தாராளோ
சீருந்தங்குவிளைச் சிந்தனையைத்தீராளோ (நிலா)
முன்செய்தபவங்காட்டு முழுதுமெமதண்டம்
நின்னருளேபோட்டு நிலாத்திங்கட்டுண்டம்
உன்னிடவயிறுகாட்டு முலகமுதலாமண்டம்
என்வினையகலவோட்டு மீதென்னபிரமாண்டம் (நிலா)
சோதிவடிவேயுனை சோபிக்கவென்னுளம்வைத்தேன்
நீதிவடிவாயுள்ளுள் நிலைக்கவென்னையும்வைத்தேன்
ஆதியந்தமாய்கருத் தத்தனையுமவித்தேன்
ஓதியுமென்கஷ்டசுக முனதென்றுவொப்புவித்தேன் (நிலா)
வாசவன்முதலோருனை வந்தித்திருப்பதாலே
நேசனாய்சடாரிகனி நீயுண்டிருப்பதாலே
தேசத்திருகோஷ்டிகட்கு சேவையளிப்பதாலே
தாசன்கிருஷ்ணசாமியைத் தானாளுமெமாலே (நிலா)

## திருவூரகம் உலகளந்தான் விஷயம். (அக)

பிலாஹரி ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

உலகளந்தா னுலகளந்தான் எனை
புகுந்தாளவேணுமென் னுளம்புகுந்தான்

அநுபல்லவி.

பலவளந்தரும் பரமபதந்தான்
பரிவுடனெனக்குத்தர மனமிசைந்தான் (உல)

சரணங்கள்.

திருமுகமேற்காய்நின்ற திருவிக்கிரமன்
பெருஞ்சாரஸ்ரீகரவிமானப் பிரபலக்கிரமன் (உல)
திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார்
தரும்பாவினம்போல் தானென்பாவினங்கொள்வான் (உல)
ஆதிசேஷனுக்கன்று பிரத்யக்ஷமானவன்
சோதிவடிநாகதீர்த்தஞ் சுகிக்கத்தருபவன் (உல)
அமுதவல்லிநாய்ச்சியுடன் அவனும்வருவான்
சமுகத்தில்பணிசெய்யச் சாமியெனைக்கொள்ளுவான் (உல)
நாராயணனெனு நாமமுடையான்
பாராயணைப்பார்க்கின எப்போதும்படையான் (உல)
திருவூரகந்திருவுக் கிஷ்டகாமியாம்
திருகோகுலதெய்வ கிருஷ்ணசாமியாம் (உல)

---

## திருவெஃகா சொன்னவண்ணஞ்செய்தப்பெருமாள் விஷயம். (அஉ)

புன்னாகவராளி ராகம் அடதாளம்.

பல்லவி.

சொன்னவண்ணஞ் செய்தப்பெருமாள் திருவெஃகாவில்
சொன்னவண்ணமா யிருக்கிறான்

அநுபல்லவி.

என்னவண்ண மென்னவண
மென்னகன மென்னசுக
மென்னவேணுங்கேள் தருகிறான் மனதே யுனக்
கென்னவரங்கேள் தருகிறான் (சொன்)

சரணங்கள்.

கணிகண்ணன்பிரமன் பொய்கையாழ்வார்க்கும் பிரத்யக்ஷமாய்
கண்ணனுருளே மூவர்க்கும்



மணிவண்ணன்பிரத்யக்ஷமதுபோலாவனென்றன்மனமும்பார்க்கும்
மாதவன்செயலென்னமோ வெங்ஙனமெடுத்துரைப்பன்யார்க்கும் (சொன்)
அம்புலியில்யதோக்த காரி-கோமளவல்லி
அன்னையுரமைக்குப காரி
பம்பிவரும்வேதஸார விமானத்தில்வருவன்பவனிசாரி
பாவந்தீரப்பொய்கைபுஷ்கரணி படைத்திடுஞ்சக்ரதாரி (சொன்)
பொய்கையர்திருமங்கை யாழ்வார்-பேயாழ்வார்
புகழ்பெருந்திருமழிசை யாழ்வார்
செப்பாடலைக்கொண்ட செங்கண்மாலும்வாழ்வான்
சிறியன்செய்பாடலைக்கொண்டுச்சிறப்புடனெனையாள்வான் (சொன்)
அணையில் பீதாம்பரதரி-அவன்முகமேற்கா
யமரும்புஜங்க சயனராஹரி
தனையிலவற்குமேலாந் தெய்வமில்லையென்றறி
தாசன்கிருஷ்ணசாமிவார்த்தை நிஜமென்றங்கீகரி (சொன்)

---

## திருக்காரகம் கருணாகரப்பெருமாள் விஷயம். (அஙு)

தர்பார்ராகம் அடதாளம்.

பல்லவி.

கருணாகரப்பெருமாளே திருக்காரகம்.

அநுபல்லவி.

தருணமிந்தவேளைவாராய் சாமியென்வினைதீராய் (கரு)

சரணங்கள்.

பத்மாமணிநாய்ச்சியுடன் பார்வைதெற்காய்நின்றாயே
பத்மாயனகாருகரிஷிக்கு பிரத்யக்ஷபதந்தந்தாயே (கரு)
வாமனவிமானமீதில் வருவாயென்கண்மணியே
நாமதமிலாதக்ராய தீர்த்தந்தரகுதிப்பாயே (கரு)
கபடகாக்காசுரன்றன் கண்பிடுங்கிக்கண்கொடுத்தாய்
கபடசூஸ்திரதாரியாய்க் கடலைமேற்படுத்தாய் (கரு)
திருமங்கையாழ்வார்செய் திவ்யபாவிகமும்பெற்றாய்
தருவேன்பாவினமுனக்கு தயவாகப்பற்றுவாய் (கரு)
குதாய்பூதமிருமலை சுவைத்தமுதுண்டாயே
நாதகிருஷ்ணசாமிமதுரை வடநாட்டையாண்டாயே (கரு)

---

## திருக்கார்வானம் கள்வர்விஷயம். (அச)

பரசுராகம் அடதாளம்.

பல்லவி.

கள்வரிவாரமே காருண்யதாரகபிரம்ம

அனுபல்லவி.

என்னுமெண்ணெயைப்போ லெங்குநிறைந்தசோதி
உள்ளும்புறம்புமா யொளிரும்பிரணவாதாரக் (கள்)

சரணங்கள்.

திருக்கார்வானமருவுந் திவ்யதேசோன்மயப்
பெருக்கார்நிறைந்தமுதம் பேணித்தருகின்ற (கள்)
நின்றதிருக்கோலமாய் நேர்முகமேற்குமாய்
அன்றுபார்வதிக்கும் அன்பாய்பிரத்யக்ஷமானக் (கள்)
புஷ்கலவிமானமேறும் புண்ணியருக்குன்டோசமானம்
நிஷ்களகௌரிதடாக நிறைந்துநின்றசன்மானக் (கள்)
திருமங்கையாழ்வார் செய்பாவினங்கொண்ட
தருமென்பாவினத்தையுந் தயவாகக்கண்ட (கள்)
கமலவல்லிசமேதக் கண்ணனமக்குகந்த
அமலபதச்சேவைதர வடியேனுளம்புகுந்த (கள்)
ஆணுமாய்பெண்ணுமாய் அலியுமானவருமாய்
ஆணுமல்லபெண்ணுமல்ல அலியுமல்லாதவொரு (கள்)
மூலவெட்டக்கர மூலைத்தப்பேரின்பசுக
நீலமேனிக்கிருஷ்ண சாமியாய்நின்றிலகுங் (கள்)

திருக்கள்வனூர் ஆதிவராகப்பெருமாள் விஷயம். (அரு)

சாமராகம் அடதாளம்.

கண்ணிகள்.

ஆதிவராகப்பெருமாளுன் சோதிபாதம்
நீதியாயானே பணிந்தேனே யணிந்தேனே
வாராயோ வாராயோ கண்பாராயோ
வரந்தாராயோ தாராயோ தாராயோ
திருக்கள்வனூரினில் வாமனவிமானத்திரு
வஞ்சிலவல்லிநாயகனே சகியேனே இனிநானே
மனம்வாடுதே வாடுதே நித்யபுஷ்கரணியைத்
தேடுதே தேடுதே தேடுதே
நின்றுமேற்குமுக மன்றச்வத்தநாராயணற்
கென்றும்பிரத்யக்ஷமானாயே வாராதானாயே என்முன்வருவாயே
கோபமோ கோபமோ என்னகோபமோ
மனஸ்தாபமோ தாபமோ தாபமோ
திருமங்கையாழ்வார் தருஞ்சொற்தபாடலைப்
பெருஞ்சுபாகரனே கிருபாகரனே பராபரனே



ஈதெனுபாயமே உபாயமே என்பாடற்கொள
ஞாயமே ஞாயமே ஞாயமே
பூமிபாரந்தாங்க நேமிதரித்தகிருஷ்ண
சாமிகானலோலா சுசீலா ஆதிமூலா
ஜாலமோ பிரதிகூலமோ அனுகூலமோ
நீசெய்கோலமோ கோலமோ ?கோலமோ

திருப்பவளவண்ணம் பவளவண்ணப்பெருமாள் விஷயம். (அகூ)

கரகரப்பிரியைராகம் அடதாளம்.

பல்லவி.

பவளவண்ணப்பெருமாளே நீவா

அனுபல்லவி.

தவளநிறச்சங்கு சக்ரந்தரித்திடுந்
தாமோதராசக்ர தீர்த்தந்தந்தருளாப் (பவள)

சரணங்கள்.

திருப்பவளவண்ணத் தேசசனங்கட்கு
சேவையளித்திடுஞ் செய்கையைப்போலரி (பவள)
பவளவல்லிநாய்ச்சி தாயாருடனே
பாரில்ப்ரவாள விமானமேறியே (பவள)
திருமுகமேற்காய் நின்றுபாடற்கொண்ட
திருமங்கையாழ்வார் போலென்பாடற்கொளாப் (பவள)
அஸ்வனிதேவதைகட்கும் பார்வதிக்குமுன்னே
அளித்தாயேபிரத்யக்ஷ மதுபோல்பிரத்யக்ஷமாகப் (பவள)
கிருஷ்ணசாமியே யுனிஷ்டதாசர்களை
கேவலம்ரக்ஷித்த கீர்த்தியைப்போலரி (பவள)

திருபரமேச்சுரவிண்ணகரம் பரமபதநாதன் விஷயம். (அஎ)

மத்தியமாவதிராகம் அடதாளம்.

பல்லவி.

பாலிப்பாய்பாலிப்பாய் பரமபத நாதனே
பக்தசன சமேதனே

அனுபல்லவி.

காலியின்பின்திரிந்த கண்ணபிரானேயுனைக்
கண்ணால்காண்பதுமெப்போ கருத்தைத்திருத்தியிப்போ (பாலி)

சரணங்கள்.

நாதனோநானிலந் தன்னில்நான் படுந்தொல்லை
நாரணா நீயும் வல்லை
பாதகதியல்ல நாதரவுமில்லை
பரனேமங்கைமன்னன் பாடல்கொண்டா யென்னை (பாலி)

முகுந்தவிமானமீதி லமிர்தநிர்த்தந்தா
முகுந்தனேநீயுடன் வருவாய்
தகுந்தமுகமேற்காய் வீற்றிருந்தவனுவாய்
தாணியில்பல்லவனுக்கு பிரத்யக்ஷம்போலாவாய் (பாலி)

சாரமில்லாதபவச் சாகரத்தி லகப்பட்டேன்
சதாகாலந்துயருட் பட்டேன்
கோரமனைத்துமேத் தாளென்று முறையிட்டேன்
கோவிந்தாகோபாலா வென்றுனைக் கூப்பிட்டேன் (பாலி)

திருப்பரமேச்சுர விண்ணகரத்தோனே
தேவகிருஷ்ண சாமியென்போனே
மருமலிவைகுந்த வல்லிமணாளனே
மாதவாகேசவா வென்றுனையழைத்தேனே (பாலி)

---

## திருப்புட்குழி விஜயராகவன் விஷயம். (அஅ)

கண்டாராகம் ஆதிதாளம்.

பல்லவி.

வா வா வா விஜயராகவா இப்போதேகாவா

அநுபல்லவி.

வா வா திருப்புட்குழிவாசா வாமனதேவமுராரி
தா வா வரந்தாபத்திரையம் தாமதமதைப்பரியரி (வாவா)

சரணங்கள்.

மும்மையிலுமறந் செய்திடாமுடன்
முகுந்தனே நீயதையறி
இம்மைமறுமையிலு னடியருடனெனை
இயல்பாயாளும் ஸ்ரீஹரி (வாவா)

விஜயகோடிவிமாந மேறியேவந்து
விடாய்தீரஜடாயு தீர்த்தந்தருவாய்
ஜனஜடாய்வுக்குப் பிரத்யக்ஷமானதுபோல்
அருக்காய்ப்பிரத்யக்ஷந் தரவருவாய் (வாவா)



கிழக்கேதிருமுகமாய் மாதகவல்லியுடன்
சேசவனேயீற் றிருப்பாய்
வழக்கமாய்திருமங்கை யாழ்வார்பாடலைப்போல்
வரதாவென் பாடலையும்பெறவாய் (வாவா)

கேசவமாதவ கிருஷ்ண சாமியுனை
கேவலம்யான் நம்பிப்பேனே
மோசஞ்செய்யாதெனை முழுதும்ரக்ஷியும்
மோஹனாங்கா வென்பேனே (வாவா)

---

## திருநின்றவூர் பத்தராவிப்பெருமாள் விஷயம். (அகூ)

முகாரிராகம் அடதாளம்.

பல்லவி.

பத்தராவிப் பெருமானே என்னை நீ
பாதுகாப்ப தெந்நாளோ

சரணங்கள்.

எத்தாலும்வகைதெரிந் துனைத்தொழவொட்டாமல்
தடணிய யிழுக்குதே
அத்தாவுன்செயலன்றி என்செயலொன்றுமில்லை
அறிந்தாளாதென் வெறுப்பிதே (பத்)

என்னைப்பெற்றதாயாருடன் ஸ்ரீநிவாசவிமானமேறி
எழினுடன்வருவா யிப்போதே
உன்னைத்துதித்தபேர்க ளொருதன்பமடையமொன்
றுண்மைவேதங்க ளோதுதே (பத்)

வருணபுஷ்கரணி வர்த்தக்ஷீரநதிதீர்த்தம்
வந்தெனக்குத் தாராயோ
வருணனுக்குப்பிரத்யக்ஷ மானதுபோலென்றனக்கு
வந்துப்பிரத்யக்ஷ மாகாயோ (பத்)

வழக்கமாய்திருமங்கை யாழ்வார்பாடலைக்கொண்டாய்
வரதாவந்தெனை யாளுவாய்
கிழக்குமுகமாய்நின்ற பக்தவத்ஸலனேயென்
கீர்த்தனையுங்கைக் கொள்ளுவாய் (பத்)

ஆடும்பாம்பணைமீதி லரிதுயிலமர்ந்திடும்
ஹரிகிருஷ்ணசாமி வாராயோ
காடுமெனைத்திருநின்ற ஹரிநின்னடிநிழல்
தந்திடுவென்கனை நீராயோ (பத்)

திருவெவ்வுளூர் வீரராகவன் விஷயம். (௯0)

கமாசுராகம் ரூபகதாளம்.

பல்லவி.

ஸ்ரீவீரராகவன்றன்சேவடி நாம்தேடுவோம்பாடுவோம்

அநுபல்லவி.

ஸ்ரீவீரராகவன் திருவெவ்வுளூரைத்
தெரிசித்தபேர்களைத் தெரிசித்தாலும்போதும்
ஜெனனமரணசோகந்தீருஞ் ஜென்மசாபல்யமாம்
தகணக - ஜம்தரி - ஜம்தரி - தீம்தீம் - தரிகிட - தாதா
ததிமித-தரிகிட - தளங்கு - தோமென - வரவின்-மேலாடிய (ஸ்ரீ)

சரணங்கள்.

வீக்ஷாரண்யக்ஷேத்ரங் கனகவல்லியுடன்
விஜயகோடி விமானத்தின்மேல்
வீரராகவன் வருவான்
சாக்ஷாத்காரனவன் சரணத்தின்மேல்வீழ்வாய்
சதஸ்ருத்தாபநாசதீர்த்தமாடுவாய் மிகவும்பாடுவாய்
சஞ்சிதவினையைப்பிடித்து சாமிபதத்திற்கேபலிகொடுத்து
அஞ்சலிகரங்குவித்து வானந்தமாகவேதுதித்து (ஸ்ரீ)
திருமுகங்கிழக்காய் புஜங்கசயனனாய்
திசம்சாலிஹோத்ரர்க்கு திவ்யப்பிரத்யக்ஷமாய்
தினமுமா னானே
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனஞ்
சீரமாய்க்கொண்டா னென்பாடலையுங்கண்டான்
தான்சங்கணைந்தரித்தான் றயாபரனெனும்பேரெடுத்தான்
தாசர்களைமிகவுடுத்தான் ருசதாசனெனும்பேர்கொடுத்தான் (ஸ்ரீ)
காலையுமாலையுங் கன்னியர்மோகத்தில்
கடுவன்முடுவென் பின்தொடர்ந்தாற்போலுங்
கண்டுமயங்கு றுயே
அலையுமனதே உனக்கிதென்றொல்லை
ஆசைப்பெருக்கினில் நேசப்படுகிறாய் மோசப்படுகிறாய்
தாமதகுணமதைவிடுத்து தர்மாகமசாஸ்திரம்படித்து
தானதவங்களைமுடித்து தாசரதிகிருஷ்ணசாமியையடுத்து (ஸ்ரீ)

---

திருநீர்மலை நீர்வண்ணன் விஷயம். (௯௧)

முகாரிராகம் சாபுதாளம்.

பல்லவி.

நித்யானந்தத்தைநாடு நந்நீர்வண்ணன்பதந் தேடு - ஓமனதே
நீலமுகில்வண்ணன்பதந்தேடு



அநுபல்லவி.

சத்யதிருநீர்மலை ஈகாரண்யவனங்கூடு
தாசஜனங்களுடன் ருனவாடு (நித்)

சரணங்கள்.

அணிமாமலர்மங்கை நாய்ச்சியுமெய்போது
மற்புததோயகிரி விமானத்தின்மீது
மணியுணிரங்கன் வருவானிப்போது
மணிகர்ணிகதீர்த்த மகிமைப்பன்யமேது (நித்)
தொண்டைமான்சக்ரவர்த்தி மிருகுமார்க்கண்டர்க்கும்
தொல்புவியிற்பிரத்யக்ஷ மானதின்செருக்கும்
கண்டோர்களிக்குமா ணிக்கச்சயனப்பெருக்கும்
கருணைமுகந்தெற்காய் நமக்குக்காக்ஷிதாவிருக்கும் (நித்)
பூதத்தாழ்வார்திரு மங்கையாழ்வாராலே
புகழும்பாடலைமுன் கொண்டிருப்பதாலே
பாதத்திற்குநாம்கூடும் பாமலராதுபோலே
ப்ரவாசுதேவன்கொண்டு பாவிப்பணிவிமேலே (நித்)
கானல்ஜலம்போல் உலகவைபோகம்
காணும்போதிது மிருந்தசந்தேகம்
வானமின்னலைப்போ லழியுமித்தேகம்
வகையறியுனக்கது ஞடனென்கிறேகம் (நித்)
பெண்டுப்பிள்ளைசுற்ற முதலானபேர்கள்
பிரிந்துயிர்போம்போது கூடவராரர்கள்
பண்டார்ச்சிதமதைப் பங்கிட்டுக்கொள்வார்கள்
படுந்துன்பத்தைப்பங்கிட வுடன்படார்கள் (நித்)
அனவரதமுமரி பதந்துதிசெய்யே
அவர்திருமந்திர மனதினில்வையே
தனதான்யமுதற் சம்பத்தும்பொய்யே
தாசன்கிருஷ்ணசாமி சொல்வதுமெய்யே (நித்)

---

திருவிடவெந்தை நித்யகல்யாணர் விஷயம். (௯௨)

பியாகடைராகம் அடதாளம்.

பல்லவி.

நித்தியகல்யாண மூர்த்தியே - உனைத்துதிக்க
நினைவளித்திடுமென்றும்பூர்த்தியே

அநுபல்லவி.

சத்திநின்றன்றை கீர்த்தியே நாராயணா
நான்செய்திடுவேன் நீயவார்த்தியே மங்களார்த்தியே (நி

சரணங்கள்.

கல்யாணவிமானத்தில் வருவாய் கோமளவல்லியுடன்
கல்யாணபதச்சேவை தருவாய்
கல்யாணதீர்த்தப்ரசாத மருள்வாய் திருமங்கையாழ்வார்
கலிபோலென்கலியைக் கொள்ளுவாய் வினைதள்ளுவாய் (நித்)
மாநிலத்தில் நின்றிருந்தாயே நிறைக்குமுகமாய்
மார்க்கண்டேயற்குப்பிரத்யக்ஷமானாயே
வாவிலத்திலெங்குமென் றாயே நிறைந்திருந்தும்
வந்தெனக்கோர்வார்த்தைசெல் லாயே முன்னில்லாயே (நித்)
திருவிடவெந்தையி லிருக்கிறாய் தியானபரனை
தெரிசனைதரவர வழைக்கிறாய்
கருதும்பேர்பாவந் துடைக்கிறாய் கருதாதபேரைக்
காலன்கையிலொப் படைக்கிறாய் படைக்கிறாய் (நித்)
ருத்திரப்பதமை யாட்டுறாய் ருத்திரமற்றால்
சுடுகாட்டில்போக வோட்டுறாய்
காத்திரத்தருளைக் காட்டுறாய் கண்டபேருக்கு
களித்தமுதத்தை யூட்டுறாய் அருள்காட்டுறாய் (நித்)
கட்டாதகாலியை மேய்க்கிறாய் கிருஷ்ணசாமியுனைக்
காணவென்றால்முட்டச் செய்கிறாய்
எட்டக்கரக்கயிற்றைப் பூட்டுறாய் பூட்டைத்தறிக்க
இந்திரியங்களையேவி விடுகிறாய் விளையாடுறாய் (நித்)

---

திருக்கடன்மல்லை தலைச்சயனத்துறைவார் விஷயம். (௬௬)

அபனுபராகம் ரூபகதாளம்.

பல்லவி.

அறம்பயேஜஹம் தலைச்சயனத்துறை வாரேஹரியெனவும்

அநுபல்லவி.

அறம்பயேஸ்ரீ நிலமங்கையெனவு மகத்தானெனவும் பதிமனமே (அற)

சரணங்கள்.

ககனாக்ருதிவிமானமேறி காத்தவரனேகப்பேரை
சகந்நோர்நம்முதலோர்க்கும் கருடாதித்தர்தருவர் (அற)
அண்டர்தொழுமுகங்கிழக் கமர்ந்தபுஜங்கசயனர்
புண்டரீகரிஷிக்குப் பிரத்யக்ஷம்போலானவர் (அற)
பூதத்தாழ்வார்திரு மங்கைமன்னன்புகழ்கவி
போதத்தையக்கீகரித்த புண்யமொன்கலிகொள்வர் (அற)
திருக்கடன்மல்லை ஸ்ரீகிருஷ்ணசாமிசேவை
கருக்கடலையெட்டபோதும் காண்பிப்பதில்லை (அற)



திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி விஷயம். (௬௭)

பிலஹரிராகம் அடதாளம்.

பல்லவி.

ஸ்ரீபார்த்தசாரதி வரந்தாதா திருவல்லிக்கேணி யபயஸ்தநேயா

அநுபல்லவி.

ஸ்ரீருக்மணிபிராட்டி சமேதா
நினைவெனையாளா நிதென்னவாதா (ஸ்ரீ)

சரணங்கள்.

அநிருத்தாபிரத்யும்நா பலராமா
அழகியசாத்யகி சகஸ்திரநாமா
கனிவாய்குவலமுக மின்றபாரந்தாமா
கட்டனெகையாளா திருப்பதாமமா (ஸ்ரீ)
ஆத்ரேயமக ரிஷிசொல்லீயே
ஆராதிக்கப் உவமானாயே
பாத்ரனெனும்சு மதிக்குமென்றாயே
பார்த்திபனுக்கும் பிரத்யக்ஷமானாயே (ஸ்ரீ)
மன்னுதனெனும் ரங்கநாதா
மாவேதவல்லிந தாயார்சமேதா
பன்னுசச்சயநக் கிடக்குமுகவிநோதா
பாரும்பிருகுவால் கன்யாதானம்பெற்றபாதா (ஸ்ரீ)
தெள்ளியசிங்கா நரசிம்மதேவா
தெளிவாய்முகமேற் றிருப்போனேகாவா
தள்ளிப்பயமந்தி மகரிஷிக்குந்தேவா
சாலமகரிஷிக்கு பிரத்யக்ஷம்போல்காவா (ஸ்ரீ)
பாவனசக்ரவர்த்தி திருமகனேநவநீதா
பரதசத்ருக்நலக்ஷ்மணை மைதிலிசமேதா
தேவஸ்ரீராமாதெற்கு முகநின்றநாதா
தேஜமதுமான்மகரிஷிக்குப் பிரத்யக்ஷபாதா (ஸ்ரீ)
தேவப்பெருமான் கருடாரூடனானவனே
தினமுஞ்சேஷ விமானத்தில்வருபவனே
சேவைதாமுகம் கிழக்காய்நிற்பவனே
சீனவையாளா தேனேவிருப்பவனே (ஸ்ரீ)
இந்திரவிமானவக்கி மீனதீர்த்தமாமே
இனியவிஷ்ணுதீர்த்த மைக்காற்கும்வதாமே
இந்திரவுலகமிவ்புலகோர் பாவந்தீர்ப்பதாமே
எழிலார்கைரவணி சரணம்பதாமே (ஸ்ரீ)
பிருகுத்ரிமரீசிமார்க் கண்டேயராமே
பிரபல்நாமதிசப்த ரோமஜாலிதாமே

பெருமையுடையவெழு நிதிகள்தவமிடாமே
யெளியிருப்போனே யெனக்கிடந்தரலாமே (ஸ்ரீ)
திருமங்கையாழ்வார் பேயாழ்வாராலே
திருமழிசையாழ்வார் மூவர்தம்மாலே
தருமங்களா சாஸனம்பெற்றதாலே
தாசன்கிருஷ்ணசாமியை ரக்ஷிப்பதுபோலே (ஸ்ரீ)

---

சோளசிங்கபுரம் யோகாநரசிங்கன் விஷயம். (கூ)

காம்போதிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

யோகாநரசிங்க னாய்புகுந்திருந்திட
உனக்கொருகுறையுண்டோ ஓமனதே

அநுபல்லவி.

வாகாயபிரக லாதியுடன்றெரிசியுன்
வசப்படுத்தலை புண்டோ ஓமனதே (யோகா

சரணங்கள்.

சோளசிங்கபுரமெனுந் திருகடிகாசலந்
தோன்றும்வைபோக நக்கண்டுமனதே
காளசர்ப்பத்தைப்பிடித் ததன்மேல்கடைபிடித்
தாளமேகதேக தங்கண்டுமனதே (யோகா)
சிங்ககோஷ்டத்திலிமாத மேதியவன்வரும்போது
சீக்ரமாயெதிர் சென்றுமனதே
தங்களஸ்திரத்தரித்தோனை யமுததீர்த்தங்கேட்டிருந்து
சாட்பணித்திருக்கை கண்டுமனதே (யோகா)
பக்கம்பிழக்குமுகம் வீற்றிருந்தகோலமதை
பார்த்திருந்தாலும் போதும்மனதே
தக்கனைக்காக்கனிப் பெருமானைத்தரிசித்து
தக்கான்குளத்தீர்த்த முண்பாய்மனதே (யோகா)
என்னப்பன்சிறிய திருவடிராஜனுக்கு
எப்போதும்பிரத்யக்ஷம் ஓமனதே
முன்னந்திருமங்கையாழ்வார் பேயாழ்வார்சம்மாழ்வார்
மூவர்செய்பாடலைக் கொண்டானென்மனதே (யோகா)
இன்றைக்கிருப்பவர் நாளைக்கிருப்பதில்லை
இனிபிறப்பதுந் தொல்லைமனதே
என்றுஸ்வினவெதிர்த்த கிருஷ்ணசாமியின்சொல்லைக்
கண்டவர்பெருமையும் வல்லேமனதே (யோகா)

தொண்டைநாட்டுத்திருப்பதிகள் முற்றும்.

---



# வடநாட்டுத்திருப்பதிகள் (கக)

வேங்கடாசலம் திருப்பதி திருவேங்கடத்தான் விஷயம். (சூக)

முகாரிராகம் அடதாளம்.

பல்லவி.

வேங்கடாசலப்பதியே உனைவிடவேறில்லைகதியே

சரணங்கள்.

நான்கொணுதபவ பந்தங்க ளொன்றுடன்
ளுன்வந்தபோ ராடுதே - இனி
பாங்குடனைநந்தநித் தெனையாளாதிருப்பதேன்
பரங்கெனமனம் வாடுதே (வேங்)

ஆழ்வார்பொய்கைமுதலோர்மங்களாசாஸனங்கொண்ட
தாதிமறைக ளோதுதே - என்
குழ்வானப்புன்கவி கொள்ளாதிருப்பது
தன்மமோவென் வாதிதே (வேங்)

சபரிகொடுத்தகனி சாப்பின்னதென்று
சாற்றுய்வேன் கடத்தானோ - நான்
விபரீதமாகவக் கனிகளைத்தந்துமே
வேண்டுவன்பவங் கெடுத்தானோ (வேங்)

குசேலனுனைக்கருத்தந்த அவலின்னவலென்று
கூறுவமெனர் சலனே - நான்
கசிவமாகவைத்த அவலைத்தக்ஷயதினைச்
தொழுவேன்சேவா சலனே (வேங்)

விதுரனுனக்கிட்ட விருந்திருந்தனைத்தை
விளம்பவும் போகாதா - நான்
சதாருகவிருந்திட வருந்திருமன்னைத்
தான்வர லாகாதா (வேங்)

ஆதிமூலமென்று வாவெயுனக்கென்ன
அரினமது நந்ததோ - இந்த
நீதிபதியாமுடன் அபராதினைனென்று
நினைந்துவுன்மன கொந்ததோ (வேங்)

அனந்தநிலய விமானகிரீதியே
அலர்மேன்மங்கையுடன் வருவாய் - இப்போ
தாசக்கல்லமாமி புஷ்கரணிகோனேதீர்த்தக்
தந்துனைருளைத் தருவாய் (வேங்)

தொண்டைமான் சக்ரவர்த்திக்கு திருக்குறுகமாய்நின்று
தொல்புவியிற்பிரத்யக்ஷ மாளுயே - இப்போ
தன்டையிலுமழைத்து கிருஷ்ணசாமிதாசனுக்கும்
அதுபோல்பிரத்யக்ஷ மானாயே (வேங்)

## திருச்சிங்கவேள்குன்றம் ஸ்ரீலட்சுமீநரசிங்கன் விஷயம். (௬௭)

சஹாநாராகம் ஆதிதாளம்.

பல்லவி.

ஸ்ரீலட்சுமீநரசிங்கா ஸ்ரீலட்சுமீநரசிங்கா

அநுபல்லவி.

திருச்சிங்கவேள்குன்றம் ஸ்ரீலட்சுமீநரசிங்கா (ஸ்ரீல)

சரணங்கள்.

ஏனையாநரசிங்கா வேணையாளாதேனையா
தேனையாசிந்துமோவாய் திரவாதேனுசெப்பையா (ஸ்ரீல)
இனியப்பிரகலாதனுக்குரித்தா யிரணியனைச்சங்கரித்தாய்
ஏனிமுகம்விழுக்குவித்திருந்தாய் தயாநிதியெனையாளுங்கருத்தாய் (ஸ்ரீல)
பாபநாசதீர்த்தம்படைத்தாய் பாவிகள்பாவந்துடைத்தாய்
நாபந்திரவெனக்குரித்தாய் தந்தாளுமேகருத்தாய் (ஸ்ரீல)
இந்திரதீர்த்தமுடைத்தா யெழினரசிங்கதீர்த்தம்படைத்தாய்
சந்திரமாயென்பாவந்துடைத்தாய் தாசனென்றும்பேர்கொடுத்தாய் (ஸ்ரீல)
நம்மாழ்வார்கலியன்பாடல்கண்டாய்நான்பாடவுமென்றுவணங்கொண்டாய்
எம்மாழ்வார்களுக்கினிதொண்டா யெப்போதுமேசெய்கண்டாய் (ஸ்ரீல)
தகைசேரகோபிலவாசா தாசனுமென்றுளவாசா
நகைவிமானமேனிவாசா கோவிந்தாவெனையாள்ஜகதீசா (ஸ்ரீல)
கேசவாநரசிங்கா கிருஷ்ணசாமிநரசிங்கா
வாசலட்சுமிநரசிங்கா வந்தாளுமேநரசிங்கா (ஸ்ரீல)

## திருவயோத்தி சக்ரவர்த்தித் திருமகன் விஷயம். (௬௮)

சங்கராபரணராகம் அடதாளம்.

கண்ணிகள்.

சக்ரவர்த்தித்திருமகன்றன் பெருமையைச்
சாற்றவுமெளிதாமோ ஓமனதே
அக்ஷரவம்புண்ட வான்மதித்திடவுந்த
ஆதிநாராயணன் ஓமனதே
வடக்கேதிருமுகமாய் வீற்றிருந்தயோத்தியின்
வபமாய்பரதாழ்வாருக்கு ஓமனதே
நடக்கையபயமீந்த தேவர்முனிவருக்குந்
தானேபிரத்யக்ஷமானான் ஓமனதே



நம்மாழ்வார்பெரியாழ்வார் திருமங்கையாழ்வார்
குலசேகராழ்வார் ஓமனதே
செம்மையாய்நால்வர் மங்களாசாஸனங்கொண்ட
சிறப்புநிர்கதிசெய் ஓமனதே
விஷ்ணுபரமபத சத்யபுஷ்கரணிதோய்ந்து
நீராடுவாய்சரயுநதியில் ஓமனதே
புஷ்கலவிமானமீது நாசமேதனுப்ப
புறப்பாடுசெய்துகோரக்ஷிப்பான் ஓமனதே
அக்கும்பாமலிக்கும்பாமன் எக்கும்பாமனுயிருந்து
அன்றுமூலபலங்கொய்தான் ஓமனதே
பொற்கும்பீதகவாடை தக்கவனாயுதித்த
பொன்னாக்கனவனுமே ஓமனதே
கோகுலத்தினில்வந்த கோவிந்தன்மாதவன்
கோபாலன்கேசவன் ஓமனதே
குலங்காத்திடும் ஹரிகிருஷ்ணசாமியை
அடுத்திருவெப்போதும் ஓமனதே

## திருநைமிசாரணியம் தேவராஜன் விஷயம். (௬௯)

காப்பிராகம் அடதாளம்.

பல்லவி.

தேவராஜனே [illegible] நாதனே திருநைமிசாரணியம்

அநுபல்லவி.

தேவராஜனே தேவபாலனே
ஸ்ரீஹரிலட்சுமிக்கு மனுகூலனே
காவாயெனைமுன்னம் கரியாதிமூலனே
கான லோலனே (தேவ)

சரணங்கள்.

ஆதாரம்புண்டரீக வல்லியல தில்லையே
அதைநீயும் வல்லையே
பாதாரவிந்தம்பணியமுன் வில்லாயே
பாதுகாத்திடுவேனென்றுஞ் சொல்லாயே
சேதாரஞ்செய்யுஞ்சேஷ்டைகளை வெல்லாயே
தீவினையைக் கெல்லாயே (தேவ)
தேவரிஷிகளிந்திராதிகள்முன் சென்றுயே
தேயசுதன்மருக்குந் தாயே
பாவந்திரமுன்பிரத்யக்ஷ மானுயே
பாரிலெனக்குமபோது மானாயே
தேவதிருமங்கையாழ்வார் பாடலீயே
நேமமாய்க் கொண்டாயே (தே

சனகன்றந்தவில்லை யொடித்தாயே
சனகிமணமுடித் தாயே
பனகமீதிலேறி நடித்தாயே
பாற்கடல்தனிலும் படுத்தாயே
அனந்ததாசர்கன்றுதியை யடுத்தாயே
ஆளாயெனை விடுத்தாயே (தேவ)
கண்ணால்காண்பதங் குணமுகமின்றேனை யெப்போ
கண்டாலுந் தப்போ
என்னுடைத்திவ்யவிச்ராந்தரித்த மகிப்பதெப்போ
எழில்கிருஷ்ணசாமியென்றதை யுனைச்செப்ப
பண்ணிசையுடன்பாடவு மென்றப்போ
பரிந்தாளு மிப்போ (தேவ)

## திருச்சாளக்கிராமம் ஸ்ரீமூர்த்திப்பெருமாள் விஷயம். (க00)

பிலஹரிராகம் சாப்புதாளம்.

பல்லவி.

ஸ்ரீமூர்த்திப்பெருமாளே தெரிசித்தபேர்களுனை
திவ்யசூரியர்களானார்கள் திவ்யநித்யசூரியர்களானார்கள்

அநுபல்லவி.

திருச்சாளக்கிராமத்தில் தினர்களுக்குப்பொன்னை
தினப்பிரதிதினமீந்து தெரிசனைத்தருராமா
கருடன்மீதினிலேறியே கனகாம்பரமதுமீதியே
கருதுவோர்க்குபகாரியே கமலையுடன்சேவைதாரியே (ஸ்ரீ)

சரணங்கள்.

மாவாய்ப்பிளந்தோனே மாதவாவென்றோருனை
மானிகளானார்கள் சன்மானிகளானார்கள்
தேவாபெரியாழ்வார் திருமங்கையாழ்வாரால்
செய்யும்பாடலைப்பெற்றுத் திருமுகங்கிழக்காய்நின்றோய்
காவாயென்றனையுமிப்போ கண்டபிரமருத்ராதியப்போ
கண்டதும்பிரத்யக்ஷந்தப்போகாண்பதுனைபிரத்யக்ஷமெப்போ (ஸ்ரீ)
வருணன்முதலோர்தொழும் வரதாவரதாவென்றோர்
வைணவரானார்கள் ஸ்ரீவைணவரானார்கள்
கருணைஸ்ரீதேவியுடன் கநகவிமானத்தில்வாராய்
கண்டகிநதிதீர்த்தந் கனசக்ரதீர்த்தந்தாராய்
தருணமென்சொல்கேளையா தாமோதராவுன்றனையா
தரிசனத்தரவென்னுளையா தயாபராவெனையாளையா
ராமாராமாவென்றன் னுமம்ஸ்மரித்தபேர்கள்
ராஜர்களானார்கள் மஹாராஜர்களானார்கள்
காமாந்தகாரத்தில் காலங்கழித்திடுங்



கடைகெனையுமித்தக் கடைத்தேறச்செய்திடாய்
ராமனெனபரந்தாமனே ராஜதேஜகோபாலனே
தாமமணிந்தமார்பனே தயாநிதியையோகனே
தரணியில்யாவர்க்கும் பயநிவாரணஞ்செய்ய
தாத்தகிருஷ்ணசாமி யானுயேதாசாநிதாபோதாருறுயே
அரணியந்தன்னில் பையமுனிவர்க்கிரங்கு
அன்றுபிரகலாதனை யாதரித்திடவுவந்து
இரணியன்மார்பைப்பிளந்து விடுக்கண்யாவர்க்குங்களைந்த
இனிமையாய்ப்படியளந்த வெங்கடபிரானேமுகுந்த (ஸ்ரீ)

## திருவதரியாச்சிரமம் பதரிநாராயணன் விஷயம். (க0க)

பைரவிராகம் ஆதிதாளம்.

கண்ணிகள்.

நரிநாராயணனென்றன் பஜனைசெய்திடுவே
தரிவேறொருதெய்வத்தைப் பாடேன்பாடேன்பாடே
திருவதரியாச்சிரமத்தோயுனைச் சிந்தனைசெய்திடு
தரிவையர்வஞ்சமயலைத் தேடேன்தேடேன்தேடே
ப்தகுண்டதீர்த்தமாடி தாசஜனங்
தப்தகாஞ்சனவிமானசேவை தரிசிப்பேன்தரிசிப்பேன்
அரவிந்தவல்லியுட னருள்முகங்கிழக்
அரவிந்தபதங்கண்டானந்தமா யாடுவேன்ஆடுவேன்ஆடுவே
இலந்தைமரத்தின்கீழவதரித்த இன்பஞானமுத
இலஞ்சபஸ்பியாய்காற்றுபதேச மீந்தோய்நீந்தோய்நீந்தோ
காருலகிருஷ்ணசாமியுனைக் கும்பிட்டுப்பணிய
காருலமானுடமவரைக் கூடேன்கூடேன்கூடே

## திருக்கண்ணங்கண்டம் நீலமேகப்பெருமாள் விஷயம்

பியாகுராகம் சாப்புதாளம்.

பல்லவி.

நீலமேகப்பெருமாளேயுன்னை நினைக்கவாமருள்வ

அநுபல்லவி.

நீலமலைபோலுமேனியனே நந்தனபாலனே
சிலனேயாதி மூலனே கோபாலனே

சரணங்கள்.

திருக்கண்ணங்கண்டத்தூனா யெங்களை
செல்வம் ளுளனே
செருக்கொண்டவல்லரக்கரைக் கொன்ற
செருவரளாபெருமானே வருநானோதொருமானே. (

புண்டரீகவல்லியுடன் மங்களா
விமானபுரு ஷோத்தமா
அண்டும்பரத்வாசமஹர்ஷிக்குப் பிரத்யக்ஷம்
அளித்தனேயேகளித்தனையே விளித்தாளவொளித்தனையே. (நிலை)
நின்றுமெழக்குமுகமங்கள நிர்த்தம்
நினைப்போர்க்களிப் பவனே
அன்றுபெரியாழ்வார்மங்கையாழ்வார் கவிக்
கினியனேதனியனேகனியெனுளக் கனியனே. (நில)
நின்மலக்கிருஷ்ணசாமியென் கோவே
நீளாசமே தவே
நின்னதேமகிமையென்னதொன்று மில்லை
ன்மனதுகன்மனதோவன்மனதோ வென்மனது. (நின)

---

## திருப்பிரிதி பரமபுருஷன் விஷயம். (௧0௩)

### ஆனந்தபைரவிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

மபுருஷபரந் தாமனே - ஸ்ரீ

அநுபல்லவி.

ரமாவரந்தராதென் தரமாமறமாவறமா (பர)

சரணங்கள்.

பிரிதிபரிமளவல்லி நேசனேதேவா
ம்பிரீதிசெயுமென்னுள்ள வாசனேயெனக்
ருப்பிரீதிசெயோனுதோ ஸீசனேயாளக்
ப்பிரீதியாய்கோவர்த்தந விமானமேறிவாராய் (பர)
மங்கையாழ்வார்கவிக்கனு கூலனேநிகழ்சு
பார்வதிக்குப்பிரத்யக்ஷ லோலனேவிருதா
லக்ஷ்மியுதேபரி பாலனேகண்டுஞ்
லஞ்செய்யாமலாளுஞ் சாமிகானலோலனே (பர)
சவாமானஸசரஸ கேளாய்நீயிந்திர
ரசகோவர்த்தநதீர்த்தந்தாராயோ வந்தேனே
ரசனுகவுமருட்கணபாராயோ சாமி
மோசஞ்செய்யாதெனே முழுதுமேயாளாயே (பர)
குலவர்த்தபுஜங்கசயநநீயே யடியேன்
ஆகுலந்திருமத்தரியாமியே குணமுக
மாகுலங்காத்தகிருஷ்ணசாமியே புன்னை
மீதுலமாறுவுந்துதியாகுல மீகுலமல்ல (பர)

---



## திருவடமதுரை வடமதுராபிறந்தான்விஷயம். (௧0௪)

### எதுகுலகாம்போதிராகம் ஆதிதாளம்.

கண்ணிகள்.

துவார்பிறந்தான் வடமதுராபிறந்தான்
துவாதிருவடமதுரா ராஜன்பிறந்தான்
தங்கவஸ்திரயிடை தங்கப்பிறந்தான்
எங்கள்ருக்மணிசத்யபாமைக் கினியன்பிறந்தான்
நந்தன்மதலையாய் நாரணன்பிறந்தான்
சொர்தபத்திரவிமானமேறுஞ் கபிலன்பிறந்தான்
பாஞ்சசன்னியத்துடன் பரமன்பிறந்தான்
வாஞ்சையமுராதீர்த்தந்தர வரதன்பிறந்தான்
கோதைமுகங்கிழக்குநின்ற கோபாலன்பிறந்தான்
வாதையில்லையென்றுதேவர் வாழ்த்தப்பிறந்தான்
திருமங்கைமன்னம்மாழ்வார் தினம்புகழப்பிறந்தான்
உருப்பொற்பானபெரியாழ்வார் கவிக்குகந்தோன்பிறந்தான்
ஈசன்யசோதைவயிற் றின்றுபிறந்தான்
கேசவனென்னுங்கிருஷ்ண சாமிபிறந்தான்

---

## திருத்துவாரகை கல்யாணநாராயணன்விஷயம். (௧0௫)

### சங்கராபரணராகம் அடதாளம்.

பல்லவி.

கல்யாணமே கல்யாணநாராயணன்

சரணங்கள்.

கல்யாணமேலக்ஷ்மி வைபோகமேதிருக்
கல்யாணத்துவாரகையில் கனகாம்பரதரன் (கல்)
வைபோகமேவான அக்ஷயிமுழங்க
வானவரஷ்டமரிஷிக ளணியணிசூழ்ந்திடுங் (கல்)
ஹேமகூடவிமானமேல் நாராயணனைவரச்செய்து
கோமதிதீர்த்தங்கொண்டு திருமஞ்சனஞ்செய்யுங் (கல்)
நவரத்னகசிதமண்டபத்தின் மணவறையில்
கவிருக்மிணியுடன் நாராயணமூர்த்திக்குங் (கல்)
வீற்றிருக்குமேற்குமுகமாய் விமலநாராயணற்கு
தேற்றமாய்லங்கிதல் தேவஸ்திரீகள்செய்யுங் (கல்)
நம்மாழ்வார்பெரியாழ்வார் நல்லதிருமங்கையாழ்வார்
அம்மைகோதைபாடல்க ளன்புடன்பாடிய (கல்)
சங்கீதநாளமிருதங்க மேளங்களுடன்
சாணையுடன்ராமச் சந்திரயாசிதிக்குங் (கல்)

அம்பியரசானி — யருர்நிசாஷியர்ப்
அரவிந்தலட்சுமிக்கு — ஸ்ரீமாங்கிலியஞ்சூடிய (கல்)
அரோபதைக்குப்பிரத்யக்ஷ — மானசாரணற்கு
சுபமாய்மங்களம்லாவி — சோபனங்கள்பாடும் (கல்)
தட்சணைதாம்பூலம் — பூசுரோத்தமர்க்களித்த
சம்புநீவில்யாவர்க்கும் — கோதானம்பூதானமீந்த (கல்)
வசிஷ்டாதிமுனிவர்கள் — வாழ்த்தியட்சதைதூவ
வளராதருக்மணியுடன் — கிருஷ்ணசாமிக்கும் (கல்)

---

திருவாய்ப்பாடி கோகுலம் நவமோஹனகண்ணன்விஷயம். (௧௦௬)

கல்யாணிராகம் அடதாளம்.

பல்லவி.

நவமோஹனகண்ணனே நாராயணா நவநீதமுண்டமேகவண்ணனே

சரணங்கள்.

நீலோத்பலம்ஸ்யாமலம் — மின்னதேருபம்
நீரசமென்ற — மானனம்
பாலனம்பக்தானுகூலம் — பாஞ்சசன்யம்பவமோசனம்
காலவேதனைநீக்குமாதி — மூலனேகானலோலனே (கவ)

சின்னுமமேசிந்திதம் — நிரஞ்சனம்
கின்பிரதாபமே — பிரபந்தம்
பன்னகாசனபரமபதம் — பாஸ்கரகுலதேஜவாசம்
உன்னதவுபேந்திரசாரா — பூமிதவுதித்யமுகநீரம் (கவ)

என்னையொராளாயென்றுயோ — பேமகூடவிமானத்தில்வந்
தெனக்கொருவார்த்தை — சொல்லாயோ
அன்னைதந்தைகுருவுநீ — யருள்முகங்கிழக்குநின்றுயே
உன்னைநம்பினேனென்றுயே — புகந்தெனையாளுவாயே (கவ)

குலசேகராழ்வார்பெரியாழ்வார் — குலக்கோதை
குலவுத்திருமங்கை — யாழ்வார்
நலமதில்மங்களாசாஸனம் — தயாபராகொண்டாயே
சிலமாயென்பாடலையு — கந்தருகொள்வாயே (கவ)

கனகாம்பரஞ்சந்தரம் — கௌஸ்துபதாரம்
கனசத்யபாமை — ருக்மணிதாரம்
பனகசயனம்பத்மநாபம் — பாடிவாயர்கோகுலவிவாசம்
அனவரதமபயகரவரதனே — ஸ்ரீகிருஷ்ணசாமி (கவ)

வடநாட்டுத்திருப்பதிகள் முற்றும்.

---



# குநாட்டுத்திருப்பதிகள். (௨)

திருப்பாற்கடல் க்ஷீராப்திநாதன்விஷயம். (௧௦௭)

பரசுராகம் ஏகதாளம்.

தாவணி.

சிந்தனைசெய்வாயே — க்ஷீராப்தியானைச்
சித்தங்கலங்காமல்நீயே — ஓமனமே

அந்தரங்கத்தெத்தனவன் — அரவணைமேலானவன்
சொந்தவமுதநீர்த்தருவன் — சொருசாவ...
பிரமருத்திரர்க்கவன் — பிரத்யக்ஷம...
அட்டாங்கவிமானமேலவன் — அனைசடைவ்மகளுடன்... (திக்)

நம்மையுந்தைவிடான் — நமனையும்வரச்செய்யான்
இம்மைமறுமைக்கவன் — இயல்பானவன்
இபரந்தினமவன் — நாமேற்றத்தருக்கவன்
சுபதந்தரவன் — எவர்க்குஞ்சொந்தமானவன் (திக்)

பொய்கைமுதலாழ்வார்கள் — புகழுமெழிற்பாடல்கள்
செய்கைபரிந்தவன் — செம்மலானவன்
திருப்பாற்கடலவன் — தேவதேவனானவன்
கிருஷ்ணசாமியுமவன் — திருவடியூகநாதனுமவன் (திக்)

---

பரமபதம் ஸ்ரீவைகுண்டம் பரமபதநாதன்விஷயம். (௧௦௮)

முகாரிராகம் ரூபகதாளம்.

கண்ணிகள்.

பரவாசுதேவன் — எப்போவருவாரோ
பாதநெரிசனைத் — தந்து
பரமபதசுகம் — எப்போதருவாரோ

அனந்தாங்கவிமானத்தில் — சேவைத்தாரோரோ
விரஜாநதி — தோய்ந்து
அயிரம்மதபுஷ்கரணி — நீர்த்தமருந்தேனோ

ஊவிளந்தருநிழல் — தென்முகம்வீற்றிருப்பான்
சோமசனைத் — தானைக்
கோரினேனைப்போமதக் — கிப்போதேகாத்திருப்பான்

பெரியபிராட்டியென் — முறையைச்சொல்வாளோ
வைகுண்ட — நாதனுக்கும்
பிரியமாயழைத்தவர் — தென்முன்னில்லாளோ

அனந்தகருடவிஷ்வக்சேனர் முதல்
நித்யசூரிகள் முக்தர்கள்
அவர்க்குப்பிரத்யக்ஷம்போ லெனக்காகவுஞ்சொல்வார்கள்
பொய்கையாழ்வார்முதல் பதின்மராழ்வார்கள்
பாடலைக்கொண்டா னவனைப்
போற்றினேனென்பாடலைக் கொளச்செய்வார்கள்
பரமபதநாதன்பதிகள் நூற்றெட்டின்மேல்
கிருஷ்ணசாமி தாசன்
பாடினேன்கீர்த்தனம் அவன்செயலிவிமேல்

திருநாட்டுத்திருப்பதிகள் முற்றும்.

அ) திருப்பதி பிரபாவக்கீர்த்தனைகள்

சம்பூர்ணம்.

---

# புராணஸ்தலங்கள் (ஆ)

## திருநாராயணபுரம் திருநாராயணன்விஷயம். (க)

கமாசுராகம் ஆதிதாளம்.

பல்லவி.

நாளுமல்தினமொருயுகமாகுதே திருநாராயணதேவனை

சரணங்கள்.

செல்லுடர்போற்றுந் திருநாராயணபுரஞ்
செல்வப்பிள்ளைநாயனந்த நல்லப்பிள்ளைகோவிந்தனைக் (காணு)
எதுகிரியாதவகிரி யாதவநாராயணனை
எதுகிரிநாய்ச்சியுடன்வரு மாநந்தவிமானச்சேவை (காணு)
கருடனுக்குப்பிரத்யக்ஷம் வயிரமுடிநிமித்தம்
கருணைமுகங்கிழக்குநிற்போனைக் காண்பேனோபிரத்யக்ஷங் (காணு)
திருக்கல்யாணிதீர்த்தமுத லஷ்ட திவ்யதீர்த்தங்களில்
தினந்தோறுந்தோய்ந்தவன் திருவடியைக்கண்குளிரக் (காணு)
வையகத்திலெங்குமில்லை வரதன்வைபோகப்பார்வை
வையாவனைப்பரமன் வயிரமுடியின்சேவை (காணு)
நாட்டைப்பழித்தவர் நுட்டைநிகர்த்தமேல்
கோட்டைநிவாசஸ்ரீ கோபாலரங்கேசனைக் (காணு)
இராஜமுடிதரித்த ராஜகிருஷ்ணசாமியின்
தேஜவடிவுந்திரு தாமரையடியிணையுங் (காணு)

---



## ஸ்ரீமுஷ்ணம் பூவராகப்பெருமாள்விஷயம். (உ)

காம்போதிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

பூச்சூட்டவாரும் பூவராகப்பெருமானே - உமக்குநான்
பூச்சூட்டவாருமாதிவராகப்பெருமானே.

அனுபல்லவி.

பூச்சூட்டவாருமுல்லை யிருவாட்சிசெண்பகம்
புன்னைமலரோடெல்லா மல்லிகையசோகமெனும் (பூச்)

சரணங்கள்.

சம்புதிவில்மேற்குமுகம் வீற்றிருக்குமையனேமுன்
சகசமகவத்தநாரணற்குப் பிரத்யக்ஷமானோய்
அம்புஜவல்லிநாய்ச்சியுடன் வாமநவிமானமேறி
யடியேனுல்நித்யபுஷ் காணிதீர்த்தமாடவருவீர் (பூச்)
காப்பிட்டுமீராட்டி கஸ்தூரிதிலதமிட்டு
கந்தம்புனுகுசவ்வாது கலந்துநும்மேற்பூசக்
கூப்பிட்டேன்மலர்கொண்டு கோடிசரணஞ்செய்தேன்
குற்றங்குறையென்னுதிர் சித்தத்திலொன்றும்வையாதிர் (பூச்)
சம்பங்கிதுளவமுடன் சாத்துமுறைசெய்திடுவேன்
சாமிநும்மாராதனையைச் சற்றேனுமறந்திடேன்
எம்பங்கிலிருமுமக் கடிசிலமுதுடனே
யெற்றவடைக்காபமுதை யிப்பொழுதேயீந்திடுவேன் (பூச்)
பாரிஜாதமலர்கொண்டு ஸ்ரீமுஷ்ணநகரிலுன்
பதத்திலர்ச்சனைசெய்து பரிசுபெறக்
கோரினேன்கிருஷ்ணசாமி தாசனையாளுவீரிப்போ
கோவிந்தாதாபதிப மங்களார்த்தியைத்தருவேன் (பூச்)

---

## பிருந்தாவனம் ஸ்ரீராதாவல்லபன்விஷயம். (௩)

கேதாரகௌளராகம் ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஸ்ரீராதாவல்லபன் திருவிளையாடல்செய்யுஞ்
சிங்காரவனமே பிருந்தாவனமே (க)
கிழக்குமுகமாய்நின்று வஸ்திராபஹாரதீர்த்தத்தில்
கிரீடைவிளையாடும்வனமே பிருந்தாவனமே
பாகசாசனன்புஷ்ப மாரிபொழியச்செய்யும்
பாவனவனமே பிருந்தாவனமே (௨)
ஆயன்ராதாதேவியுட னனுதினம்விளையாடும்
அற்புதவனமே பிருந்தாவனமே (௩)

தவமாமாதவருவமாய் தவஞ்செய்யத்
தழைத்தோங்கும்வனமே பிருந்தாவனமே (௫)
சுந்தரிதேவி பூதேவிவாசஞ்செய்யுந்
தளபவனமே பிருந்தாவனமே (௬)
ஆதாரமாதவன் ராதாதேவிக்குப்பிரத்யக்ஷ
மானவனமே பிருந்தாவனமே (௭)
சுகபிகமருங்குகள் சூழ்ந்தவினையாடுஞ்
சோபனவனமே பிருந்தாவனமே (௮)
பாலகோபாலனுடன் பதினாயிரங்கோபஸ்திரீகள்
பாலகிரீடைசெய்யும்வனமே பிருந்தாவனமே (௯)
நவமோகனகிருஷ்ணசாமி நாதனாட்டியஞ்செய்யும்
களிநாட்டிவனமே பிருந்தாவனமே (௰)

## பாபவிநாசம் பாபவிநாசப்பெருமாள்விஷயம். (௪)

யமுனாகல்யாணிராகம் ரூபகதாளம்.

பல்லவி.

பாபவிநாசப்பெருமாள் நம்பாவநாசஞ்செய்யவருவாள் மனமே

அனுபல்லவி.

பாபவிநாசத்தில் பக்தாதீனனப்பா
பாருமென்வார்த்தை யொருபோதுந்தப்பா (பாப)

சரணங்கள்.

ஜெகத்துமுகின்ற கோலம்
கேளும்பங்கயவல்லிக் கனுகூலம்
வழக்குச்செய்வதென் ஜாலம்
வாழ்த்திப்பதம்பெற வாயிக்காலம் (பாப)
ஐயங்கொண்ட சொழுனுக்காய்
அன்றுபிரத்யக்ஷமானனே செருக்காய்
ஐயமுனக்கென் நறுக்காய்
ஐயன்பாதந்துதித்திரு கருக்காய் (பாப)
புண்டரீகதீர்த்தங் கண்டேன்
புகழ்ந்துகிருஷ்ணசாமிதாச னுண்டேன்
பண்டுபவங்களைத் துண்டேன்
பாருநரகப்பிராப்தியையு மண்டேன் (பாப)

## ராஜமன்னார்கோயில் ராஜகோபாலன்விஷயம். (௫)

சங்கராபரணராகம் அடதாளசாப்பு.

பல்லவி.

ராஜமன்னாருகோவி லெங்கள்ராஜகோபாலனே



அனுபல்லவி.

ராஜராஜசுரபூஜிதஸ்ரீரங்க ராஜவேணுகானலோலனே (ராஜ)

சரணங்கள்.

அருளாளனே வாராய் - செங்கமலவலி
யளையுடன் சேவைதாராய்
பொருளைத்தாரா யென்மிடியைத்தீராய்தன்பின்
பொன்னடியினிற் சேராய் (ராஜ)
சம்புகாரண்யக்ஷேத்ர லோலம் - சேவைதர
சாமிஇழக்குமுகின்ற கோலம்
நம்புங்கோபிலகோ பிரளயமகாமுனிக்கு
நாதனேபிரத்யக்ஷ காலம் (ராஜ)
அரித்ராநதி புஷ்கரணியாதி - யடியேனுக்
களிப்பதேமிகவு நீதி
தரித்திராங்கஸ்வயம்பு விமானமேல்வந்த
சதாகாலங்காப்பதன் பிரக்யாதி (ராஜ)
நாரதவந்தித பாதா - நாராயணா
பார்த்தசாரதி நாதா
கோரதுஷ்டந்திராதா சாரவந்தமாகாதா
நேரமிப்போதே நீங்காதா (ராஜ)
வந்தனம்வாசு தேவா - ரகுவர
நந்தனமகானு பாவா
அந்தரகிருஷ்ணசாமிவா வெந்தன்வரமுதவா
தெந்தகாரண மாதவா (ராஜ)

## ஸ்ரீபெரும்பூதூர் ஆதிகேசவப்பெருமாள்விஷயம். (௬)

செஞ்சுருட்டிராகம் மத்யஆதிதாளம்.

ஜாவளி.

போபோ நீமனமே ஸ்ரீபெரும்பூதூர்
சோதிவடிவான ஆதிகேசவனை
நீதியாகத்தேடி (போ)
கேசவாசாரியர்க்குந் தேசவெதிராஜர்க்கு
நேசனருள்தேடி (போ)
எதிராஜவல்லியுடன் மதிமுகம்கிழக்காய்கின்ற
அதிரூபனைத்தேடி (போ)
போதனைரக்ஷித்த பூதபுரியான்திருப்
பாதமதைத்தேடி (போ)

வருடங்கள்தோறுந்தேடிவருஞ்செனத்தைக்கொண்டாடி
திருஞ்சேவையைநாடி. (பேர)
க்ஷேமமாய்கிருஷ்ணசாமி ராமானுஜபுஷ்கரணி
க்ஷேமதீர்த்தம்பெற (பேர)

புராணஸ்தலங்கள் முற்றும்.

---

# இன்னூலாசிரியர் அபிமானஸ்தலம்,

## தென்திருப்பதிகுமளம் ஸ்ரீநிவாஸன்விஷயம். (க)

ஆனந்தபைரவிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

ஸ்ரீநிவாசாநீயெனையாளாயோ ஸ்ரீதேவிகேசா
மாநிதகுண ரங்கேசனே

அநுபல்லவி.

தேனினமுறலுங்குமுளத் தென்திருப்பநிவாசா
தேவதேவர்க்குமீசா வென்றேசிகருவேங்கடேசா

சரணங்கள்.

ஆனந்தபரித மாகுதே - யுன்பதத்தியான
பானத்தேவாமிர்த மாகுதே
கானலோலனேமுகுந்தா காப்பாயென்றனைக்கோவிந்தா
மானாநந்தனார்த்வமந்தா மாதவனேஸ்ரீவைகுந்தா
சென்மசாபல மாச்சுதே-யுன்றதியாலென்
சென்மமெனைவிட்டுப் போச்சுதே
என்மனமுனையல்லாது எத்தேவனாயுஞ்சொல்லாது
முன்செய்தவினையில்லாது முழுமனதையதுவெல்லாது
வந்தென்கவலை தீராயோ - சுந்தரமூர்த்தி
நந்தகிருஷ்ணசாமி வாராயோ
எந்தவேளையுமுன்றனைச் சொந்தமாய்நினைந்தேன்றேவா
இந்தவேளைநீயென்முன்வா வென்றனையிப்போதேகாவா

---

பில்லாரிராகம் அடதாளசாப்பு.

ஜெயஜெயராமனே ஜெயரங்கதாமனே
ஜெயஜெயமாயிர நாமனே
ஜெயநாராயணநீவா ஜெயபாராயணதேவா
ஜெயஜெயமஹாநு பாவா (



ஜெயஜெயரகுவீரா ஜெயராஜசேகரா
ஜெயஜெயதுஷ்ட சம்ஹாரா (ஜெய)
ஜெயசங்குசக்ரதரா ஜெயலட்சுமிமனோஹரா
ஜெயஜெயதுளப ஹாரா (ஜெய)
ஜெயபக்தருல்லாசா ஜெயதிருப்பதிவாசா
ஜெயகிருஷ்ணசாமிஹ்ருதய நேசா (ஜெய)

## எச்சரிக்கைகள்.

சீரார்திருமாலுனை செய்யார்வனாதிருழ்
வாரார்மதிலரங்கத் தெம்பிரானேயெச்சரிக்கை (க)
பாரோர்புகழ்பரனே பஞ்சாயுதக்கரதானே
நேராயுனையத்தேனருள் நேராயெச்சரிக்கை (உ)
சூராரகுவீராசகுமாரா கெம்பீரா
பேராயிரம்படைத்த பெருமானேயெச்சரிக்கை (ங)
சீலாவாதிமூலாசு சீலாகோபாலா
மாலாகியபரனேமண வாளாயெச்சரிக்கை (ச)
பரம்பதவாசனே பக்தாதினவுல்லாசனே
சரமதசைதனிற்காத்திடுஞ் சாமியெச்சரிக்கை (ரு)
கேசவாவினிகேளுங் கிருஷ்ணசாமிதாசனையாளும்
வாசமாய்மனதில்நாளும் வந்திருப்பாயெச்சரிக்கை (சா)

## லாலி.

சஹானாராகம் ஆதிதாளம்.

லாலிஸ்ரீரங்கனே லாலிஸ்ரீரங்கனே
லாலிசுபாங்கனே லாலிவேதாங்கனே
லாலிசுசீலனே லாலிநந்தபாலனே
லாலிகானலோலனே லாலிகோபாலனே (லாலி)
லாலிஸ்ரீராமனே லாலிஜெகதபிராமனே
லாலிசஹஸ்ரநாமனே லாலிபரந்தாமனே (லாலி)
லாலியானந்தனே லாலிகோவிந்தனே
லாலிதசரதந்தனே லாலிமுகுந்தனே (லாலி)
லாலிபரவாசுதேவவா லாலிகோகுலமாதவா
லாலிரவிகுலராகவா லாலியதுகுலயாதவா (லாலி)
லாலிஸ்ரீகேசவா லாலிலக்ஷ்மிநிவாசவா
லாலிகிருஷ்ணசாமிவா லாலிகண்ணுகாக்கவா (லாலி)

## ஊசல்.

ஆனந்தபைரவிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

ஊசலாடும் ஸ்ரீரங்கனே ஊசலின்மீதே
ஊசலாடும் ஸ்ரீரங்கனே

அனுபல்லவி.

வாசலாடும் ஸ்ரீரங்க — ராஜவீடுடனேகூடி
ஆசையிட்டிருப்படி — பறைந்தேன்வைத்தனங்கோடி (வாச)

சரணங்கள்.

மாலைக்கத்தாலிழைத்த — மாதகத்தாலமைத்த
ஜனிப்பொன்றுல்முடித்த — வலங்காரஞ்சல்மீதே (வாச)
பூசாரர்வேதகோஷ்டிசெய்ய — புஷ்பவருஷங்கள்பெய்ய
வாசுதேவனையென்னை — வர்த்தென்கவலைபக்கொய்ய (வாச)
இருபுறங்களிலிச — வெச்சரிக்கைகள்முன்பேச
குருமலர்பரிமளம்வீச — கோவிந்தாசீயுமுல்லாச (வாச)
தாசர்கள்சங்கீதம்பாட — தாளசதிமத்தளங்கூட
வாசவன்முதலோர்தேட — வானவர்மிகக்கொண்டாட (வாச)
கருடஞ்சேனையன்கூட்ட — கனமாதர்ஐய்மிகளாட்ட
கிருஷ்ணசாமிதாசன்கேட்ட — கேசவர்பதமதனைக்காட்ட (வாச)

## மங்களம்.

கமாஸ்ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

மங்களஞ்சுப மங்களமங்களமே கர்ப்பூரவார்த்திஜெய

அனுபல்லவி.

மங்களங்காவேரிவாச — ரங்கரங்கநாயகற்கும்
மங்களங்கல்யாணதிலக — ரங்கரங்கநாயகிக்கும் (மங்)

சரணங்கள்.

மங்களம்பரமபத — பரமபதநாதருக்கும்
மங்களம்பரமபத — பரமபதநாயகிக்கும் (மங்)
மங்களம்பஞ்சாயுத — ராவாகுபவத்திற்கும்
மங்களங்கருடாழ்வார் — ஜுஞ்சனேயன்பதத்திற்கும் (மங்)
மங்களமாழ்வார்கள் — மலர்த்திருப்பதங்களுக்கும்
மங்களமவர்வாய்மலர்ந்த — மறைநாலாயிரத்திற்கும் (மங்)
மங்களங்குருபரம்பரை — யாசார்யமார்களுக்கும்
மங்களமனந்தரான — ராமாநுஜஜீயருக்கும் (மங்)
மங்களம்சுவிஷ்டர்களு — மஹாசாத்திரங்களுக்கும்
மங்களம்விசிஷ்டாத்வைத — சித்தனவிலேவிசேட்டும் (மங்)
மங்களங்கிருஷ்ணசாமி — தாசதாசர்களுக்கும்
மங்களமிதைக்கேட்போர் — பஜனைசெய்வோர்களுக்கும் (மங்)

## வாழி.

சங்கராபரணராகம் ரூபகதாளம்.

பல்லவி.

வாழிரங்கரோ கீழி — காலம்வாழியே

அனுபல்லவி.

வாழிரங்கநாயகி திவ — மங்கையும்வாழியே (வாழி)



சரணங்கள்.

வாழிபஞ்சாயுதசர் — வாகும்வாழியே
வாழிசெஞ்சரோருகபதந் — செழிக்கவாழியே (வாழி)
வாழிகருடஞ்சனேயன் — கழல்கள்வாழியே
வாழியருடைஞ்சக்கதனில் — வருஷிக்கவாழியே (வாழி)
வாழிநாலாயிரமறை — நாளும்வாழியே
வாழிமேலாமாழ்வார்மென் — மேனும்வாழியே (வாழி)
வாழியஷ்டாட்சரமந்திரமனு — தினமும்வாழியே
வாழியதைவெளியிட்டபெத — ராஜன்வாழியே (வாழி)
வாழியனந்தனெனும்ராமானுஜ — ஜீயர்வாழியே
வாழிதினந்திதிக்குத்திருக் — கோஷ்டிகள்வாழியே (வாழி)
வாழியிருப்போடிதனைக் — கேட்போர்வாழியே
வாழிகிருஷ்ணசாமிதச — தாசர்கள்வாழியே (வாழி)

ஆழ்வாரெம்பெருமானார்ஜீயர்திருவடிகளேசரணம்.

## மேற்படி தாசரவர்களாற்பாடிய

# தனிக்கீர்த்தனைகள்.

முகாரிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

அனவாதமுந்தி யவர்மேதுத்தாயே அன்னையாகுமெமக்கு.

அனுபல்லவி.

அனந்தசயன்ஸ்ரீ ஹரிகோவிந்தனே — அப்பனுருமக்கு (அன)

சரணங்கள்.

பர்வாதேவனைப் பணிந்துதொழும்பக்தர்கள் — பந்துவாருமக்கு
மாவாதிருதிரு வேங்கடமுடையே — மாளிகையாருமெமக்கு (அன)
உடையவர்வெளியிட்ட திருமந்திரத்வயமந்திரமுகக்குத்திரமக்கு
கண்டயாகளஸ்ரீபாசரமசலோகமே — காதுக்கின்பமெமக்கு (அன)
திருவாய்மொழியெனுந்திவ்யப்பிரபந்தமே நாமுஞ்சேவித்தலெமக்கு
மருவார்துளவமேமலர்தல்வியாதிக்கு — மருந்தாருமெமக்கு (அன)
திருமலைஸ்ரீகூர்ணதுவாரகநாமமே — திவ்யாபரணமெமக்கு
திருவனந்தராமானுஜஜீயரே — தேசிகராருமெமக்கு (அன)
பலதாசகிருஷ்ணசாமிதாசர்களுடன் — பரமேந்தாதிமெமக்கு
நலமுடனவிராஜாகதிசேரயத்தப்புரம் — நாயகதிமெமக்கு (அன)

அரிகாம்போதிராகம் சாபுதாளம்.

ஜாவளி.

மனதேபஜிபாரத — சாரதியை (௨)
சாரதிதேவை — பாரதகோவை (௨)

அஞ்சலிசெய்திடுவஞ்சனைகொய்திடு மிஞ்சிடுதஞ்சமாய்சஞ்சித வோரை (ஓ)
அந்தனைநடுமத்தனுமாகாய் எத்தனைப் படுநீசத்தனுமாவாய் (ஓ)
சக்கரதரனை அக்கரையுடனே நக்கனை ரக்ஷித்தபக்ஷவ ரானவனை (ஓ)
காலம்போகுதேசாலஞ்செய்யாதே நீலமேக பாலகிருஷ்ணசாமியை (ஓ)

---

## முகாரிராகம் ஆதிதாளம்.

### பல்லவி.

உன்னைநம்பியமே யொருவரையாசித்தது
அனேகபக்தியமே யிதென்னமோ

### அநுபல்லவி.

என்னைநீகைவிட வாமோகோவிந்தா
வென்னலக்குற்றமதென் கண்டாய்முகுந்தா (உன்)

### சரணங்கள்.

அனுதாரக்ஷகவனுதனென்னை முனுதானைசெயொனுதோஷிக்குனை
வினுவொருவரைகனுவினுமறிய வொனுதமதருநனுநீதியென (உன்)

அந்தர்களில்மிகுவநீதனுயெமென் மதிகலைந்துசக்கதிநீவெயிட்டப்
பதியெனவுமுனைநம்பியவுமுன்சதிசெய்யாதேயெனக்குகிருபைகிருஷ்ணா (உ)

---

## சங்கராபரணராகம் அடதாளம்.

### பல்லவி.

வந்தெனையாளப்போகாதா வைகுந்தநாதா

### அநுபல்லவி.

வந்தெனையாளப்போகாதா சந்தாலக்ஷ்மிசமேதா (வந்)

### சரணங்கள்.

ராமரகுவீரா ராகவதீரா
அணியரா வில்சயனா யெழில்கந்தரா புயமந்தரா
வருள்தாரா யென்முனவாரா இதென்சார சாந்தந்தாமா (வந்)

பங்கபவாசா பக்தருள்நேசா
சரசசா லோகசா மீயசா ரூபசா
புச்யசா பல்யசா சூர்யசா மார்த்தியசாமி (வந்)

கிருஷ்ணசாமிதா சன்சொல்கேளாதா
பாம்பதவிதா துளவணியைதாவணியபாதத்தாமரையதனைதா
பலவதா யசாசாமதா யெங்கெங்குந்தா ளுகியனேசதா (வந்)

---

## சகானாராகம் ரூபகதாளம்.

### பல்லவி.

அமிர்தபானமே ஹரி கோவிந்தநாமமே மனமே



### அநுபல்லவி.

சுகிர்தஞ்செய்தவர்க் கிதுகிடைக்குமே
சோகாப்திபிறவித்தனைத் தடைக்குமே (அமி)

### சரணங்கள்.

அஷ்டமதங்களை யறுகவொட்டாது
வழியாதபோர்களுக் கிதவொட்டாது (அமி)

இகபரத்திலுஞ் செளக்கியங்கொடுக்கு
மேமனைக்கிட்ட வாராமலேதடுக்கும் (அமி)

ஆழ்வாராதிகளா னந்தமாயுண்டது
வருமையத்தோரை யடிமையாய்க்கொண்டது (அமி)

அருமறையாவின் மடிசுரந்தது
ஹரிகிருஷ்ணதாசனுக் கரந்துண்ணவந்தது (அமி)

---

## மோஹனராகம் ஆதிதாளம்.

### பல்லவி.

அமிர்தகுண கண்ணன் வந்தான் அலங்காரமாய்.

### சரணங்கள்.

தங்கவஸ்திரமிடை தங்கிநளதளென்ன
அங்கதிலதமுகஞ் சொருசாய்ப்பளபளென்ன (அலங்)

கோபிகாஸ்திரிகளைதேடி கோவிந்தனவளைக்கூடி
தாமதர்களைநாடி தன்னருளைத்தானேபாடி (அலங்)

காலில்சதங்கைகொஞ்ச கனகிரீடையிலேமிஞ்ச
பாலியென்மாதர்கெஞ்ச பாலித்துபக்கவாஞ்ச (அலங்)

பிருந்தாவனகானலோலன் பிரபலதேவாதிமூலன்
அருந்தவயசோதைபாலன் அய்யன்கிருஷ்ணசாமிசீலன் (அலங்)

---

## எதுகுலகாம்போதி சாபுதாளம்.

### பல்லவி.

மங்களம் ஸ்ரீரங்கநாயகா ஸ்ரீரங்கநாயகி.

### சரணங்கள்.

தங்கவஸ்திரமிலங்கு ஆயனே - எழில்
சங்குசக்ரம் தங்குமப யஸ்தநேயனே
அங்கசனை யளித்தசெங் கமலபாத
விமலபோத நாதநாத ஹரிகருட
துரங்க சுபாங்க மாயனே (மங்)

சந்திரசேகரன் பணிரங்கேசனே - அருள்
சந்திரபுஷ்கரணிகா வேரிவாசனே
சந்தனகஸ்தூரிவாச மெங்கும்வீசும்
விமலநேச நின்றுசதாச கிருஷ்ணசாமி
தாசன்மன திட வுலாசனே (மங்)

முற்றும்.

# நூற்றெட்டுத்திருப்பதிப்பிரபந்தகீர்த்தனைகள்.

## இதற்காகக்கையொப்பஞ்செய்த கனவான்களின் பெயர்களின்

# அட்டவணை.

---

| | ரூ. |
|---|---|
| இராணிப்பேட்டை போலீஸ் இனிஸ்பெக்டர் ப. கிருஷ்ணசாமிநாயுடு | ௪௦ |
| சென்னைபுதுப்பேட்டைகமிசேரியட்மாநேஜர் வ. கிருஷ்ணசாமிஐயர். | ௧௦ |
| சென்னை கோமளபுரம் சொ. வேம்புலிநாயகர் ... ... ... | ௫௦ |
| சென்னை கன்ட்ராக்டர் கா. கோபாலசாமிநாயகர் ... ... ... | ௪௦ |
| மதுரை திரசர் ஷ. குப்புசாமிபிள்ளை ... ... ... | ௭ |
| திரிசிரபுரம் உறையூர் பென்ஷன்சுபேதார் கலிவிராயப்பிள்ளை ... ... | ௫ |
| ஜோலார்பேட்டை பொன்னேரி மிட்டாதார் முருக்கமாதவமுனிசாமிசெட்டியார். | ௫ |
| கோமளபுரம் டிராஸ்போர்டாபீஸ் எட்டினர்க் கோ. துளசிங்கநாயகர். | ௫ |
| ,, ரங்கூன் கன்ட்ராக்டர் ம. வெங்கடசாமிநாயகர் ... ... | ௫ |
| ஆர்க்காடு தோப்புக்கானு அரிசிமண்டி முனியப்பநாயகர் ... | ௪ |
| மதுரை-கக-வது பட்டாளம் சுபேதார்மேஜர் முத்துவீரப்பிள்ளை ... | ௪ |
| இராணிப்பேட்டை இஞ்சினீராபீஸ் பென்ஷன்மாநேஜர் கோபால கிருஷ்ணமுதலியார். | ௩ |
| சானாபென்ஷன் திரசர் எதிராஜமுதலியார் ... ... | ௩ |
| இராணிப்பேட்டை இஞ்சினீர் சப்டிவிஜன் ரைட்டர் பெருமாள்நாயுடு | ௩ |
| ,, கலால்மானேஜர் இரசரத்தினமுதலியார் ... ... | ௨ |
| ,, ஜவுளிக்கடை ஆ. வேணுகோபாலசெட்டியார் ... ... | ௨ |

வேலூர்.

| | |
|---|---|
| தோட்டப்பாளையம் மண்டி சுப்பராயமுதலியார் ... ... | ௨ |
| காட்டுப்பாடி உப்புகிடங்கு சதாசிவராவ் ... ... | ௨ |
| கஸ்பாமேட்டுத்தெரு பென்ஷன்சுபேதார் சர்தார்பஹதூர் கிருஷ்ணசாமிநாயகர். | ௨ |
| தோட்டப்பாளையம் ப. வேங்கடாசலமுதலியார் ... ... | ௨ |
| ,, மண்டி கிருஷ்ணசாமிமுதலியார் ... ... | |
| கொட்டிக்காரத்தெரு மண்டி காதமுனிநாயுடு ... ... | |
| கஉ-வது பட்டாளம் சுபேதார் சுப்பையநாயகர் ... ... | |
| கஉ-வது பட்டாளம் சுபேதார் வெங்கடசாமிநாயுடு ... ... | |
| ஸ்ரீவில்லிபுத்தூர் பென்ஷன் ஜமேதார் அனகிரிசாமிநாயுடு ... | |
| திரிசிரபுரம் உறையூர் சி. வீரப்பிள்ளை ... ... ... | ௨ |
| சலாஜாபேட்டை பட்டுநூல்மளிகை கிருஷ்ணசாமிசெட்டியார் ... | ௨ |
| ,, மளிகை இல்லையநாயுடு ... ... ... | ௧ |
| ,, நாக்கடை சீனிவாசநாயகர் ... ... ... | ௧ |
| ,, பிராக்டிஷரப் திருவெங்கடநாயகர் ... ... ... | ௧ |
| ,, இல்லைமண்டி பார்த்தசாரதிமுதலியார் ... ... | ௧ |
| ஜாகை பென்ஷன்சுபேதார் வேங்கடாசலமுதலியார் ... ... | ௧ |
| சென்னை சப்ரிஜிஸ்டிரார் பாலசுந்தரமுதலியார் ... ... | ௧ |
| கோமளபுரம் குலசேகராழ்வார்சபை மதுராகவிநாயகர் ... ... | ௧ |
| கோமளபுரம் சே. செல்வப்பெருமாள்தாசர் ... ... ... | ௧ |
| பெரியாங்குப்பம் மணியம் செங்கல்ராயமுதலியார் ... ... | ௧ |
| வேலூர் தேசாயி பெருமாள்செட்டியார் ... ... ... | ௧ |
| தோட்டப்பாளையம் கிராமமுனிசிப் கோவிந்தசெட்டியார் ... ... | ௧ |
| ,, மு. முனிசாமிநாயுடு ... ... ... | ௧ |
| ,, செகப்பு நாராயணசாமிசெட்டியார் ... ... | ௧ |
| ,, திருவேங்கடமுதலியார் ... ... ... | ௧ |
| ,, ஜவளி அருணகிரிமுதலியார் ... ... ... | ௧ |
| ,, முத்தியாலுசெட்டியார் ... ... ... | ௧ |
| ,, தாகு முனிசாமிநாயகர் ... ... ... | ௧ |
| முருகந்தம்பூண்டி மணியம் கிராமமுனிசிப் சுப்பிரமணியமுதலியார் | ௧ |
| ,, அப்புசெட்டியார் ... ... ... | ௧ |
| ,, இல்லைக்கடை ரங்கநாயப்பிள்ளை ... ... | ௧ |
| ,, காய்கடை முத்துகுமரப்பிள்ளை ... ... | ௧ |
| பேட்டைத்தெரு இல்லைகடை பரசுராமப்பிள்ளை ... ... | ௧ |
| ,, சாமிப்பிள்ளை ... ... ... | ௧ |
| ,, முருகேசப்பிள்ளை ... ... ... | ௧ |
| ,, காய்கடை பெரியகந்தசாமிமுதலியார் ... ... | ௧ |
| ,, பொடிகடை பெருமாள்முதலியார் ... ... | ௧ |
| குடியாத்தம் வே. சீனமுதலியார் ... ... ... | ௧ |
| காங்கேயநல்லூர் கிராமமுனிசிப் வீராசாமிமுதலியார் ... ... | ௧ |
| காட்டுப்பாடி உப்புமண்டி கோவிந்தமுதலியார் ... ... | ௧ |
| கோட்டைத்தெரு ஸ்டாம்பாபீஸ் ரைட்டர் கா. பாலகிருஷ்ணமுதலியார். | ௧ |
| ,, மளிகை கி. செகநாதமுதலியார் ... ... ... | ௧ |
| வேலூர்மண்டி ஸ்ரீ. சுந்தரச்செட்டியார் ... ... ... | ௧ |

வேலூர் எல்-என்-நாராயணசாமிமுதலியார். திரசர் செ. ஜெயில்
சைதாப்பேட்டை நாராயணசாமிநாயகர். ... ... ... ... ...
காயிதப்பட்டடை வீரபத்திரப்பிள்ளை.... ... ... ... ... ...
ஜோலார்பேட்டை நாராயணசாமிசெட்டியார். ... ... ... ...
திருப்பத்தூர் ஸ்டேஷன்மேஸ்டர் நாராயணசாமிப்பிள்ளை. ...
,, கன்ருக்டர் முத்தப்பநாயகர். ... ... ... ... ...
,, தச்சவேலை கிருஷ்ணப்பநாயகர் ... ... ... ...
மதுரை சிக்காரத்தோப்பு அளகிரிசாமிநாயுடு.... ... ... ... ...
சிக்காரத்தோப்பு பென்ஷன் அவல்தார் பெருமாள்நாயுடு ... ...
ஸ்ரீவில்லிபுத்தூர் பென்ஷன் சிப்பாய் பரசுராமநாயுடு. ... ... ...
கஎ - வது பட்டாளம் சுபேதார் இராமசாமிநாயுடு. ... ... ...
,, ,, ,, இரங்கசாமிநாயுடு. ... ...
,, ,, ஜமேதார் முத்துக்குமரப்பிள்ளை ... ...
,, ,, ,, வேங்கடசாமிநாயுடு. ... ... ...
,, ,, அவல்தார் மேஜர் சின்னசாமிப்பிள்ளை ...
,, ,, அவல்தார் இராமசாமிநாயுடு. ... ... ...
,, ,, ,, குப்புசாமி அவல்தார் ... ...
சென்னை தேனும்பேட்டை இராகவப்பிள்ளை ... ... ... ... ...
திருவல்லிக்கேணி பெரியாழ்வார்சபை பார்த்தசாரதிநாயகர். ...
கோமளபுரம் ஸ்ராங்கு பெரியதம்பிநாயகர். ... ... ... ...
ஆயிரம்விளக்கு புட்டின்பேகத்தெருவு வீ. குப்புசாமிநாயகர் ...
பைராசங்கபாதர்தெருவு சி-எ-கிருஷ்ணசாமிநாயகர் ... ...

முற்றும்.